+ 2 பொருளியல்

**இரண்டு மதிப்பெண் வினா– விடைகள்**

**I. பேரியல் பொருளியல்**

**1. பேரியல் பொருளியலின் இலக்கணம் தருக.**

- ஒரு முழுப் பொருளாதாரத்தையும் அதன் போக்கு, இயக்கங்களையும் படிக்கின்ற இயல்.
- முழு பொருளாதாரத்தையும் ஆய்வு செய்யும் இயல். வருவாய் கோட்பாடாகும்.

**2. பணவீக்கம் என்ற பதத்தின் பொருள் யாது?**

- தொடர்ச்சியாக பொது விலை மட்டம் அதிகரித்தல்.
- குறைந்த அளவு பண்டங்களை அதிக அளவு பணம் துரத்தும் நிலை – கோல்பர்ன்.
- வாங்கும் சக்திக்கான அளவின் அசாதாரண குறைவு நிலை – கிரிகெரி.

**3. பொருளாதாரம் என்பதன் பொருள் யாது?**

- மக்கள் தங்கள் பிழைப்பை அமைத்துக் கொள்ளும் முறை – ஏ.ஜெ.பிரவுன்.

**4. வளர்ச்சி நிலை அடிப்படையில் பொருளாதாரங்களை வகைப்படுத்துக.**

- வளர்ந்த பொருளாதாரம். • வளராத(முன்னேராத) பொருளாதாரம். • வளரும் பொருளாதாரம்.

**5. முதலாளித்துவம் என்றால் என்ன?**

- உற்பத்தி நடவடிக்கைகள் தனியார் வசம் இருக்கும். • அரசின் பங்கு குறைவு சந்தையின் பங்கு அதிகம்.
- நிறுவனங்களின் முதன்மை நோக்கம் இலாபம் ஈட்டுதல்.

**6. பொருளாதார மாதிரியின் இலக்கணம் தருக.**

- ஒரு பொருளாதார அமைப்பு எவ்விதம் இயங்குகிறது என்பதை விளக்குவதே பொருளாதார மாதிரி.

**7. வருமானத்தின் வட்ட ஓட்டம் – வரையறு.**

- குடும்பங்கள், நிறுவனங்கள், அரசு மற்றும் நாடுகளுக்கு இடையே வருமானம் (பணம்), பண்டம், பணிகள், காரணிகளின் ஓட்டத்தை விளக்குவது.

***II. தேசிய வருவாய்***

**1. தேசிய வருவாய் (GNP) கணக்கிடும் சூத்திரத்தை எழுதுக.**

- GNP = C + I + G + (X–M) + (R–P) • GNP = C + I + G + (X–M)
- $GNP_{MP} = GDP_{MP} +$ வெளி நாடுகளில் ஈட்டிய நிகர காரணி வருமானம்.

**2. NNP க்கும் NDP க்கும் உள்ள வேறுபாடு யாது?**

| நிகர உள் நாட்டு உற்பத்தி (NDP) | நிகர நாட்டு உற்பத்தி (NNP) |
|---|---|
| • $NDP = GDP -$ தேய்மானம். | • $NNP = GNP -$ தேய்மானம். |
| • $NDP = NNP -$ நிகரகாரணி வருமானம் $(X - M)$ | • $NNP = NDP +$ நிகரகாரணி வருமானம் $(X - M)$ |
| • உற்பத்தியில் நாட்டின் எல்லை கருத்தில் கொள்ளப்படும். | • உற்பத்தியில் நாட்டின் எல்லை கருத்தில் கொள்ளப்படாது. |

**3. தேசிய வருவாய் கணக்கீட்டில் சுயநுகர்வு எவ்வாறு சிரமத்தை தருகிறது.**

- சுய நுகர்வுக்காக ஒதுக்கிய உற்பத்தி நாட்டு வருமானத்தில் சேர்க்கப்பட வேண்டும்.
- சுய நுகர்வு நாட்டு வருமானத்தில் சேர்க்கப்பட்டதா என்பதை கண்டறிவது கடினம்.
- சுய நுகர்வின் அளவையும், மதிப்பையும் மதிப்பிடுவது கடினம்.

**4. GNP க்கும் NNP க்கும் உள்ள தொடர்பை எழுதுக.**

| நிகர நாட்டு உற்பத்தி (NNP) | மொத்த நாட்டு உற்பத்தி (GNP) |
|---|---|
| • $NNP = NDP +$ நிகர காரணி வருமானம் (X – M). | • $GNP = GDP +$ நிகர காரணி வருமானம் (X – M). |
| • ஒரு நாட்டின் ஓர் ஆண்டு உற்பத்தியின் நிகர மதிப்பு. | • ஒரு நாட்டின் ஓர் ஆண்டு உற்பத்தியின் மொத்த மதிப்பு. |
| • $NNP = GNP -$ தேய்மானம். | • ***GNP*** யில் தேய்மானம் சேர்ந்தே இருக்கும். |
| • நிகர காரணி வருமானம் (X–M) இடம்பெறும். | • நிகர காரணி வருமானம் (X–M) இடம்பெறும். |

**5. தனிநபர் வருமானம் என்றால் என்ன?**

- ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு தனி நபருக்கும் பல வழிகளில் இருந்து கிடைக்கும் மொத்த வருமானம்.

**6. GDP குறைப்பான் இலக்கணம் தருக.**

- GDP யில் குறிப்பிடப்பட்டுள்ள பண்டங்கள், பணிகளின் விலை மாற்ற குறியீட்டெண்.
- GDP குறைப்பான் $= \frac{\text{பணமதிப்பு } GDP}{\text{உண்மை மதிப்பு } GDP} \times 100$

**7. தேசிய வருவாய் இலக்கணம் தருக.**

- ஒரு நாட்டின் உழைப்பும், முதலும் அந்த நாட்டின் இயற்கை வளங்களுடன் கூடி ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யும் பண்டங்கள், பணிகளின் மொத்த நிகர மதிப்பு – **மார்ஷல்.**

***III. வேலைவாய்ப்பு மற்றும் வருமான கோட்பாடுகள்***

**1. முழு வேலை வாய்ப்பு வறையறு.**

- விருப்பமில்லா வேலையின்மை இல்லாமல் இருப்பதே முழு வேலைவாய்ப்பு – **கீன்ஸ்.**
- கூலியும் விலையும் மாறிமாறி அதிகரிக்கும் வேலை நிலையே முழு வேலைநிலை – லர்னர்.
- நடப்பு கூலி விகிதத்தில் வேலை செய்ய விரும்புகிற அனைவரும் பணியில் அமர்த்தப்படும் நிலை.

**2. ஊரக வேலையின்மையின் முக்கிய இயல்பு யாது?**

- பருவகால வேலையின்மை. • மறைமுக வேலையின்மை.

**3. உடன்பாடில்லா வேலையின்மை பற்றி சிறு குறிப்பு வரைக.**

- உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் ஏற்படுவது.
- **காரணங்கள்:** இடம்பெயராமை, மூலப்பொருள் பற்றாக்குறை, திறமை குறைவு, இயந்திர பழுது.
- வேலையை இழந்து புதிய வேலையை தேடும் உழைப்பாளர்கள் இதில் அடங்குவர்.

**4. சே – விதியின் எடுகோள்களை பட்டியலிடுக.**

- முழு வேலை நிலை நிலவும். • பரிமாற்றத்திற்கு மட்டுமே பணம் உதவும்.
- விலைக்கருவி தானாக இயங்கும். • நிறைவுப் போட்டி நிலவும். • கூலி, விலை, வட்டிவீதம் நெகிழ்ச்சியுடையது.

**5. விளைவுள்ள தேவை என்றால் என்ன?**

- உற்பத்தியான பொருட்களின் மீது உண்மையில் செலவு செய்யப்படும் பணத்தின் அளவே விளைவுள்ள தேவை.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



6. **தொகு அளிப்பின் கூறுகள் யாவை?**
- **தொகு அளிப்பு (ASF) = C + S + T + Rf**
- C = மொத்த நுகர்வு செலவு.
- S = மொத்த தனியார் சேமிப்பு.
- T = நிகர வரி வசூல்.
- Rf = வெளிநாட்டிற்கு வழங்கிய நிவாரணம்.

7. **தற்போதுள்ள சூழலில் ஆள் குறைப்பிற்கான காரணங்கள் யாவை?**
- புதிய தொழில் நுட்பத்தை அறிமுகம் செய்தல்.
- இயந்திரமயமாதல்.
- மறுசீரமைப்பு நடவடிக்கைகள்.
- அதிகமான தொழிலாளர்கள் பணியில் இருத்தல்.

*IV. நுகர்வு மற்றும் முதலீட்டு சார்புகள்*

1. **நுகர்வுச் சார்பு (Consumption Function) என்றால் என்ன?**
- வருமானத்திற்கும் நுகர்வுக்கும் இடையே உள்ள சார்பு தொடர்பு. C = a + by. C = f (Y).

2. **நுகர்வு நாட்டம் (Propensity to Consume) என்றால் என்ன?**
- வருமானத்திற்கும் நுகர்வுக்கும் இடையே உள்ள சார்பு தொடர்பு. C = f (Y).
- பல்வேறு வருமான நிலைகளில் நுகர்வுக்காக செலவிடப்பட்ட வருமானம்.

3. **சராசரி நுகர்வு நாட்டம் (APC) வரையறு.**
- வருமானத்திற்கும் நுகர்வுக்கும் உள்ள விதம். $APC = \frac{C}{Y}$

4. **இறுதிநிலை நுகர்வு நாட்டம் (MPC) வரையறு.**
- வருமான மாற்றத்திற்கும் நுகர்வு மாற்றத்திற்கும் உள்ள விதம். $MPC = \frac{\Delta C}{\Delta Y}$

5. **சேமிப்பு நாட்டம் (Propensity to Save) என்றால் என்ன?**
- மொத்த அல்லது அதிகரிக்கும் வருவாயில் நுகர்வை விட மக்கள் சேமிக்க விரும்பும் தொகையின் அளவு. S = f (Y).

6. **சராசரி சேமிப்பு நாட்டம் (APS) வரையறு.**
- வருமானத்திற்கும், சேமிப்பிற்கும் உள்ள விதம். $APS = \frac{S}{Y}$

7. **இறுதிநிலை சேமிப்பு நாட்டம் (MPS) வரையறு.**
- வருமான மாற்றத்திற்கும் சேமிப்பு மாற்றத்திற்கும் உள்ள விதம். $MPS = \frac{\Delta S}{\Delta Y}$

8. **பெருக்கி (K) வரையறு.**
- முதலீடு மாற்றத்திற்கும் தேசிய வருமான மாற்றத்திற்கும் உள்ள விதம். $K = \frac{\Delta Y}{\Delta I}$

9. **முடுக்கி (β ) வரையறு.**
- நுகர்வு மாற்றத்திற்கும் தூண்டப்பட்ட முதலீடு மாற்றத்திற்கும் உள்ள விதம். $\beta = \frac{\Delta I}{\Delta C}$

*V. பணவியல் பொருளியல்*

1. **பணத்தின் இலக்கணம் எழுதுக.**
- பணம் எதனைச் செய்கிறதோ அதுவே பணம் – **வாக்கர்.**

2. **பணவீக்கம் இலக்கணம் எழுதுக.**
- குறைந்த அளவு பண்டங்களை அதிக அளவு பணம் துரத்தும் நிலை – கோல்பர்ன்.
- வாங்கும் சக்திக்கான அளவின் அசாதாரண குறைவு நிலை – கிரிகெரி.

3. **பண்டமாற்று முறை என்றால் என்ன?**
- பண்டங்களுக்கு மாற்றாக பண்டங்களை மாற்றும் முறை.
- பண்டங்களுக்கு பண்டங்களை மாற்றிக் கொள்ளும் முறை.

4. **பண்டப் பணம் என்றால் என்ன?**
- தொடக்க காலத்தில் மனிதனால் பணமாக பயன்படுத்தப்பட்ட பல்வேறு வகையான பண்டங்களே பண்டப்பணம்.
- **உதாரணம்:** உப்பு, அரிசி, கோதுமை, தோல்.

5. **பொன் திட்டம் என்றால் என்ன?**
- ஒரு பணத்தின் ஓர் அலகு குறிப்பிட்ட எடையிலான தங்கத்திற்கு சமமாக வரையறுக்கப்படும்.
- ஒரு பண அலகின் வாங்கும் திறன் அந்த பொன் பணத்தின் எடைக்கு சமமாக இருக்கும்.

6. **நெகிழிப் பணம் என்றால் என்ன?**
- காகிதப் பணத்திற்கு மாற்றாக நெகிழி அட்டையால் உருவாக்கப்பட்ட நிதிப் பொருட்கள்.
- **உதாரணம்:** ரொக்க அட்டை, கடன் அட்டை, பற்று அட்டை.

7. **தேக்கவீக்கம் என்றால் என்ன?**
- பொருளாதார வளர்ச்சியில் தேக்க நிலையும், தேவைக் குறைவும், வேலையின்மையும், அதிக அளவு பணவீக்கமும் ஒன்றிணைந்த சூழ்நிலையே தேக்கவீக்கம்.

*VI. வங்கியியல்*

1. **வணிக வங்கிகள் என்பதை வரையறு.**
- பொது மக்களிடம் இருந்து வைப்புகளைப் பெற்று அதனை கடனாகவும் முன்பணமாகவும் மக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு வழங்கி இலாப நோக்கில் செயல்படும் நிதி நிறுவனம்.

2. **கடன் உருவாக்கம் என்றால் என்ன?**
- மொத்த பண அளிப்பில் கடன் பணத்தின் அளவை அதிகரிக்கும் செயல்.
- வணிக வங்கிகள் கடன்களையும் முன் பண அளிப்பையும் அதிகரிக்கும் செயல்.

3. **மைய வங்கி என்பதை வரையறு.**
- அரசின் பணம், பண அளிப்பு, வட்டி விகிதம், ஆகியவற்றை மேலாண்மை செய்யும் நிறுவனம்.
- வணிக வங்கிகளை மேற்பார்வையிட்டு, தலைமை வங்கியாக – பணஅளிப்பை மேலாண்மை செய்யும் நிறுவனம்.

4. **CRR மற்றும் SLR ஆகியவற்றை வேறுபடுத்துக.**
- **ரொக்க இருப்பு விகிதம் (CRR):** மைய வங்கியில் வணிக வங்கிகள் பெற்ற வைப்புகளில் இருப்பாக வைக்க வேண்டிய குறைந்தபட்ச விகிதம்.
- **சட்டபூர்வ நீர்மை விகிதம் (SLR):** பெற்ற வைப்புகளில் வணிக வங்கிகள் எப்போதும் தன்னகத்தே வைத்திருக்க வேண்டி நீர்மை சொத்துக்களின் விகிதம்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

5. **வெளி அங்காடி நடவடிக்கை என்பதன் பொருள் யாது?**
- மையவங்கி பணச் சந்தையில் அரசின் கடன் பத்திரங்கள், தனியார் நிறுவனங்களின் பத்திரங்கள், உண்டியல்களை வாங்கி – விற்கும் நடவடிக்கைகள்.

6. **கடன் விநியோகப் பகிர்வு என்றால் என்ன?**
- பண அளிப்பு சூழ்நிலைகளுக்கு ஏற்ப கடனுக்கான நோக்கங்களை பட்டியலிட்டு வரையறை செய்து கடன் கட்டுப்பாட்டினை ஏற்படுத்தும் முறை.

7. **விவசாய கடன் வழங்கும் துறையின் பணிகள் யாவை?**
- விவசாய கடன் சார்ந்த வினாக்களை ஆய்வு செய்தல்.
- வங்கி நடவடிக்கைகளில் நிபுணத்துவம் வாய்த்த ஆலோசனைகளை வழங்குதல்.
- ஊரகத் துறைக்கு நிறுவனங்கள் மூலம் வேளாண்மைக் கடன் வழங்கி ஒருங்கிணைத்தல்.

***VII. பன்னாட்டுப் பொருளியல்.***

1. **பன்னாட்டுப் பொருளியல் என்றால் என்ன?**
- பன்னாட்டு வாணிகத்தின் அடிப்படைகளை கற்பிக்கும் பொருளியலின் பாடப் பிரிவு.
- பண்டங்கள், பணிகளை நாடுகளுக்கு இடையே பரிமாற்றம் செய்வது பற்றிய பொருளியலின் பாடப்பிரிவு.

2. **பன்னாட்டு வாணிகம் வரைவிலக்கணம் தருக.**
- நாட்டின் புவி மற்றும் அரசியல் எல்லைகளை கடந்து பல நாடுகளுக்கிடையே நடைபெறும் வாணிகம்.
- இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு இடையே நடைபெறும் வாணிகம்.
- ஒன்றுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு இடையே நடைபெறும் வாணிகம்.

3. **பன்னாட்டு வாணிபத்தின் நன்மைகள் யாவை?**
- திறனுடைய உற்பத்தி. • நாடுகளுக்கிடையே விலை சமநிலை அடைதல்.
- பற்றாக்குறையான வளங்களை சமமாக பகிர்தல்.

4. **வாணிப வீத்தை – விளக்குக.**
- ஏற்றுமதி பொருளின் விலைக்கும் இறக்குமதி பொருளின் விலைக்கும் இடையேயான விகிதம்.
- வாணிபவீதம் $= \frac{\text{ஏற்றுமதி விலைக் குறியீடு}}{\text{இறக்குமதி விலைக் குறியீடு}} \times 100$

5. **வாணிப செலுத்துநிலைப் பற்றி நீ அறிவது யாது?**
- ஒரு நாடு குறிப்பிட்ட காலத்தில் உலக நாடுகளுடன் மேற்கொள்ளும் பொருளாதார பரிவர்த்தனைகளை கணக்கியல் முறையில் தொகுத்தளிக்கும் அறிக்கை.

6. **செலாவணி மாற்று வீதம் என்றால் என்ன?**
- ஒரு நாட்டின் பணத்தை மற்றொரு நாட்டின் பணத்திற்கு மாற்றும் விகிதம்.
- ஒரு அலகு அயல் நாட்டு பணத்தை பெற அளிக்கப்படும் உள்நாட்டு பண அலகுகளின் அளவு.

7. **பன்னாட்டு வாணிகத்தின் அடிப்படைகளை விளக்குவதில் ஆடம் ஸ்மித்துக்கும் டேவிட் ரிக்கார்டோவுக்கும் உள்ள வேறுபாடு யாது ?**

| ஆடம் ஸ்மித் | டேவிட் ரிக்கார்டோ |
|---|---|
| முழு செலவு கோட்பாடு | ஒப்புமைச் செலவு கோட்பாடு |
| ***பன்னாட்டு வாணிபத்திற்கான அடிப்படை*** குறைந்த தனி அடக்க செலவில் பொருள் உற்பத்தி. | ***பன்னாட்டு வாணிபத்திற்கான அடிப்படை*** குறைந்த ஒப்புமை செலவில் பொருள் உற்பத்தி. |
| | |

***VII பன்னாட்டு பொருளாதார அமைப்புகள்:***

1. **சிறப்பு எடுப்புரிமை (SDR) என்பதன் பொருள் யாது?**
- பன்னாட்டு நீர்மைத் தன்மையை உருவாக்க 1969 ல் IMF ஆல் அதன் உறுப்பு நாடுகளின் மூலதன பங்கு தொகைக்கு ஏற்ப அளிக்கப்படும் பன்னாட்டு கணக்கு பணமே சிறப்பு எடுப்புரிமை **(SDR தாள் தங்கம்).**

2. **பொதுச் சந்தை வரையறு.**
- புவியின் குறிப்பிட்ட பகுதியில் அமைந்துள்ள நாடுகள் தடையற்ற வாணிகம், உற்பத்தி காரணிகளின் இடப் பெயர்வுக்காக அமைக்கும் அமைப்பு.

3. **தடையற்ற வாணிகப் பகுதி என்றால் என்ன?**
- இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு இடையே ஒப்பந்தம் கையொப்பமாகும்.
- ஒப்பந்தத்தில் ஈடுபட்ட நாடுகள் அனைத்தும் ஒரே மண்டலமாக கருதி வணிகத் தடைகளை குறைக்க ஒத்துழைக்கும்.

4. **எங்கு எப்போது சார்க் தலைமையகம் அலுவலகம் துவக்கப்பட்டது?**
- சார்க்கின் தலைமையகம் நேபாளத்தின் தலைநகரான காட்மண்டில் 1987 ஜனவரி 16 முதல் செயல்பட துவங்கியது.

5. **ஆசியானின் இரண்டு நோக்கங்களை எழுதுக.**
- பொருளாதார வளர்ச்சி, சமூக வளர்ச்சி மற்றும் பன்னாட்டு மாற்றத்தை துரிதப்படுத்துதல்.
- தென் கிழக்கு ஆசிய பகுதியில் அமைதி மற்றும் உறுதியான அரசியல் சூழ்நிலையை மேம்படுத்துதல்.
- அரசு துறை தணிக்கையில் உள்ள அறிவை பகிர்தல் உறுப்பினர்களை ஒன்றிணைத்தல்.
- கல்வி வளர்ச்சி, ஆராய்ச்சிக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்குதல்.
- செய்தி மையமாக செயல்படுதல், பன்னாட்டு நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுதல்.

6. **ஐ.ஆர்.டி.பி. (IRDB) யின் இரண்டு கடன் வழங்கும் திட்டங்களின் பெயர்களை சுட்டிக்காட்டுக.**
- வங்கியின் இருப்பில் உள்ள சொந்த நிதியில் இருந்து கடன் வழங்குதல்.
- கடன் நிதியில் இருந்து கடன் வழங்குதல்.
- ஈட்டுறுதி கடன் பெற்றுத் தருதல்.

7. **உலக வங்கி குழுமத்தின் கீழ் செயல்படும் இரண்டு துணை நிறுவனங்களின் பெயர்களை எழுது.**
- பன்னாட்டு மேம்பாட்டு அமைப்பு (IDA).
- பன்னாட்டு நிதிக் கழகம் (IFC).
- பன்முக முதலீட்டு ஒப்புறுதி முகமை (MIGA).
- முதலீட்டு சிக்கல்களை தீர்ப்பதற்கான பன்னாட்டு மையம் (ICSID).



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



*IX: நிதிப் பொருளியல்:*

1. **பொது நிதி வரையறு.**
   - அரசின் வருவாய் மற்றும் செலவுகளின் இயல்புகளையும் கொள்கைகளையும் ஆராய்வதே பொதுநிதி.
   - அரசின் வருவாய், செலவுகளைப் பற்றியும் அவை ஒன்றொடொன்று சரிசெய்வது பற்றியும் விளக்கும் இயல்.
2. **பொது வருவாய் என்றால் என்ன?**
   - அனைத்து மூலங்களின் வழியாக அரசு பெறும் வருமானங்கள்.
   - அரசு பெறும் வரி மற்றும் வரியில்லா வருமானங்களே பொது வருவாய்.
3. **வரி மற்றும் கட்டணம் வேறுபடுத்துக.**

   **வரி:** அரசிடம் இருந்து எந்த ஒரு நன்மையும் எதிர்பாராமல் அரசுக்கு கட்டாயம் செலுத்தவேண்டியது.

   **கட்டணம்:** அரசு செய்யும் சேவைகளுக்காக வசூலிக்கப்படுவது.
4. **பொதுக் கடன் என்பதன் பொருள் யாது?**
   - தனி நபர்கள், நிறுவனங்கள், பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் பிற நாடுகளில் இருந்து அரசு பெறும் கடன்.
5. **நேர்முக வரிக்கு இரண்டு உதாரணங்கள் தருக .**
   - வருமான வரி, சொத்து வரி, வெகுமதி வரி, தீர்வை வரி, மரண வரி .
6. **GST யின் கூறுகள் யாவை?**
   - **CGST:** மத்திய சரக்கு மற்றும் சேவை வரி.
   - **SGST:** மாநில சரக்கு மற்றும் சேவை வரி.
   - **IGST:** ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி.
7. **பூஜ்ய அடிப்படை வரவு செலவு திட்டம் – குறிப்பு வரைக.**
   - ஒவ்வொரு ஆண்டும் புதிய ஆண்டாக கருதப்படும்.
   - ஒவ்வொரு செலவினமும் புதிதாக கருதப்பட்டு மதிப்பிடப்படும்.
   - 1987–1988 ல் இந்திய அரசு இதனை தாக்கல் செய்தது.
8. **உள்ளாட்சி அமைப்புகளின் வகைகள் யாவை?**
   - கிராம ஊராட்சி. • ஊராட்சி ஒன்றியம். • மாவட்ட ஊராட்சி. • பேரூராட்சி
   - நகராட்சி. • மாநகராட்சி. • இராணுவ கூட வாரியங்கள் • டவுன்சிப்.

*X. சுற்றுச்சூழல் பொருளியல்:*

1. **சுற்றுச் சூழல் என்பதன் பொருள் எழுதுக.**
   - நம்மை சுற்றியுள்ள அனைத்து நிலைமைகள், சூழ்நிலைகள், உயிர்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய உயிர் தொகுப்பு.
   - இயற்பியல், வேதியியல், உயிரியல் காரணிகளை உள்ளடக்கிய உயிர்தொகுப்பே சுற்றுச் சூழல்.
2. **சூழலியல் என்றால் என்ன?**
   - ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள உயிர் மற்றும் உயிரற்ற கூறுகளுக்கு இடையே உள்ள தொடர்பு.
3. **தலா கரியமில வாயு அதிகமாக வெளியிடும் நாடுகள் யாவை?**
   - சவுதி அரேபியா. • ஆஸ்திரேலியா. • அமேரிக்கா. • கனடா. • தென் கொரியா.
4. **சுற்றுச் சூழல் பொருட்கள் என்றால் என்ன ? உதாரணம் தருக.**
   - தனியார் செத்துரிமை இல்லாத, பொதுவாக அனைவரும் பயன்படுத்தும் வகையில் உள்ள சந்தையிடா பொருட்கள்.
   - **உதாரணம்–** காற்று, ஆறுகள், மலைகள், கடற்கரை.
5. **ஒலி மாசுவினை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் யாவை?**
   - ஒலித் தடைகளை ஏற்படுத்துதல். • புதிய சாலைகளை ஏற்படுத்துதல். • ஒலித் தடுப்பான்களை நிறுவுதல்.
   - ஒலிப் பெருக்கிகளை கட்டுப்படுத்துதல். • போக்குவரத்து நெரிசல் கட்டுப்பாடு.
   - கனரக வாகனங்கள் செல்லும் நேரத்தை கட்டுப்படுத்துதல் .
6. **உலக வெப்பமயமாதல் என்பதை வரையறு.**
   - காற்றில் கலக்கும் வாயு வடிவ மாசுகளின் காரணமாக இயல்பை விட பூமி மற்றும் வளிமண்டலத்தில் ஏற்படும் வெப்ப உயர்வு.
7. **விதைப் பந்து என்றால் என்ன?**
   - **நீர், சாண உரம், கலிமண்** கலந்து உருட்டப்பட்ட உருண்டைகளின் நடுவில் தாவரங்களின் விதைகளை வைத்து உருட்டி உலர்த்தப்படும் பந்து அமைப்புகள்.

*XI. பொருளாதார மேம்பாடு மற்றும் திட்டமிடல்*

1. **பொருளாதார முன்னேற்றம் – வரையறு.**
   - நாட்டின் பொருளாதார கட்டமைப்பில் நிகழும் தொழில்நுட்ப, நிறுவன அடிப்படை மாற்றங்களொடு கூடிய தரமுடைய வளர்ச்சி.
2. **பொருளாதார முன்னேற்றத்தின் குறீயீடுகள் யாவை?**
   - நாட்டின் மொத்த உற்பத்தி. • தலாவீத மொத்த நாட்டு உற்பத்தி. • சமுக குறியீடுகள். • நலன்.
3. **மொத்த நாட்டு உற்பத்தி என்றால் என்ன?**
   - ஒரு நாட்டின் எல்லைக்குள் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப் பண்டங்கள் மற்றும் பணிகளின் சந்தை மதிப்புடன் அயல் நாடுகளில் ஈட்டிய நிகர காரணி வருமானமும் சேர்ந்த மதிப்பு.
4. **பொருளாதார முன்னேற்றத்தின் சமூக குறியீடுகளை பட்டியலிடுக.**
   - மக்களின் அடிப்படை மற்றும் கூட்டுத் தேவைகளை நிறைவு செய்தல்.
   - சுகாதாரம், கல்வி, உணவு, குடிநீர், துப்புரவு, வீட்டு வசதிகளை அதிகரித்தல்.
5. **நிதி ஆயோக் குறிப்பு வரைக**
   - **National Institution for Transforming India.** (இந்தியாவை உருமாற்றம் செய்வதற்கான தேசிய நிறுவனம்)
   - இந்திய பிரதமரே நிதி ஆயோக்கின் தலைவர். • மத்திய அமைச்சர்கள் இதன் உறுப்பினர்கள்.
   - திட்டக்குழுவிற்கு மாற்றாக 2015 **ஜனவரி** 1 ல் இது அமைக்கப்பட்டது. • துணைத் தலைவரே இதன் நிர்வாகத் தலைவர்.
6. **பொருளாதார திட்டமிடலின் வரைவிலக்கணம் யாது ?**
   - தனியார் உற்பத்தி, வழங்கல் நடவடிக்கைகளை கூட்டாகக் கட்டுப்படுத்துவது அல்லது ஒடுக்குவதை குறிக்கும் – **இராபின்ஸ்.**
   - தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்குகளை அடைய உரிய பொறுப்பில் உள்ளவர்கள் நிதானமாக சிந்தித்து இருக்கக்கூடிய வளங்களை அதிக அளவில் பயன்படுத்த சுட்டிக்காட்டும் வழிமுறைகளே திட்டமிடுதல்– **டால்டன்**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



7) பொருளாதார வளர்ச்சியில் இருந்து முன்னேற்றத்தை வேறுபடுத்துக.

| பொருளாதார வளர்ச்சி | பொருளாதார முன்னேற்றம் |
|---|---|
| வளர்ந்த நாடுகளுடன் தொடர்புடையது. | வளரும் நாடுகளுடன் தொடர்புடையது. |
| மாற்றங்கள் படிப்படியாக நிதானமாக நிகழும். | தொடர்ச்சியற்ற தன்னிச்சையான மாற்றங்கள் நிகழும். |
| எண்ணிக்கை அடிப்படையிலானது. | எண்ணிக்கை மற்றும் தர அடிப்படையிலானது. |
| குறுகிய எல்லையுடையது. | விரிவான பொருள் கொண்டது. (வளர்ச்சி + மாற்றம்) |

*XII. புள்ளியியல் முறைகள் மற்றும் பொருளாதார அளவையியல் ஓர் அறிமுகம்.*

1. புள்ளியியல் என்றால் என்ன?

• மதிப்பீடுகள் மற்றும் நிகழ்தகவுகளைப் பற்றிய அறிவியல் – போடிங்டன்.

• எண்ணிலான விவரங்களைத் திரட்டி, ஒருங்கிணைத்து வழங்கி, பகுத்து ஆராய்ந்து விவரிக்கும் இயல்.

• எண்விவரங்களை பற்றி படிக்கும் பயன்பாட்டுக் கணிதத்தின் சிறப்புப் பகுதியே புள்ளியியல்.

2. புள்ளியியலின் வகைகள் யாவை?

• விவரிப்பு புள்ளியியல். • உய்த்துணர்வு புள்ளியியல்.

3. உய்த்துணர்வு புள்ளியியல் என்றால் என்ன?

• கூறுவின் விவரங்களை ஆராய்வதன் மூலம் முழு தொகுப்பின் பண்புகளை அறிய உதவும் புள்ளியியலின் பகுதி.

4. விவரிப்பு புள்ளியியல் என்றால் என்ன?

• புள்ளிவிவர முழுத் தொகுப்பையும் விவரிப்பையும் செய்யும் புள்ளியியலின் ஒரு பகுதி.

4. புள்ளி விவரங்களின் வகைகள் யாவை?

• அளவு விவரங்கள். • பண்பு விவரங்கள். • முதல் நிலை விவரங்கள். • இரண்டாம் நிலை விவரங்கள் .

5. உடன் தொடர்பு (Corelation) என்பதனை வறையறு.

• இரண்டு அல்லது அதற்கும் மேற்ப்பட்ட மாறிகள் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு நேர், எதிர் மாறுவதை கணக்கிடுதல்.

6. ஒட்டுறவு (REGRESSING) என்பதை வரையறு.

• ஒரு மாறியின் மதிப்பில் ஏற்படும் மாற்றம் மற்றொரு மாறியின் மதிப்பில் ஏற்படுத்தும் மாற்றத்தை அளவிடுதலே ஒட்டுறவு.

• இரு மாறிகள் மட்டும் பயன்படுத்தப்படும்.

• சார்பற்ற மாறிக்கும், சார்புடைய மாறிக்கும் இடையே உள்ள கணித சார்புத் தொடர்பு.

7. பொருளாதார அளவையியல் என்றால் என்ன?

• பொருளியல், புள்ளியில், கணிதம் ஆகிய மூன்று பாடங்களின் ஒருங்கிணைப்பு.

• பொருளாதார அளவையியல் = பொருளியல் + புள்ளியியல் + கணிதம்.

8. திட்ட விலக்கம் என்றால் என்ன?

• விலகல் வர்க்கங்களின் சராசரியின் வர்க்க மூலமே திட்ட விலக்கம்.

9. சராசரி என்பதன் பொருள் யாது ?

• எந்த ஒரு எண்ணை மற்ற எண்கள் பிரதிபலிக்கின்றதோ அந்த எண்ணே சராசரி.

10. விலகல்(சிதறல்) அளவைகளின் வகைகள் யாவை ?

• தனித்த விலகல் அளவை. • ஒப்பீட்டு விலகல் அளவை.

11. சிதறல் விளக்கப்படம் என்றால் என்ன?

• இரு மாறிகள் கொண்ட ஒரு தரவின் போக்கினை(சிதறலை) காட்டும் கார்ட்டீசியன் தள வரைபடமாகும்.

• இரு மாறிகளுக்கு இடையே உள்ள ஒட்டுறவு மற்றும் தொடர்பு போக்கை புரிந்து கொள்ள பயன்படுகிறது.

12. சிதறல் விளக்கப்படத்தின் நன்மைகள் யாவை?

சிதறல் விளக்கப்படத்தின் நன்மைகள்

• மிகவும் எளிமையான கணக்கீடுகள் அற்ற முறையாகும்.

• இது கடைநிலை மதிப்புகளால் பாதிக்கப்படுவதில்லை.

• உடன் தொடர்பை கண்டறிவதில் அடிப்படை நிலையாகும்.

12. விலகல் (சிதறல்) அளவை என்றால் என்ன?

• ஒரு பரவலின் மைய அளவையை சுற்றி ஒவ்வொரு எண்ணும் எவ்வளவு தூரம் விலகி நிற்கிறது என்பதே காட்டுவதாகும்.

13. தனித்த விலகல் அளவை குறிப்பு வரைக.

• எண் பரவல் தரப்பட்ட அதே அலகுகளில் விலகல் அளவைகள் கணக்கிடப்படுதாகும்.

• மதிப்புகளின் அலகுகளை கொண்டதே தனித்த விலகல் அளவை.

14. ஒப்பீட்டு விலகல் அளவை குறிப்பு வரைக.

• எந்த ஓர் அலகையும் சாராமல் அலகுகளில் இருந்து விடுபட்டவையாகும்.

• ஒன்றுக்கும் மேற்பட்ட பரவல்களின் மாறுபாட்டை ஒப்பிட உதவுகிறது.

15. உடன் தொடர்பை அளவிடும் முறைகள் யாவை?

• சிதறல் விளக்கப்படம் • வரைபட முறை • கால்பியர்சன் உடன்தொடர்பு கெழு முறை. • மீச்சிறு வர்க்க முறை.

16. திட்டமிடுதல் என்றால் என்ன?

• முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட குறிக்கோள்களையும் நோக்கங்களையும் அடைவதற்கான வழிமுறைகளே திட்டமிடல்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**மூன்று மதிப்பெண் வினா விடைகள்**

**1. பேரியல் பொருளாதாரத்தின் முக்கியத்துவங்களை எழுதுக?**

- பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த செயல்பாடுகளை அறிய உதவுகிறது.
- எதிர்கால பிரச்சனைகளுக்கு ஏற்ப செயல்பட உதவுகிறது.
- நடப்பு பிரச்சனைகளை அறிவியல் ரீதியாக அறிய உதவுகிறது.
- பொருளாதார குறியீடுகளை ஒப்பிடவும், ஆராயவும் பயன்படுகிறது.
- பொருளாதார கொள்கைகளை உருவாக்கவும் முன்கணிக்கவும், நெருக்கடிகளுக்கு தீர்வுகாணவும் உதவுகிறது.

**2. பொருளாதார அமைப்புகளின் வகைகளை குறிப்பிடுக.**

- **முதலாளித்துவ பொருளாதாரம்:** உற்பத்தி நடவடிக்கைகள் தனியார் வசம் இருக்கும்.
- **சமதர்ம பொருளாதாரம்:** அரசே பொருளாதாரத்தை கட்டுப்படுத்தி ஒழுங்குப்படுத்தும்.
- **கலப்பு பொருளாதாரம்:** தனியார் மற்றும் அரசு துறைகள் இணைந்து செயல்படும்.

**3. முதலாளித்துவத்தின் சிறப்புகளை (நன்மைகளை) எழுதுக.**

- அரசின் தலையீடு இல்லை பொருளாதாரம் தானாக இயங்கும்.
- வளங்கள் திறமையாக உத்தம அளவில் பயன்படுத்தப்படும்.
- கடின உழைப்பு ஊக்குவிக்கப்படும்.
- உற்பத்தி அதிகரிக்கும், பொருளாதாரம் முன்னேற்றம் அடையும்.
- நுகர்வோர் இறையாண்மை முக்கியத்துவம் பெறும்.
- மூலதன ஆக்கம் அதிகரிக்கும்.
- தொழில்நுட்ப முன்னேற்றம் ஏற்படும் தரமான பொருட்கள் உற்பத்தி செய்யப்படும்.

**4. சமத்துவத்தின் குறைகளை எழுதுக.**

- அதிகார வர்க்கம், சிவப்பு நாடா நிலை உருவாகும்.
- திறமை ஊக்குவிக்கப்படாது, ஊக்கமின்மை ஏற்படும்.
- நுகர்வோரின் தெரிவு சுதந்திரம், தொழிலில் சுதந்திரம் இருக்காது.
- அதிகாரம் குவியும், தவறாகப் பயன்படுத்தப்படும்.

**5. கலப்பு பொருளாதாரத்தின் இயல்புகள் யாவை?**

- தனியார் மற்றும் அரசு துறைகள் இணைந்து செயல்படும்.
- மையத் திட்டக்குழு திட்டங்களை தயாரித்து செயல்படுத்தும்.
- அடிப்படை பிரச்சனைகள் விலை இயக்க முறை, அரசின் தலையீட்டின் மூலம் தீர்க்கப்படும்.
- தனியார் சுதந்திரம் உண்டு முழு கட்டுபாடும் அரசிடம் இருக்கும்.

**6. இருப்பு என்றால் என்ன ? உதாரணம் தருக.**

- ஒரு குறிப்பிட்ட காலத்தில் கணக்கிடப்படும் பொருட்களின் அளவை குறிப்பது.
- **உதாரணம்–** பண அளிப்பு, மூலதனம், வேலையின்மை, அந்நியச் செலாவணி இருப்பு.

**7. ஓட்டம் என்றால் என்ன ? உதாரணம் தருக.**

- ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத்தில் கணக்கிடப்படும் பொருட்களின் அளவை குறிப்பது.
- **உதாரணம்:** தேசிய வருவாய், ஏற்றுமதி, இறக்குமதி, நுகர்வு, உற்பத்தி, முதலீடு.

**8. முதலாளித்துவம் மற்றும் சமததர்ம பொருளாதாரத்தை வேறுபடுத்துக.**

| தன்மைகள் | முதலாளித்துவம் | சமதர்மம் |
|---|---|---|
| • உற்பத்தி மூலங்களின் உரிமை | தனியார். | அரசு (பொது). |
| • பொருளாதார நோக்கம் | இலாபம். | சமுக நலன். |
| • அரசின் பங்கு | உள்ளீடு கட்டுப்பாடு. | முழு ஈடுபாடு. |
| • வருவாய் பங்கீடு | சமனற்ற நிலை. | சமநிலை. |
| • நிறுவனத் தன்மை | தனியார். | அரசு. |
| • பொருளாதார சுதந்திரம் | முழு சுதந்திரம். | சுதந்திரமின்மை. |
| • முக்கிய பிரச்சனை | சமமின்மை. | திறனின்மை. |

**9. கலப்புப் பொருளாதாரத்தை பின்பற்றும் நாடுகள் யாவை?**

**கலப்பு பொருளாதாரத்தை பின்பற்றும் நாடுகள்**

- இந்தியா, இங்கிலாந்து, பிரான்ஸ், மற்றும் பிரேசில்.

**10. J.M.கீன்ஸ் குறிப்பு வரைக.**

**J.M.கீன்ஸ்** • புதிய பேரியல் பொருளாதாரத்தின் தந்தை J.M.கீன்ஸ் (இங்கிலாந்து).

- 1930 ல் ஏற்பட்ட உலபெருமந்தத்தில் இருந்து விடுபட கருத்துகளை வழங்கினார்.
- 1936 ல் வேலைவாய்ப்பு வட்டி பணம் பற்றிய பொது கோட்பாடு என்ற நூலை எழுதினார்.
- 1945 ல் IMF மற்றும் உலக வங்கி ஆகிய சகோதர நிறுவனங்கள் தோற்றுவிக்கப்பட காரணமாக இருந்தார்.

**11. தங்க விதி பற்றி நீ அறிவது யாது?**

- முதலாளித்துவத்தில் உற்பத்தியாளரால் பின்பற்றப்படும் தங்க விதி உச்ச இலாபம்.
- இலாபம் உந்து சக்தியாக திரைக்கு பின்னால் இருந்து மக்களை வழிநடத்தும்.
- முதலாளித்துவத்தில் பொருளாதார நடவடிக்கைகளின் முக்கிய நோக்கம் உச்ச இலாபம்.




Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

12. **இருதுறை சூழல் வட்ட ஓட்ட மாதிரியை விளக்குக.**

- **இல்லங்கள் துறை:** பண்டங்கள், பணிகளை வாங்கி நுகரும் துறை. உற்பத்திக் காரணிகளை நிறுவனங்களுக்கு விற்று வருவாய் பெறும்.
- **நிறுவனங்கள் துறை:** உற்பத்திக் காரணிகளை பணியமர்த்தி பண்டங்கள், பணிகளை உற்பத்தி செய்து இல்லங்களுக்கு விற்று வருவாய் பெறுகிறது.
- **உண்மை ஓட்டம்:** வெளி வட்டம் உற்பத்திக் காரணிகள் மற்றும் பண்டங்கள் – பணிகளின் ஓட்டத்தைக் காட்டும்.
- **பண ஓட்டம்:** உள் வட்டம் காரணிகளின் விலை மற்றும் பொருட்களின் விலை ஓட்டத்தைக் காட்டும் .
- இங்கு Y= C + I

Y = வருமானம். C = நுகர்வுச் செலவு. I = முதலீடுச் செலவு.




13. **தலைவீத(தலா) வருமானம் பற்றி குறிப்பு வரைக.**

- ஒரு நாட்டின் ஒரு நபரின் சராசரி ஆண்டு வருமானம்.
- தேசிய வருமானத்தை மக்கள் தொகையால் வகுக்க கிடைக்கும் ஈவு.
- தலா வருமானம் = $\frac{\text{தேசிய வருமானம்.}}{\text{மக்கள் தொகை.}}$

14. **தனிநபர் வருமானத்திற்கும் செலவிடக்கூடிய வருமானத்திற்கும் உள்ள வித்தியாசம் யாது?**

- **தனிநபர் வருமானம்(PI):** ஒவ்வொரு தனி நபருக்கும் பல வழிகளில் இருந்து கிடைக்கும் மொத்த ஆண்டு வருமானம்.
- **செலவிடக்கூடிய வருமானம்(DI) :** • தனிநபர் வருமானத்தில் இருந்து நேர்முக வரிகளை கழிக்க கிடைப்பது.
  • செலவிடத் தகுந்த வருமானம் = தனிநபர் வருமானம் – நேர்முக வரிகள்.

15. **காரணி செலவில் NNP – பற்றி குறிப்பு வரைக .**

- உற்பத்திக் காரணிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த வருமான செலுத்தல்கள்.
- $NNP_{FC} = NNP_{MP}$ – மறைமுக வரிகள் + மானியம்.
- $NNP_{FC} = GDP_{MP}$ – (தேய்மானம் + நிகர மறைமுக வரிகள்) + நிகர காரணி வருமானம் (X – M)

16. **செலவு முறை குறிப்பு வரைக.**

- ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் மேற்கொள்ளப்படும் முடிவடைந்த பண்டங்கள் – பணிகளின் மீதான மொத்த செலவுகள் அனைத்தையும் கூட்டி தேசிய வருவாய் கணக்கிடப்படும்.
- **GNP = C + I + G + (X – M)**
- **C=** நுகர்வுச் செலவு. **I =** முதலீட்டுச் செலவு. **G =** அரசின் செலவு. **X =** ஏற்றுமதி. **M =** இறக்குமதி.

17. **இருமுறை கணக்கிடுதல் என்றால் என்ன?**

- ஒரு துறையின் வெளியீடு மற்றொருத் துறையின் உள்ளீடாக செல்லும் எனில் அது இருமுறை அல்லது பல முறை நாட்டு வருமான கணக்கீட்டில் சேர்க்கப்படும் நிகழ்வு.

18. **தேசிய வருவாய் கணக்கிடுதலில் இருமுறை கணக்கீட்டுப் பிரச்சனைக்குத் தீர்வு என்ன?**

- இறுதிப் பொருட்களின் மதிப்பை மட்டும் தேசிய வருவாய் கணக்கீட்டில் சேர்க்க வேண்டும்.
- ஒவ்வொரு துறையிலும் ஏற்பட்ட நிகர மதிப்பை மட்டும் கணக்கிட வேண்டும்.
- மூலப் பொருட்கள் அல்லது இடைநிலை பொருட்களின் மதிப்பை கணக்கிடக் கூடாது.

19. **தேசிய வருவாய் மற்றும் பொது நலன் ஆகியவற்றைப் பற்றி சுருக்கமாக எழுதுக .**

- ஒரு நாட்டின் வளர்ச்சியும் பொருளாதார நிலையும் தேசிய வருவாயை சார்ந்தே அமையும்.
- அதிக தலைவீத வருமானம் உடைய நாடுகள் நல்ல வாழ்க்கைத் தரத்துடன் அதிக பொருளாதார நலனை பெற்றிருக்கும்.
- தலைவீத வருமானம், அதன் வளர்ச்சி வீதம் அடிப்படையில் நாட்டின் முன்னேற்றம் அளவிடப்படும்.
- மூலதனப் பண்டங்கள், இராணுவ தளவாடங்களின் அதிக உற்பத்தி பொதுநலனை குறைக்கும்.
- இயற்கை வளங்களை மாசுப்படுத்தி அதிக GDP யை பெற்றாலும் பொது நலன் குறையும்.
- பெண்களுக்கான வேலைவாய்ப்பு, அதிக நேர வேலை ஆகியவற்றால் தலா வருமானம் அதிகரித்தாலும் பொதுநலன் குறையும்.
- GDP அதிகரித்தால் பொருளாதார நலனும் அதிகரிக்கும் என்று கூற முடியாது.

20. **தேசிய வருவாயின் பயன்கள் (முக்கியத்துவங்கள்) யாவை?**

- திட்டமிடவும், செயல்படுத்தவும் அதன் விளைவுகளை மதிப்பிடவும் பயன்படுகிறது.
- வட்டாரங்கள், நாடுகளுக்கு இடையே வருமானத்தை ஒப்பிடப் பயன்படுகிறது.
- பொருளாதார மாதிரிகளை உருவாக்க பயன்படுகிறது.
- பணவியல், நிதியியல் கொள்கைகளை உருவாக்கவும் செயல்படுத்தவும் உதவுகிறது.

21. **J.B. சே விதியின் விளைவுகள் யாவை?**

- அதிக உற்பத்தி, வேலையின்மைக்கு வாய்ப்பு இல்லை.
- விலைக்கருவி தானாக இயங்கும்.
- அரசின் தலையீடு இல்லை.
- பரிமாற்றத்திற்கு மட்டுமே பணம் பயன்படும்.
- வட்டிவீத நெகிழ்வு சேமிப்பு முதலீட்டுச் சமநிலையை உருவாக்கும்.
- முழு வேலைவாய்ப்பு நிலை வரை வளங்கள் பயன்படுத்தப்படும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com




22. **<u>தொகுத் தேவை என்றால் என்ன ? அதன் கூறுகள் யாவை?</u>**

- **<u>தொகுத் தேவை</u>:** வேறுபட்ட வேலை நிலைகளில் அனைத்து தொழில் முனைவோர்களும் உற்பத்தி செய்ததை விற்பனை செய்வதன் மூலம் எதிர்பார்க்கும் வருவாய்.
- **AD= C + I + G + (X−M)**
- **AD =** தொகுத் தேவை. **C =** நுகர்வுச் செலவு. **I =** முதலீட்டுச் செலவு. **G =** அரசின் செலவு. **(X −M) =** நிகர ஏற்றுமதி.

23. **<u>கீழ் கண்டவற்றை பற்றி சுருக்கமாக எழுதுக . அ) பருவ கால வேலையின்மை. ஆ) உடன்பாடில்லா வேலையின்மை. இ) படித்தவர் (கற்றோர்) வேலையின்மை.</u>**

- **பருவ கால வேலையின்மை:**
  - வருடத்தின் சில காலங்களில் மட்டும் நிலவும் வேலையின்மை **உதாரணம்: பனிக்கூழ்** மற்றும் **வேளாண்மை**.
  - ஆண்டின் குறிப்பிட்ட காலத்தில் மட்டும் வேலைவாய்ப்பு கிடைக்கும். • மற்ற காலங்களில் வேலை இருக்காது.
- **உடன்பாடில்லா வேலையின்மை:**
  - உழைப்பாளரின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் ஏற்படும் வேலையின்மை.
  - **காரணங்கள்:** இடம்பெயராமை, மூலப்பொருள் பற்றாக்குறை, திறமை குறைவு, இயந்திர பழுது.
- **படித்தவர் (கற்றோர்) வேலையின்மை:**
  - வேலை செய்யும் விருப்பம் இருந்தும் உரிய கல்வித்தகுதி பெற்றவர்கள் வேலையில்லாமல் இருப்பது அல்லது பகுதி நேர வேலையில் இருப்பது.

24. **<u>கீன்ஸ் கோட்பாட்டை தொடர் வரைபடம் மூலம் விளக்குக.</u>**







Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**25. தொகு அளிப்பை வரைபடம் மூலம் விளக்குக.**

- **தொகு அளிப்பு:** ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள், பணிகளின் மொத்த மதிப்பு.
- தொகு அளிப்பு (ASF) = C + S + T + Rf
- C = மொத்த நுகர்வு செலவு. • S = மொத்த தனியார் சேமிப்பு.
- T = நிகர வரி வசூல். • Rf = வெளிநாட்டிற்கு வழங்கிய நிவாரணம்.
- வேலைவாய்ப்புக்கும் எதிர்பார்க்கும் வருவாய்க்கும் உள்ள தொடர்பை ASF கோடு விளக்குகிறது.
- $ON_f$ அளவில் பொருளாதாரம் முழு வேலைவாய்ப்பை பெறும்.
- $ON_f$ நிலைக்கு பிறகு ASF நெகிழ்வற்று செங்குத்தாக அமையும். இதற்கு மேல் உற்பத்தியை அதிகரிக்க முடியாது.





**26. தொன்மையியத்தையும் கீன்ஸியத்தையும் ஒப்பிடுக.**

| வ.எண் | கீன்ஸியம் | தொன்மையியம் |
|---|---|---|
| 1. | குறுகிய காலச் சமநிலை. | நீண்ட காலச் சமநிலை. |
| 2. | சேமிப்பு கெடுதல். | சேமிப்பு நல்லது. |
| 3. | பேரியல் அணுகுமுறை. | நுண்ணியல் அணுகுமுறை. |
| 4. | முதலாளித்துவம் முரண்பாடுடையது. | முதலாளித்துவம் சரியானது. |
| 5. | வட்டி வீதம் மாறிக்கொண்டே இருக்கும். | வட்டி வீதம் மாறாது. |
| 6. | அரசின் தலையீடு உண்டு. | தலையிடாக் கொள்கை வலியுறுத்தப்படுகிறது. |
| 7. | தேவையே அதன் அளிப்பை உருவாக்கும். | அளிப்பு அதன் தேவையை உருவாக்கும். |

**27. தொன்மை வேலைவாய்ப்பு கோட்பாட்டின் படி கூலி குறைப்பு எவ்வாறு வேலையின்மை பிரச்சனைக்கு தீர்வாக அமைந்தது என்பதை வரைபடம் மூலம் விளக்குக.**

- மற்றவை மாறாமல் இருக்கும் போது கூலி குறைந்தால் வேலைவாய்ப்பு அதிகரிக்கும்.
- $W_2$ கூலி வீத்த்தில் வேலைவாய்ப்பின் அளவு $ON_1$
- கூலி வீதம் $OW_1$ என குறையும் போது வேலைவாய்ப்பின் அளவு $ON_2$ என அதிகரிக்கும்.
- குறைந்த பணக்கூலியில் அனைத்து தொழிலாளர்களும் பணியமர்த்தப்படுவதால் வேலையின்மை நீங்கும்.




**28. கீன்ஸின் உளவியல் சார்ந்த நுகர்வு விதியின் கருத்துகள் யாவை?**

- வருமானம் உயர நுகர்வு உயரும்.
- அதிகரித்த வருமானம் நுகர்வு, சேமிப்பிற்கு இடையே சில விகிதத்தில் பிரிக்கப்படும்.
- அதிகரித்த வருமானம் நுகர்வையும் சேமிப்பையும் அதிகரிக்க செய்யும்.
- அதிகரித்த வருமான அளவை விட அதிகரித்த நுகர்வின் அளவு குறைவு.

**29. தன்னிச்சை முதலீடு மற்றும் தூண்டப்பட்ட முதலீடு வேறுபடுத்துக.**

| வ.எண் | தன்னிச்சை முதலீடு | தூண்டப்பட்ட முதலீடு |
|---|---|---|
| 1. | தன்னிச்சையன அரசின் முதலீடு. | திட்டமிடப்பட்ட தனியார் முதலீடு. |
| 2. | வருவாயை பொருத்து நெகிழாது. | வருவாயை பொருத்து நெகிழும். |
| 3. | நல நோக்கமுடையது. | இலாப நோக்கமுடையது. |



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



30. **பெருக்கி – முடுக்கி வேறுபடுத்துக்க.**

- **பெருக்கி (K)**: முதலீடு மாற்றத்திற்கும் தேசிய வருமான மாற்றத்திற்கும் உள்ள வீதம் $K = \frac{\Delta Y}{\Delta I}$
- **முடுக்கி (β)**: நுகர்வு மாற்றத்திற்கும் தூண்டப்பட்ட முதலீடு மாற்றத்திற்கும் உள்ள வீதம் $\beta = \frac{\Delta I}{\Delta C}$

31. **மிகைபெருக்கி– விளக்குக.**

- பெருக்கி(K), முடுக்கி(β) ஆகியவற்றின் மொத்த விளைவே மேம்பட்ட பெருக்கி.
- தூண்டப்பட்ட நுகர்வு மற்றும் தூண்டப்பட்ட முதலீடு இணைந்து செயல்படுவதே மிகைப் பெருக்கி.
- பெருக்கி (K) மற்றும் முடுக்கி (β) யை இணைத்து மிகைப் பெருக்கியை **J.R.ஹிக்ஸ்** உருவாக்கினார்.
- தன்னிச்சை முதலீடு மற்றும் தூண்டப்பட்ட முதலீடு ஆகிய இரண்டையும் உள்ளடக்கியதாகும்.
- மிகைப் பெருக்கி எளிய பெருக்கியை விட சிறந்தது.

32. **பெருக்கி கருத்தின் குறைபாடுகளை குறிப்பிடு.**

**பெருக்கியின் (குறைபாடுகள்) (கசிவுகள்) மதிப்பு தடைபட காரணங்கள்:**

- அதிகரித்த வருமானத்தை கொண்டு பழைய கடன்களை திரும்ப செலுத்துதல்.
- அதிகரித்த வருமானத்தை கொண்டு செல்வங்களை வாங்குதல்.
- அதிகரித்த வருமானத்தை கொண்டு இறக்குமதி பண்டங்களை வாங்குதல்.
- தேவைக்கு ஏற்ப நுகர்வு பொருட்கள் கிடைக்காமை.
- முழு வேலைவாய்ப்பு நிலையில் அதிகரித்த வருமானம் பணவீக்கத்தை உருவாக்கும்.

33. **நுகர்வுச் சார்பை பாதிக்கின்ற ஏதேனும் மூன்று அக மற்றும் புறக் காரணிகளை விளக்குக.**

I. **நுகர்வை பாதிக்கும் அக காரணிகள்**

- **முன்னெச்சரிக்கை நோக்கம்:** எதிர்பாராத செலவுகளுக்காக பணத்தை ரொக்கமாக வைத்திருப்பது.
- **வாணிப நொக்கம்:** வியாபாரத்தை முன்னேற்றும் நோக்கம்.
- **எதிர்பார்க்கும் நோக்கம்**: எதிர்கால தேவைக்கான விருப்பம்.

II. **நுகர்வை பாதிக்கும் புறக் காரணிகள்**

- **வருமானப் பகிர்வு** : சமநிலை வருமானப் பகிர்வு நுகர்வு விருப்பத்தை அதிகரிக்கும்.
- **விலை அளவு:** விலையின் வீழ்ச்சி நுகர்வு விருப்பத்தை அதிகரிக்கும்.
- **வட்டி வீதம்:** அதிக வட்டி வீதம் சேமிப்பை அதிகரிக்கும் நுகர்வைக் குறைக்கும்.

34. **பெருக்கியின் பயன்கள் யாவை?**

- முதலீட்டின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டுகிறது.
- வணிகச் சுழற்ச்சியின் பல்வேறு நிலைகளுக்கான காரணங்களை விளக்குகிறது.
- சேமிப்பு – மூதலீட்டுச் சமநிலை ஏற்பட உதவுகிறது.
- அரசின் கொள்கைகளை உருவாக்க உதவுகிறது.
- வேலையின்மையை அகற்றி முழுவேலை நிலையை அடைய உதவுகிறது.

35. **உலோகப் பணம் பற்றி குறிப்பு வரைக.**

**உலோகப் பணம்**

- தங்கம், வெள்ளி போன்ற ஏதாவது ஒரு உலோகத்தால் பணத்தின் மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டது.
- உலோகத் திட்டத்தின் கீழ் உலோக நாணயங்கள் பணமாக உருவாக்கப்பட்டது.

**நிலையான உலோகப் பணம்**

- தங்கம் வெள்ளி போன்ற விலை உயர்ந்த தூய உலோகத்தால் செய்யப்பட்டன.
- இதன் முக மதிப்பும் உள்ளடக்க மதிப்பும் சமம்.
- முழு நிறையுடைய சட்டமுறை பணம்.

**அடையாள உலோகப் பணம்**

- இரும்பு, செம்பு, வெண்கலம் போன்ற விலை குறைவான தூய்மையற்ற உலோகத்தால் செய்யப்பட்டவை.
- இதன் முக மதிப்பு உள்ளடக்க மதிப்பைவிட அதிகம்.

36. **பண அளிப்பு என்றால் என்ன?**

- ஒரு பொருளாதாரத்தில் உள்ள மொத்த பண அளவே பண அளிப்பு.
- ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் நாட்டில் புழக்கத்தில் உள்ள பண அளவே பண அளிப்பு.

37. **பண அளிப்பை தீர்மாணிக்கும் காரணிகள் யாவை?**

- ரொக்க இருப்பு விகிதம் (CRR)
- ரொக்க இருப்பு வைப்பு விகிதம் (RDR)
- ரொக்க வைப்பு விகிதம் (CDR)
- சட்டபூர்வ நீர்மை விகிதம் (SLR)

38. **மீள் பணவீக்கம் பற்றி குறிப்பு வரைக.**

- வேலை வாய்ப்பு, உற்பத்தி குறையாமல் கடன்களை கட்டுப்படுத்தி பணவீக்கத்தை குறைக்கும் செயல்களே மீள் பணவீக்கம்.
- வங்கிக் கடன், தவணைமுறை கொள்முதல் கட்டுப்படுத்தப்படும்.

39. **காகிதப் பணத்திட்டம் குறிப்பு வரைக.**

**காகிதப் பணத் திட்டம்:** • நாட்டின் மையவங்கியோ அல்லது கருவூலமோ அல்லது இரண்டுமோ வரையறையற்ற சட்டமுறை பணமாக காகிதப் பணத்தை புழக்கத்திற்கு வழங்கும் முறை.

- காகிதப் பணமதிப்பு நிர்ணயம் பொன், வெள்ளி முதலான உலோக மதிப்புகளை சார்ந்து இருக்காது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



40. **தேவை இழுப்பு பணவீக்கம் – செலவு உந்து பணவீக்கம் விளக்குக.**

**தேவை இழுப்பு பணவீக்கம்**

- அளிப்பு நிலையாக இருக்க பொருளுக்கான தேவை அதிகரிக்கும் போது விலை உயரும்.
- அதிக அளவு பணம் குறைந்த அளவு பண்டங்களை துரத்தும் நிலை.

**செலவு உந்தும் பணவீக்கம்**

- உற்பத்தியில் மூலப் பொருள்களின் செலவு உயர்ந்து உற்பத்தி செலவு அதிகரிப்பதால் விலை உயரும்.

41. **இந்திய பணக்குறியீடு பற்றி குறிப்பு வரைக.**

- இந்திய பணக்குறியீட்டை ₹ வடிவமைத்தவர் திரு. D.உதயக்குமார்.
- தேவநாகரி எழுத்து "ரா" வும் ரோமன் எழுத்து "R" இல் செங்குத்து கோடு இல்லாமலும் உள்ள வடிவம் ₹.
- இந்திய பணக் குறியீடு 2010 ஜூலை 15 ஆம் நாள் அமைச்சரவை கூட்டத்தில் தேர்வுசெய்யப்பட்டது.

42. **பணமதிப்பு பற்றிய கேம்பிரிஜ் சமன்பாடுகளை விளக்குக.**

I. **மார்ஷலின் சமன்பாடு** • M = PKY (அல்லது) $P = \frac{M}{KY}$

- M = பணத்தின் அளவு. • P = பொது விலைமட்டம்.
- Y = சமுதாயத்தின் மொத்த உண்மை வருமானம்.
- K = மக்கள் கையில் ரொக்கமாக வைத்திருக்கும் உண்மை வருமானத்தின் பகுதி.

II. **கீன்ஸின் சமன்பாடு:** • n= pk (அல்லது) $p = \frac{n}{k}$

- n = மொத்த பண அளிப்பு. • p = நுகர்ச்சிப் பொருட்களின் விலைமட்டம்.
- k = மக்கள் தங்கள் கையில் வைத்திருக்கும் வருமானத்தின் பகுதி.

43. **பணவீக்கத்தின் வகைகளைப் பற்றி எழுதுக.**

- **தவழும் பணவீக்கம்:** விலைவாசி உயர்வை மக்கள் எளிதாக உணர முடியாத அளவில் இருக்கும்.
- **நடக்கும் பணவீக்கம்:** பணவீக்கம் மிதமான விகித வேகத்தில் ஒற்றை இலக்கத்தில் அதிகரிக்கும்.
- **ஓடும் பணவீக்கம்:** ஆண்டு பணவீக்க விகிதம் 10 முதல் 20 சதவீத்தில் அதிகரிக்கும்.
- **தாவும் பணவீக்கம்:** ஆண்டு பணவீக்க விகிதம் 20 முதல் 100 சதவீத்தில் அதிகரிக்கும்.

44. **வணிக வங்கிகள் கடன் உருவாக்கும் முறை நுட்பத்தினை எழுதுக.**

- **கடன் உருவாக்கம்:** கடன்களையும் முன்பண அளிப்பையும் அதிகரிக்கும் செயல்.
- மொத்த பண அளிப்பில் கடன் பணத்தின் அளவினை அதிகரிக்கும் செயல்.
- மக்கள் தங்களது வங்கிக் கணக்கில் செலுத்தும் தொகையே முதல் நிலை வைப்புகள்.
- வழங்கப்படும் ஒவ்வொரு கடனும் புதிய வைப்பினை உருவாக்கும்.
- ரொக்க இருப்பு விகிதம் = 20% – முதல்நிலை வைப்பு ரூ.1000 எனில் 1000 + 800 + 640 +.......... என்று மொத்த வைப்புகளின் அளவு 5000 வரை அதிகரித்துச் செல்லும்.

45. **பணமதிப்பு நீக்கத்தின் நோக்கங்கள் யாவை?**

- கருப்பு பணத்தை ஒழிப்பது.
- லஞ்சப் பணத்தை தடுத்தல்.
- கள்ளப் பணத்தை தடுத்தல்.
- தீவிர வாத்திற்கு பணம் செல்வதை தடுத்தல்.

46. **வங்கியில்லா நிதியமைப்புகள் பற்றி குறிப்பு வரைக.**

- **வங்கியில்லா நிதியமைப்புகள்:**
- முழு வங்கிக்கான உரிமம் பெறாத, மையவங்கியால் கண்காணிக்கப்படாத நிதி நிறுவனம்.
- இவை முழுமையான வங்கிப் பணிகளை செய்யாமல் மற்ற நிதி பரிமாற்றங்களை மேற்கொள்கின்றன.
- மக்களின் சேமிப்பை வைப்புகளாக திரட்டி முதலீட்டு நடவடிக்கைகளுக்கு கடன் வழங்குகின்றன.
- கடன் பெற்று கடன் வழங்கும் இவை பணச் சந்தையிலும் மூலதனச் சந்தையிலும் செயல்படுகின்றன.
- **உதாரணம் :** காப்பீட்டு நிறுவனங்கள், யூனிட் டிரஸ்ட், நிதிக் கழகங்கள்.

47. **நபார்டின்(NABARD) பணிகள் யாவை?**

- ஊரக தொழில்களுக்கு மறுகடன் வழங்குதல்.
- வட்டார ஊரக வங்கிகளை ஆய்வு செய்தல்.
- மாநில அரசுகளுக்கு 20 ஆண்டு நீண்ட கால கடன் அளித்தல்.
- RBI ஆங்கிகாரம் வழங்கியுள்ள நிதி நிறுவனங்களுக்கு கடன் அளித்தல்.
- மைய அரசினால் அங்கிகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு நீண்டகால கடன் அளித்தல்.
- தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் தவிர்த்து மற்ற கூட்டுறவு வங்கிகளை ஆய்வு செய்தல்.
- வேளாண்மை, ஊரக வளர்ச்சிக்கான ஆய்வு மற்றும் வளர்ச்சி நிதியினை பராமரித்தல்.

48. **இந்திய தொழில் நிதிக் கழகத்தின் பணிகள் யாவை?**

- இந்திய ரூபாய் மற்றும் அயல்நாட்டுப் பணத்தில் நீண்ட காலக் கடன்களை வழங்குதல்.
- சம உரிமை பங்குகள், முன்னுரிமைப் பங்குகள், கடன் பத்திரங்களுக்கு ஒப்புறுதியளித்தல் மற்றும் வாங்குதல்.
- இறக்குமதியாகும் தொழில் துறை இயந்திரங்களுக்கான கடனுக்கு உத்திரவாதம் அளித்தல்.
- வெளிநாட்டு நிறுவனங்களிடம் இருந்து வாங்கப்படும் கடனுக்கு உத்திரவாதம் அளித்தல்.
- பின் தங்கிய மாவட்டங்களில் தொழில் தொடங்க குறைந்த வட்டியில் கடன் வழங்குதல்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**49. பண மதிப்பிறக்கம் என்றால் என்ன?**

- ஒரு நாட்டின் மையவங்கி அந்த நாட்டின் பணத்தை மற்ற நாடுகளின் பணமதிப்பில் தானாக முன்வந்து குறைத்து நிர்ணயம் செய்வதாகும்.

**50. வாணிப வீதம் என்றால் என்ன?**

- ஏற்றுமதி பொருளின் விலைக்கும், இறக்குமதி பொருளின் விலைக்கும் இடையே உள்ள வீதம்.

**51. கடன் கட்டுப்பாட்டுக் முறைகளைக் கூறுக.**

**கடன் அளவு கட்டுப்பாட்டு முறைகள்**

- வங்கி விகிதக் கொள்கை. • வெளிச்சந்தை நடவடிக்கைகள். • மாறும் ரொக்க இருப்பு விகிதம்.

**கடன் தன்மை கட்டுப்பாட்டு முறைகள்**

- கடன் பங்கீடு. • நேரடி நடவடிக்கைகள். • நெறிமுறை தூண்டல். • விளம்பரப் படுத்துதல்.
- நுகர்வோர் கடனை முறைப்படுத்துதல். • ஈட்டுக் கடனின் விளிம்பு நிலையை மாற்றுதல்.

**52. பணச் சந்தை – மூலதனச் சந்தை வேறுபடுத்துக.**

**பணச் சந்தை:** • அதிக நீர்மைத் தன்மையுடைய குறுகிய காலத்தில் முதிர்ச்சியடையும் நிதிக் கருவிகளை கையாளும் சந்தை.

- ஒரு நாள் முதல் ஒரு வருடத்தில் முதிர்ச்சியடையும் நிதிக் கருவிகள் இங்கு கையாளப்படும்.
- **கருவிகள்**: வைப்புச் சான்றுகள், அரசு பத்திரங்கள், வணிகப் பத்திரங்கள், மாற்றுச்சீட்டுகள், கருவூல உறிதிச்சீட்டுகள்.

**மூலதனச் சந்தை:** • நீண்ட கால நிதிக் கருவிகளை கையாளும் சந்தை.

- உற்பத்தி நோக்கில் நிறுவனங்கள், அரசுக்கு தேவைப்படும் நிதியை அளிக்கும் இடமே மூலதனச் சந்தை.
- **கருவிகள்** : பங்குகள், கடனீட்டுப் பத்திரங்கள், அந்நியச் செலாவணி.

**53. பன்னாட்டுப் பொருளியலின் உள்ளடக்கத்தை பட்டியலிடுக.**

- தூய வாணிபக் கோட்பாடு • கொள்கை சச்சரவுகள் • பன்னாட்டு வாணிப கூட்டமைப்பு ஒன்றியங்கள்.
- பன்னாட்டு நிதி மற்றும் வாணிப ஒழுங்குப்படுத்தும் நிறுவனங்கள்.

**54. இறக்குமதி பங்களவு என்றால் என்ன?**

- இறக்குமதியின் அளவை அல்லது மதிப்பை நிர்ணயம் செய்வதே இறக்குமதி பங்களவு.
- ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட பொருளின் இறக்குமதியின் அளவு அல்லது மதிப்புக்கு அரசு விதிக்கும் வரம்புக் கட்டுப்பாடு.

**55. வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நோக்கங்கள் யாவை?**

- விற்பனையை விரிவுப்படுத்துதல். • இயற்கை வளங்களை கையகப்படுத்துதல்.
- வாணிப பரவலாக்கம். • போட்டி இடர்களை குறைத்தல்.

**56. மாறுகின்ற பணமாற்று வீதத்தின் பொருள் யாது?**

- அந்நியச் செலாவணிக்கான தேவையும் – அளிப்பும் தன்னிச்சையாக செயல்பட்டு தீர்மானிக்கப்படுவதே மாறும் பணமாற்று வீதம்.
- மிதக்கும் அல்லது நிலையற்ற பணமாற்று வீதம் என்றும் அழைக்கப்படுகிறது.

**57. மொத்த மற்றும் நிகர பண்ட மாற்று வாணிப வீதத்தை விளக்குக.**

- **நிகர பண்ட மாற்று வாணிப வீதம்** $(Tn)$:
- ஏற்றுமதி விலைகளுக்கும் இறக்குமதி விலைகளுக்கும் இடையே உள்ள விகிதம் – தாசிக்
- $Tn = \left[\frac{P_X}{P_M}\right] \times 100$ இதில் $P_X$ = ஏற்றுமதி விலை குறியீட்டெண். $P_M$ = இறக்குமதி விலை குறியீட்டெண்.
- **மொத்த பண்ட மாற்று வாணிப வீதம்** $(Tg)$: மொத்த ஏற்றுமதி – இறக்குமதி பொருட்களின் அளவு குறியீட்டு எண்களுக்கு இடையே உள்ள விகிதத்தை 100 ஆல் பெருக்க கிடைக்கும் மதிப்பு.
- $Tg = \left[\frac{Q_X}{Q_M}\right] \times 100$ $Q_X$ = ஏற்றுமதி அளவு குறியீட்டெண். $Q_M$ = இறக்குமதி அளவு குறியீட்டெண்.

**58. அயல் நாட்டு வாணிப கொடுப்பல் நிலைக்கும் – அயல் நாட்டு வாணிப செலுத்து நிலைக்கும் உள்ள மூன்று வேறுபாடுகளை எழுதுக.**

| வாணிப கொடுப்பல் நிலை | அயல் நாட்டுச் செலுத்து நிலை |
|---|---|
| ஏற்றுமதி – இறக்குமதி பண்டங்களின் மதிப்பு மட்டும் கணக்கிடப்படும். | ஏற்றுமதி – இறக்குமதி பண்டங்களின் மதிப்புகள், பணிகள், மூலதனம், பணம் உட்பட அனைத்து இனங்களும் கணக்கிடப்படும். |
| புலனாகும் இனங்கள் மட்டும் அடங்கும். | புலனாகும், புலனாகாத இனங்களும் அடங்கும். |
| புலப்படும் வாணிகம் எனவும் அழைக்கப்படும் | நடப்பு கணக்கு, மூலதன கணக்கு, மையவங்கி தீர்வு கணக்கு என்று மூன்று இனங்களாக பிக்கப்படும். |

**59. பொருளாதார ஒருங்கிணைப்பின் பல்வேறு வடிவங்கள் யாவை?**

- தடையற்ற வாணிகப் பகுதி. • பொதுச் சந்தை. • சுங்கவரி ஒன்றியம். • பொருளாதார ஒன்றியம்.

**60. வாணிக ஒத்துழைப்பு தொகுதிகள் என்றால் என்ன ?**

- சில நாடுகள் தங்களுக்கிடையே ஒத்துழைப்பை ஏற்படுத்தி பிற நாடுகளின் பொருளாதாரத்துடன் தனது பொருளாதாரத்தையும் இணைத்து உருவாக்கும் அமைப்புகள்.

**61. ஐ.எம்.எப்.(IMF)–ன் கடன் வழங்கும் திட்டங்களில் ஏதேனும் மூன்றினை எழுதுக.**

- அடிப்படை கடன் வசதி. • விரிவாக்கப்பட்ட நிதி வசதி. • ஈடுசெய் நிதி வசதி.
- தாங்கிருப்பு வசதி. • கட்டமைப்பு சரிசெய்தல் வசதி. • துணைநிதி வசதி.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



62. **பலதரப்பு ஒப்பந்தம் என்றால் என்ன?**

• பன்னாட்டு வணிகத்தில் ஒரே குழுவாக ஒன்றிணைந்து செயல்படும் நாடுகள் வரிகள், கட்டணங்களை குறைத்து ஏற்றுமதி – இறக்குமதிகளை எளிதாக்க கையெழுத்திட்டு செயல்படும் ஒப்பந்தம்.

63. **பன்னாட்டு வாணிகத் தொன்மைக் கோட்பாட்டிற்கும் புதிய கோட்பாட்டிற்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.**

| இயல்புகள் | தொன்மை வாணிபக் கோட்பாடு | புதிய பன்னாட்டு வாணிபக் கோட்பாடு |
|---|---|---|
| பன்னாட்டு வாணிகத்தின் அடிப்படை | உழைப்பு சார்ந்த மதிப்பு கோட்பாடு. | பொது மதிப்புக் கோட்பாடு. |
| மாதிரி | ஒரு காரணி (உழைப்பு) மாதிரி. | இரு காரணி (உழைப்பு, மூலதன) மாதிரி. |
| ஒப்புமைச் செலவு வேறுபட காரணம் | உழைப்பாளரின் உற்பத்தி திறன் வேறுபடுதல். | காரணிகளின் கிடைப்பளவு வேறுபாடுகள். |

64. **பிரிக்ஸ் மாநாடு 2018 ன் நிகழ்ச்சி நிரல் பற்றி எழுதுக .**

• பிரிக்ஸின் 10 வது உச்சி மாநாடு ஜூலை 2018 ல் தென் ஆப்பிரிக்காவின் ஜோகன்ஸ்பர்கில் நடைபொற்றது.

**விவாத தலைப்புகள்:**

• பகிரத்தக்க வளமை. • நாடுகளின் அமைதி மற்றும் பாதுகாப்பு. • உள்ளடக்கிய வளர்ச்சி.

• வணிகப் பிரச்சணைக்கள். • உலகளாவிய அரசு நிர்வாகம்.

65. **பிரிக்ஸ் அமைப்பின் சாதனைகளை பட்டியலிடுக.**

**பிரிக்ஸ் அமைப்பின் சாதனைகள்:** • அவசரகால கையிருப்பு வசதி உருவாக்கப்பட்டது.

• பொருளாதார மற்றும் நிதித் துறையில் உறுப்பு நாடுகளை ஒன்றிணைந்து செயல்பட பலப்படுத்தியது.

• புதிய மேம்பாட்டு வங்கி (பிரிக்ஸ் மேம்பாட்டு வங்கி) உருவாக்கப்பட்டது.

• சீனாவின் ஷாங்காய் நகரில் புதிய மேம்பாட்டு வங்கியின் தலைமை அலுவலகத்தை நிறுவியது.

• பன்னாட்டு உறவு மற்றும் நிர்வாகத்தில் பிரிக்ஸ் நாடுகள் கூடுதல் ஆதிக்கம் பெற்றுள்ளது.

66. **சார்க்கின் பணிகளை சுருக்கமாக எழுதுக.**

• தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்பை பராமரித்தல். • வறுமை ஒழிப்பு திட்டங்கள் மூலம் வறுமையை அகற்றுதல்.

• உறுப்பு நாடுகளின் பொதுவான பிரச்சனைகளுக்கு தீர்வு காணுதல்.

• உறுப்பு நாடுகளுக்கு இடையே உறவை மேம்படுத்துதல். • பயங்கரவாத செயல்களை தடுத்தல்.

67. **ஆசியான் அமைப்பின் பணிகள் யாவை?**

• தடையற்ற பொருள், பணிகள், மூலதன போக்குவரத்துக்கான வழிமுறைகளை உருவாக்குதல்.

• தடையற்ற வாணிகம் நடைபெற அனுமதி அளித்தல். • போட்டியை மேம்படுத்துதல்

• சந்தை, முதலீட்டு வாய்ப்புகளை பொற்று தருதல் • பல துறைகளில் ஒத்துழைப்பை வளர்த்தல்.

• பொருளாதார மேம்பாட்டு இடைவெளியை குறைத்தல்.

68. **வரி விதிப்பு விதிகளை விளக்குக.**

• **செலுத்து திறன் விதி:** மக்களின் வரி செலுத்தும் திறனுக்கு ஏற்ப வரி வதித்தல்.

• **நிச்சைய தன்மை விதி:** வரி வீதம், வரியின் அளவு, வரி செலுத்தும் காலம், வரிசெலுத்தும் முறை, வரிவிலக்குகள் போன்றவற்றில் உறுதித் தன்மை இருக்க வேண்டும்.

• **வசதி விதி:** வரி வசூலிக்கும் முறை, வரி செலுத்தும் காலம் மக்களின் வசதிக்கு ஏற்ப இருக்க வேண்டும்.

• **சிக்கன விதி:** வரி விதிப்பதிலும் வரி வசூலிப்பதிலும் நிதி விரயமாக கூடாது.

69. **தனியார் நிதிக்கும் பொது நிதிக்கும் உள்ள ஒற்றுமைகளை எழுதுக.**

• **பகுத்தறியும் தன்மை:** இரண்டும் குறைந்த செலவில் அதிக நலத்தை பெற ஆராய்ந்து செலவு செய்கின்றன.

• **கடனுக்கான வரையறை:** இவைகளின் கடன்கள் வரையறுக்கப்பட்டவை.

• **வளங்களின் பயன்பாடு:** இவைகள் உத்தம அளவில் வளங்களை பயன்படுத்த முனைகின்றன.

• **நிர்வாகம்:** அரசு மற்றும் தனியார் செயல்திறனை பொருத்து நிர்வாகம் அமையும்.

70. **நவீன அரசின் பணிகள் யாவை?**

• **பாதுகாப்பு:** உள்நாட்டு அயல்நாட்டு அழிவில் இருந்து மக்களை பாதுகாத்தல்.

• **நீதி:** நீதி பரிபாலனம் மற்றும் தகராறுகளைத் தீர்த்தல்.

• **சமூக நலன்:** கல்வி, சமூக பாதுகாப்பு, சமூக காப்பீடு, உடல் நலம், துப்புரவு வழங்குதல்.

• **கட்டமைப்பு:** சமூக மற்றும் பொருளாதார கட்டமைப்புகளை உருவாக்குதல்.

• **நிறுவனங்கள்:** அரசு தனது நிறுவனங்களை வெற்றிகரமாக நடத்துதல்.

• **சமூக நீதி:** நிதித் தீர்வை மூலம் வருவாயை மறுபகிர்வு செய்தல்.

• **பேரினப் பொருளாதாரக் கொள்கை:** பண – நிதிக் கொள்கைகளை செயல்படுத்துதல்.

• **முற்றுரிமைக் கட்டுப்பாடு** : முற்றுரிமை வாணிப கட்டுப்பாடுகளை செயல்படுத்துதல்.

71. **வரியின் பண்புகள் யாவை?**

• வரியை கட்டாயம் செலுத்த வேண்டும். • வரியை செலுத்த மறுப்பது தண்டனைக்குறிய குற்றம்.

• நன்மை எதிர்பாராமல் வரியை செலுத்த வேண்டும். • வரி வரிசெலுத்துவொரின் தியாகத்தை உள்ளடக்கியது.

• வரி சட்டத்தை மீறியதற்காக விதிக்கப்படுவதல்ல.

72. **உள்ளாட்சி அமைப்புகளின் வகைகள் யாவை?**

• கிராம ஊராட்சி. • ஊராட்சி ஒன்றியம் • மாவட்ட ஊராட்சி • பேருராட்சி

• நகராட்சி • மாநகராட்சி • நகரியம் • ராணுவக்கூட வாரியங்கள்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**73. பொதுக் கடனை திருப்பி செலுத்தும் முறைகள் யாவை?**

• மூழ்கும் நிதி. • கடனை மறுத்தல். • வரவு– செலவு திட்ட உபரி. • பகுதியாக செலுத்துதல்.

• கடனை மாற்றுதல். • மூலதனத் தீர்வை. • வட்டிவீதத்தை குறைத்தல்.

**74. நேர்முக வரி – மறைமுக வரி வேறுபடுத்துக.**

| | நேர்முக வரி | மறைமுக வரி |
|---|---|---|
| 1. | வருமானம் மற்றும் சொத்துகள் மீது விதிக்கப்படும். | பண்டங்கள் மற்றும் பணிகளின் மீது விதிக்கப்படும். |
| 2. | வளர்வீதம். | தேய்வீதம். |
| 3. | ஒரு நபர் மீது விழுகிறது. | பல்வேறு நபர்கள் மீது விழுகிறது. |
| 4. | வரி ஏய்ப்புக்கு வாய்ப்பு உள்ளது. | வரி ஏய்ப்பு கடினம். |
| 5. | பணவீக்கத்தை குறைக்கும். | விலை உந்து பணவீக்கத்தை ஏற்படுத்தும். |
| 6. | மற்றவர் மீது சுமையை மாற்ற முடியாது. | மற்றவர் மீது சுமையை மாற்ற முடியும். |
| 7. | வருமான வரி, சொத்து வரி, நிறும வரி, | உற்பத்தி வரி, விற்பனை வரி, சுங்கவரி.கேளிக்கை வரி. |

**75. முதன்மை பற்றாக்குறை என்றால் என்ன?**

• நிதிப் பற்றாக்குறையில் இருந்து வட்டி செலுத்தல்களை கழித்தப்பின் உள்ள பற்றாக்குறை.

• முதன்மைப் பற்றாக்குறை = நிதிப் பற்றாக்குறை – வட்டி செலுத்தல்கள்.

• இது அரசின் உண்மையான நிதி சுமையை காட்டும்.

• அரசின் வட்டி செலுத்தலுக்கான தேவையை குறிக்கும்.

• முன்னர் வாங்கிய கடனுக்கான வட்டியை கணக்கில் கொள்ளாது.

**76. நிதிக் கொள்கையின் கருவிகள் யாவை?**

• வரி விதித்தல். • பொதுச் செலவு. • பொதுக்கடன். • உதவித் தொகைகள். • மானியங்கள்.

**77. பல்வேறு வகையான காற்று மாசுகளை விளக்குக.**

• **உட்புற காற்று மாசு:**

மனிதர்களின் வசிப்பிடத்திற்குள் உள்ள காற்றில் தீங்கு விளைவிக்கக் கூடிய அசுத்தங்கள் கலந்து இருப்பது.

**உதாரணம் :** திட எரிபொருள் கொண்டு சமைத்தல்.

• **வெளிப்புற காற்று மாசு:**

காற்று மண்டலத்தில் திட, திரவ, வாயு வடிவ அசுத்தங்கள் கலந்து இருப்பது. **உதாரணம் :** தொழிற்சாலை புகை.

**78. நீர் மாசுக்கான காரணங்கள் யாவை?**

• கழிவு நீர் வெளியேற்றம் • எண்ணெய் சிந்துதல். • அமில மழை • புவி வெப்பமடைதல்.

• நீர் நிலைகளில் திடக் கழிவுகளைக் கொட்டுதல். • நீர் நிலைகளில் ஆலைக் கழிவுகளைக் கொட்டுதல்.

• நீர் நிலைகளில் பிராண வாயு குறைதல்.

**79. இ – கழிவுகள் என்பதன் பொருள் யாது?**

• பயன்பாடற்ற அல்லது செயலிழந்த மின்னணு சாதனங்களை நீக்கும் போது அல்லது மறுசுழற்சி செய்யும் போது தோன்றும் கழிவுகள்.

• **உதாரணம்:** பயனற்ற – கணினிகள், வானொலி, தொலைகாட்சிப் பெட்டிகள், ஸ்கேனர் மற்றும் பிற.

**80. நில மாசு என்றால் என்ன? அதற்கான காரணங்களை குறிப்பிடுக.**

• **நிலம் மாசுபடுதல்** : திட, திரவ, வாயு வடிவிலான கழிவுகளை நிலத்தில் கொட்டுவதால் நிலத்தின் தன்மை பாதிக்கப்பட்டு அதன் தரம் குறைவானதாக மாறுதல்.

• **நிலம் மாசுபடுவதற்கான காரணங்கள்:**

• பூச்சிக்கொள்ளி மருந்துகள்– இரசாயன உரங்கள். • காடுகளை அழித்தல். • சுரங்கத் தொழில்கள்.

• கட்டுமானப் பணிகள். • அணுமின் கழிவுகள். • தொழில்மயமாதல். • மண்ணில் புதைத்தல்.

• வேளாண்மை நடவடிக்கைகள்.

**81. குறிப்பு வரைக. 1) அமில மழை. 2) பருவநிலை மாற்றம்.**

• **அமில மழை** :

• சல்பர் – டை– ஆக்சைடு, நைட்ரஜன் ஆக்சைடு வளிமண்டலத்தில் உள்ள நீருடன் வினை புரிந்து பூமிக்கு மழை மற்றும் பனிப் பொழிவாக திரும்பும் நிகழ்வு.

• காற்று மாசுவின் விளைவே அமில மழை.

• **காலநிலை மாற்றம்** :

• வளிமண்டலத்தில் பசுமைக் குடில் வாயுக்களின் அளவு வளர்ந்து கொண்டே செல்வதால் நீண்ட காலத்தில் ஏற்படும் பருவநிலை மாறுபாடுகள்.

**82. பொருள்சார் அணுகுமுறையின் பொருள் யாது?**

• பொருளாதாரத்திற்கும் சுற்றுச் சூழலுக்கும் இடையே உள்ள தொடர்பை **வெப்ப இயக்கவியலின் முதல் விதியை** ஆதாரமாகக் கொண்டு விளக்குவதே பொருள் சார் அணுகுமுறை – ஆலன் நீஸ், மற்றும் R.V.அயர்ஸ்.

• மொத்த பொருளியல் செயல்பாடுகள் உள்ளிடு, வெளியீடு ஆகியவற்றுக்கு இடையே சமமான ஓட்டமாக உள்ளது.

• உற்பத்தி முறைக்குள் நுழையும் எதுவும் கண்டிப்பாக வெளியேறும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

83. **பொருளாதாரத்திற்கும் சுற்றுச் சூழலுக்கும் இடையை உள்ள தொடர் யாது?**
- மனிதனின் வாழ்க்கை முறையை சுற்றுச்சூழலே பெரிதும் தீர்மானிக்கிறது.
- பொருளாதார நடவடிக்கைகளுக்கு தேவையான மூலப்பொருள்களை சுற்றுச்சூழல் வழங்குகிறது.
- நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இயற்கை வளங்களை தொடர்ந்து பயன்படுத்தும் போது அதன் அளவு குறையும்.
- உற்பத்தி, நுகர்ச்சியின் இறுதிக் கழிவுகள் இயற்கை சூழலை பாதிக்கிறது.
- இதனால் மூலப் பொருட்களின் தரம் குறைய உற்பத்தி செலவு அதிகரிக்கும்.
- இயற்கை வளங்களை உயர்திறனுடன் பங்கீடு செய்வதை பற்றியதே சுற்றுச்சூழல் பொருளியல்.

84. **நீடித்த அல்லது வளம்குன்றா வளர்ச்சி என்பதன் பொருள் யாது?**
- வருங்கால தலைமுறையினர் தங்கள் தேவைகளை நிறைவேற்ற எந்த தடையும் இல்லாத வகையில் சுற்றுச்சூழலை பாதிக்காமல் தற்போதுள்ள மக்களின் தேவைகளை நிறைவு செய்தல்.
- தற்போது உள்ள மக்களுக்கு மட்டுமின்றி எதிர்கால சந்ததியினருக்கும் வளங்களை வைத்துவிட்டு சுற்றுச்சூழலை பாதிக்காத வகையில் அடைகின்ற மேம்பாடு.

85. **திட்டமிடலுக்கு ஆதரவான கருத்துகள் யாவை?**

**திட்டமிடலுக்கு ஆதரவான கருத்துகள்**
- நாட்டில் அங்காடிகளின் இயக்கத்தை முடுக்கிவிடுதல் மற்றும் உறுதியாக்குதல்.
- வேலையின்மை மற்றும் மறைமுக வேலையின்மையை அகற்றுதல்.
- அனைத்து துறைகளிலும் சமமான முன்னேற்றத்தை ஏற்படுத்துதல்.
- வேலைவாய்ப்பை அதிகரித்தல்.
- வறுமை – ஏற்றத்தாழ்வை குறைத்தல்.

86. **பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கும் பொருளாதாரம் சாராத காரணிகள் யாவை?**
- மனித வளம். • தொழில்நுட்ப அறிவு. • அரசியல் சுதந்திரம். • சமுக அமைப்பு. • ஊழலற்ற நிர்வாகம்.
- முன்னேற்றம் அடைவதற்கான விருப்பம். • நீதிபோதனை, அறநெறி சமூக விழுமியங்கள்.
- சூதாட்ட மற்றும் பரம்பரை சொத்துரிமை முதலாளித்துவம்.

87. **வறுமையின் நச்சு சுழற்சியை தடுப்பது எப்படி?**

I. **அளிப்பு பக்கம்:** • நுகர்வு அளவு குறையாமல் முதலீட்டையும் மூலதன ஆக்கத்தையும் அதிகரித்தல்.
• கடந்த கால சராசரி சேமிப்பு விகிதத்தை விட இறுதிநிலை சேமிப்பு அளவை அதிகரித்தல்.

II. **தேவை பக்கம்:** • ஒரே நேரத்தில் பலவகை தொழில்களில் முதலீடு செய்தல்.
• அனைத்து தொழில்களிலும் சரிநிகர் சமமான வளர்ச்சியை உருவாக்குதல்.

88. **செயல்பாட்டு திட்டமிடலுக்கும் – அமைப்பு முறை திட்டமிடலுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?**
- **செயல்பாட்டு திட்டமிடல்:** ஒரு நாடு பெற்றுள்ள பொருளாதார – சமூக அமைப்பு மாறாமல் சீர்கேடுகளை நீக்குவதற்கான வழிகாட்டுதல்களே பணிகள் திட்டமிடல்.
- **அமைப்புமுறை திட்டமிடல்:** பொருளாதார அமைப்பு முறையில் பொருத்தமான மாற்றங்களை செய்து இலக்குகளை அடையும் திட்டமிடல்.

89. **இந்திய திட்டமிடலின் பரிணாம வளர்ச்சியை மதிப்பிடுக.**
- **விஸ்வேஸ்வரய்யா** (1934) : இந்திய திட்டமிடலுக்கான அடித்தளத்தை அமைத்தவர். இந்திய பொருளாதார திட்டமிடல் என்ற தனது நூலில் பத்தாண்டு திட்டத்தை விளக்கினார்.
- **நேரு** (1938) : 1938 ல் தேசிய திட்டக் குழுவை நேரு அமைத்தார்.
- **பம்பே திட்டம்** (1940) : மும்பையின் எட்டு தொழிலதிபர்கள் 15 ஆண்டுக்கான தொழில் முதலீட்டு திட்டத்தை உருவாக்கினர்.
- **S.N. அகர்வால்** (1944): வேளாண்மை – கிராம பொருளாதார முன்னேற்றத்திற்கான காந்திய திட்டத்தை உருவாக்கினார்.
- **M.N. ராய்** (1945): மக்கள் திட்டத்தை உருவாக்கினார்.
- **ஜெயபிரகாஷ் நாராயணன்** (1950) சர்வோதயத் திட்டம் ஒன்றை முன்மொழிந்தார்.

90. **நிதி ஆயோக்கின் பணிகள் யாவை?**
- கூட்டுறவு மற்றும் போட்டி அடிப்படையிலான கூட்டாசி முறை.
- திறன் உருவாக்குதல்.
- நாட்டின் நிகழ்வுகளில் மாநிலங்களை பங்கெடுக்க வைத்தல்.
- பரவலாக்கப்பட்ட திட்டமிடல்.
- தொலைநோக்கு மற்றும் காட்சி திட்டமிடல்.
- நிபுணர்களின் கூட்டமைப்பை உருவாக்குதல்.
- வெளியுலகத் தொடர்பை ஒருங்கிணைத்தல்.
- உகந்ததாக்குதல்.
- கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல்.
- சச்சரவு தீர்த்தல்.

91. **பொருளாதார மாதிரியில் இருந்து பொருளாதார அளவையியல் மாதிரியை வேறுபடுத்துக.**

| பொருளாதார மாதிரி | பொருளாதார அளவையியல் மாதிரி |
|---|---|
| பொருளதார கோட்பாடுகளின் படி உருவாக்கப்படும் | கோட்பாடுகளின் நம்பகத் தன்மையை புள்ளி விவரங்களின் படி சோதனை செய்யும். |
| பிழைக்கருத்து இல்லை. | பிழைக்கருத்து உண்டு. |
| கணித சமன்பாடுகளில் கோட்பாட்டுத் தொடர்பை குறிப்பிடுகிறது. | பொருளாதார மாதிரியின் அனுபவ அளவை குறிப்பிடுகிறது. |




Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

92. **வறுமையின் நச்சு சுழற்சிக்கான காரணங்களை வரைபடத்துடன் விளக்குக.**

- **அளிப்பு பக்கம்:** உண்மை வருமானம் குறைய சேமிப்பு குறைய முதலீடும் குறையும் எனவே உற்பத்தி திறன் குறைந்து வருமானம் மேலும் குறையும்.

- **தேவைப் பக்கம்:** உண்மை வருமானம் குறைய தேவை குறைய முதலீடும் குறையும் எனவே உற்பத்தி திறன் குறைந்து வருமானம் குறையும்.




93. **புள்ளியியலின் பணிகள் யாவை?**

- விவரங்களை துல்லியமாக வழங்குகிறது.
- பரந்த விவரங்களை சுருக்கி தருகிறது.
- ஒப்பீடுகளை செய்ய உதவுகிறது.
- மதிப்பீடுகளை செய்ய உதவுகிறது.
- கொள்கைகளை உருவாக்க உதவுகிறது.
- எடுகோள்களை உருவாக்கவும், சோதனை செய்யவும் உதவுகிறது.

94. **பொருளாதார அளவையியலின் நோக்கங்கள் யாவை?**

- பொருளாதார நடவடிக்கைகளை முன்கணித்தல் மூலம் அறிந்து விளக்க உதவுகிறது.
- மாறிகளுக்கு இடையே நிறுவப்பட்ட உறவுகளை மீண்டும் நிருபிக்க உதவுகிறது.
- புதிய கோட்பாடுகளையும், உறவுகளையும் நிறுவ உதவுகிறது.
- எடுகோள்களை சோதனை செய்ய உதவுகிறது.
- முழு தொகுப்பின் பண்புகளை மதிப்பீடு செய்ய உதவுகிறது.

95. **இந்தியாவில் புள்ளியியல் ஆதார அமைப்புகளின் முக்கியத்துவங்களை எழுதுக.**

- **மத்திய புள்ளியியல் அலுவலகம்**
- பொருளாதார விசாரணைகளை நடத்துதல்.
- புள்ளிவிவர சேகரிப்புகளை ஒருங்கிணைத்தல், பரிசோதித்தல், தர மேம்பாட்டினை உறுதிப்படுத்துதல்.
- தேசிய கணக்குகளை ஒருங்கிணைத்தல்.
- நுகர்வோர் குறியீட்டெண்ணை அமைத்தல்.
- தொழில்துறை விசாரணைகளை நடத்துதல் தொழில் பிரிவுகளை நிர்ணயித்தல்.
- தொழிற்சாலை உற்பத்தி மற்றும் சமூக புள்ளிவிவரங்களை சேகரித்தல்.
- **தேசிய மாதிரி கூறெடுத்தல் அலுவலகம்**
- சமுக பொருளாதார புள்ளிவிவர விசாரணைகளை மேற்கொள்ளுதல்.
- விசாரணைகளை வடிவமைத்தல், ஆய்வு செய்தல்.
- களப்பணிகளை மேற்கொள்ளுதல்.
- புள்ளிவிவர ஒருங்கிணைப்பு, செயலாக்கம், வெளியீட்டுத்துறை.
- **தேசிய புள்ளியியல் குழுவும், இந்திய புள்ளியியல் நிறுவனமும்** பல்வேறு பணிகளை மேற்கொள்கிறது.

96. **ஒட்டுறவு (REGRESSION) பகுப்பாய்வின் பணிகள் யாவை?**

- மேற்கணக்கீட்டிற்கு அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது.
- நேர்கோடு அல்லாத தொடர்புகளையும் ஆய்வு செய்கிறது.
- சார்பு மாறியின் மதிப்பை ஊகம் செய்ய உதவுகிறது.
- போலி ஒட்டுறவு இல்லை.
- தனித்த மாறி சார்பு மாறியின் மதிப்பில் ஏற்படுத்தும் மாற்றத்தை அளவிட உதவுகிறது.
- இரு மாறிகளுக்கு இடையே உள்ள காரண விளைவை ஆராய்ந்து சார்புத் தொடர்பை ஏற்படுத்துகிறது.
- தனித்த மாறியின் குறிப்பிட்ட மதிப்புக்கு சார்பு மாறியின் மதிப்பை ஊகம் செய்ய உதவுகிறது.

97. **பல்வேறு வகையான உடன் தொடர்புகளை (CO–RELATION) கூறி விளக்குக.**

- **நேர்மறை உடன் தொடர்பு:** இரு மாறிகளின் மதிப்புகள் ஒரே திசையில் நகர்தல். $Y = a + bx$
- **எதிர்மறை உடன் தொடர்பு:** இரு மாறிகளின் மதிப்புகள் எதிர் எதிர் திசையில் நகர்தல். $Y = a - bx$
- **எளிய உடன் தொடர்பு:** இரு மாறிகளுக்கு இடையே உள்ள தொடர்பு. $Y = a + bx$
- **பன்முக உடன் தொடர்பு:** இரண்டிற்கும் மேற்பட்ட காரணிகளுக்கு இடையே உள்ள தொடர்பு. $QD_X = f(P_X P_c P_X P_s t Y)$.
- **பகுதி உடன் தொடர்பு:** மற்ற காரணிகள் மாறாது எனக் கொண்டு இரண்டு மாறிகளின் தொடர்பை ஆராய்தல் $QD_X = f(P_X)$.
- **நேர்கோட்டு உடன் தொடர்பு:** இரு மாறிகளின் மாறும் விகிதங்கள் ஒரே அளவாக இருத்தல். $Y = a + bx$
- **வளைக்கோட்டு உடன் தொடர்பு:** இரு மாறிகளின் மாறும் விகிதங்கள் மாறி இருத்தல். $Y = a + bx^2$



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**5 – மதிப்பெண் மற்றும் பிற வினா விடைகள்**

**1. பேரினப் பொருளியலின் பரப்பு எல்லையை விவரி.**

- **தேசிய வருவாய்** : தேசிய வருவாயின் இலக்கணம், கணக்கிடும் முறைகள், அதன் அடிப்படைக் கருத்துகள், துறைகளின் பங்களிப்பு மற்றும் அதன் முக்கியத்துவங்கள் பற்றியது.
- **பணவீக்கம்:** தொடர்ச்சியாக பொது விலை மட்டம் அதிகரித்தலே பணவீக்கம்.


பணம், பணவீக்கம், பணவாட்டம், குறீயீட்டெண், பண அளவு கோட்பாடுகள், வங்கிகள் பற்றிய பகுதி.

- **வாணப சுழற்சி** : வாணிப சுழற்சியின் செழிப்பு, பின்னிறக்கம், மந்தம், மீட்சி ஆகிய நிலைகளையும், அதன் கோட்பாடுகளையும் விளக்கும் பகுதி.
- **வறுமை – வேலையின்மை** : வறுமை மற்றும் வேலையின்மையின் இயல்புகள், காரணங்கள், தீர்வு நடவடிக்கைகள், வளங்களை ஒதுக்கீடு செய்தல் பற்றி ஆய்வு செய்யும் பகுதி.
- **பொருளாதார வளர்ச்சி** : பொருளாதார வளர்ச்சி, முன்னேற்றம், அதனை தீர்மானிக்கும் காரணிகளை விளக்கும் பகுதி.
- **பொருளாதாரக் கொள்கைகள்:** பண மற்றும் நிக்கொள்கைகள் அதன் நோக்கங்கள், கருவிகள், செயல்பாடுகள் மற்றும் அதன் தாக்கங்களை அறியும் பகுதி.

**2. முதலாளித்துவம், சமதர்ம பொருளாதாரம், கலப்புப் பொருளாதாரம் இவற்றின் தன்மைகளை ஒப்பிடுக.**

| தன்மைகள் | முதலாளித்துவம் | சமதர்மம் | கலப்பு பொருளாதாரம் |
|---|---|---|---|
| **உற்பத்தி மூலங்களின் உரிமை** | தனியார் | அரசு (பொது) | தனியார் (மற்றும்) அரசு |
| **பொருளாதார நோக்கம்** | இலாபம் | சமுக நலன் | இலாபம் – சமூக நலன் |
| **அரசின் பங்கு** | உள்ளீடு கட்டுப்பாடு | முழு ஈடுபாடு | குறைந்த பங்கு |
| **வருவாய் பங்கீடு** | சமனற்ற நிலை | சமநிலை | குறைந்த சமநிலையற்ற நிலை |
| **நிறுவனத் தன்மை** | தனியார் | அரசு | தனியார் மற்றும் அரசு |
| **பொருளாதார சுதந்திரம்** | முழு சுதந்திரம் | சுதந்திரமின்மை | கட்டுப்பாட்டுடன் சுதந்திரம் |
| **முக்கிய பிரச்சனை** | சமமின்மை | திறனின்மை | சமமின்மை மற்றும் திறனின்மை |
| **மைய பிரச்சனைகளின் தீர்வு** | தடையில்லா சந்தைமுறை | மத்திய திட்டமுறை | தடையில்லா சந்தை முறை (மற்றும்) மத்திய திட்ட முறை |

**3. நடவடிக்கைகள் அடிப்படையில் ஒரு பொருளாதார அமைப்பு செயல்படுவதை விவரி.**




- பொருளாதார அமைப்பின் அடிப்படை நடவடிக்கைகள் உற்பத்தி மற்றும் நுகர்வு.
  பிற நடவடிக்கைகள் இதற்கு உதவுகின்றன.
- பொரளாதார நடவடிக்கைகளின் தலையாய நோக்கம் பொருளாதார வளர்ச்சி.
- உற்பத்தி மற்றும் நுகர்வுக்கு பரிமாற்றம் உதவுகிறது.
- இவை பொருளாதார – பொருளாதாரமற்ற நடவடிக்கைகளால் பாதிக்கப்படுகின்றன.
- **பொருளாதார நடவடிக்கைகள்:** போக்குவரத்து, வங்கிப்பணி, விளம்பரம், திட்டமிடல் மற்றும் பிற.
- **பொருளாதாரமற்ற நடவடிக்கைகள்:** சுற்றுச்சூழல், ஆரோக்கியம், கல்வி, ஆட்சிமுறை மற்றும் பிற.
- **வெளி நடவடிக்கைகள்:** ஏற்றுமதி, இறக்குமதி, பன்னாட்டு உறவுகள் மற்றும் பிற.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



4. **முதலாளித்துவம் – சமதர்ம பொருளாதாரம் ஆகியவற்றின் இயல்புகளை ஒப்பிடுக.**

| தன்மைகள் | முதலாளித்துவம் | சமதர்ம பொருளாதாரம் |
|---|---|---|
| உற்பத்தி மூலங்களின் உரிமை | தனியார் | அரசு (பொது) |
| பொருளாதார நோக்கம் | இலாபம் | சமூக நலன் |
| அரசின் பங்கு | உள்ளீடு கட்டுப்பாடு | முழு ஈடுபாடு |
| வருவாய் பங்கீடு | சமனற்ற நிலை | சமநிலை |
| நிறுவனத் தன்மை | தனியார் | அரசு |
| பொருளாதார சுதந்திரம் | முழு சுதந்திரம் | சுதந்திரமின்மை |
| முக்கிய பிரச்சனை | சமமின்மை | திறனின்மை |
| மைய பிரச்சனைகளின் தீர்வு | தடையில்லா சந்தைமுறை | மத்திய திட்டமுறை |

5. **தேசிய வருவாயை கணக்கிடும் முறைகளை விளக்குக.**

- **உற்பத்தி முறை:**
- ஒரு நாட்டின் ஒரு ஆண்டின் மொத்த உற்பத்தியை கணக்கிடும் முறை.
- வேளாண்மை, தொழில், வணிகம், சேவைகள் போன்ற துறைகளில் முடிவுற்ற பண்டங்கள் – பணிகளின் ஒட்டுமொத்த மதிப்பே தேசிய உற்பத்தி.
- இது சரக்கு முறை அல்லது ஊட்டப்பட்ட மதிப்பு முறை என்றும் அழைக்கப்படுகிறது.
- **வருமான முறை:**
- உற்பத்திக் காரணிகள் பெற்ற அனைத்து வருமானங்களையும் கூட்டி தேசிய வருவாயை கணக்கிடும் முறை.
- $Y = w + r + I + \pi + (R - P)$
- $w$ = கூலி. $r$ = வாடகை. $I$ = வட்டி. $\pi$ = இலாபம். $R$ = ஏற்றுமதி. $P$ = இறக்குமதி.
- இந்த பகிர்வு அணுகுமுறை காரணிகள் ஈட்டும் வருமான முறை என்றும் அழைக்கப்படுகிறது.
- **செலவின முறை:**
- ஓர் ஆண்டில் சமுதாயத்தால் மேற்க்கொள்ளப்படும் அனைத்து செலவுகளையும் கூட்டி தேசிய வருமானத்தை கணக்கிடலாம்.
- $GNP = C + I + G + (X - M)$
- C = நுகர்வுச் செலவு. I = முதலீட்டுச் செலவு. G = அரசின் செலவு. X = ஏற்றுமதி. M = இறக்குமதி.

6. **தேசிய வருவாய் கணக்கீட்டில் உள்ள சிரமங்கள் யாவை ?**

- **மாற்றுச் செலுத்தல்கள்**: அரசு அளிக்கும் ஓய்வூதியம், உதவித்தொகை, மானியம் போன்ற மாற்று செலுத்தல்கள் தேசிய வருவாய் கணக்கீட்டில் சேர்க்கப்படுவதில்லை.
- **தேய்மானங்கள் மதிப்பிடுவதில் சிக்கல்**: தேய்மான மதிப்பீடு, விபத்து இழப்பீடு, பழுது கட்டணங்கள் போன்றவற்றை சரியாக மதிப்பீடு செய்து தேசிய வருவாயில் இருந்து கழிப்பது கடினம்.
- **பணம் செலுத்தப்படாத சேவைகள்**: பெண்கள் தம் வீட்டில் அர்பணிப்புடன் செய்யும் சமையல், தையல், சுத்தம் செய்தல் போன்ற பல பணிகளின் மதிப்புகள் தேசிய உற்பத்தியில் சேர்க்கப்படுவதில்லை.
- **சட்டவிரோத வருமானம்** : கருப்பு பணம், சூதாட்டம், கடத்தல், மது தயாரிப்பு, கருப்பு சந்தை நடவடிக்கைகள் தேசிய உற்பத்தியில் சேர்க்கப்படுவதில்லை.
- **மூலதன இலாபம்** : வீடு, பங்குகள் போன்ற மூலதன சொத்துக்களை அதிக விலைக்கு விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் மூலதன இலாபம் தேசிய உற்பத்தியில் சேர்க்கப்படுவதில்லை.
- **சுய நுகர்வு, விலைமாற்றம்**: சுய நுகர்வுக்காக ஒதுக்கிய உற்பத்தி, விற்பனை செய்யாமல் ஒதுக்கிய உற்பத்தி மற்றும் அதன் விலைமாற்றம் சிக்கல்களை தருகிறது.
- **புள்ளி விவரச்சிக்கல்**: புள்ளி விவரங்களை சேகரித்தல் சவாலான பணியாக உள்ளது. புள்ளி விவரங்கள் கிடைக்காமை, நம்பகத்தன்மை இன்மை, திறன் குறைவு, அர்பணிப்பு இன்மை, பலமுறை கணக்கிடுதல் போன்றவை சிக்கல்களை ஏற்படுத்துகிறது.

7. **தேசிய வருவாயின் முக்கியத்துவங்களை விவரி.**

- திட்டமிடவும், செயல்படுத்தவும் அதன் விளைவுகளை மதிப்பிடவும் பயன்படுகிறது.
- வட்டாரங்கள், நாடுகளுக்கு இடையே வருமானத்தை ஒப்பிட உதவுகிறது.
- பொருளாதார மாதிரிகளை உருவாக்க பயன்படுகிறது.
- பணவியல், நிதியியல் கொள்கைகளை உருவாக்கவும் செயல்படுத்தவும் உதவுகிறது.
- பல்வேறு துறைகளின் பங்களிப்பு, அவைகளின் முக்கியத்துவம் பற்றி அறிய உதவுகிறது.
- தலா வருமானம் பொருளாதார நலனை அறிய பயன்படுகிறது.
- காரணிகளின் வருமான பகிர்வை அறிய உதவுகிறது.
- பேரியல் பொருளாதார காரணிகளையும் அதன் எதிர்கால போக்கையும் கண்டறிய பயன்படுகிறது.

8. **புவி வெப்பமயமாதலின் விளைவுகள் யாவை**?

**புவி வெப்பமயமாதலின் விளைவுகள்**: • வேளாண்மை, தோட்டக்கலை, சுற்றுச்சூழல் அமைப்பு பெரிதும் பாதிக்கப்படுகிறது.

- மழையளவு குறையும், கடல் மட்டம் உயரும். • சுற்றுப்புறச் சூழலில் சமநிலையற்ற தன்மை ஏற்படும்.
- மழை பெய்யும் போக்கையும் தட்பவெப்ப நிலைகளையும் பாதிக்கும்.
- நோய் பரப்பும் உயிரினங்கள் பெருகும் தொற்று நோய்கள் பரவும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

9. **பொருளாதார ஆய்வில் சமூக கணக்கிடுதலின் அவசியத்தை விவாதி.**

- சமூக கணக்கிடுதல் மூலமாகவும் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.
- பொருளாதாரம் குடும்பங்கள், நிறுவனங்கள், அரசு, வெளிநாட்டுத் துறை என பிரிக்கப்படும்.
- பல துறைகளின் பரிமாற்றங்கள் பதியப்படும் அதன் தொடர்புகளும் கண்டறியப்படும்.
- பல்வேறு துறைகளுக்கு இடையே உள்ள புள்ளியியல் பொருளாதாரக் காரணிகளின் தொடர்பை விளக்குகிறது.
- பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்க உதவுகிறது.
- எதிர்கால பொருளாதார நிலையை துல்லியமாக கணிக்க உதவுகிறது.
- GDP யில் பல்வேறு துறைகளின் பங்களிப்பை மதிப்பிட பயன்படுகிறது.

10. **சே யின் அங்காடி விதியினை திறனாய்வு செய்க.**

- அளிப்பு அதற்கான தேவையை உருவாக்காது. தேவை அதற்கான அளிப்பை உருவாக்கும்.
- உற்பத்தி அதிகரிக்கும் அளவுக்கு தேவை அதிகரிக்காது.
- தானாக சரிசெய்து கொள்ளும் அமைப்பு வேலையின்மையை குறைக்காது.
- மூலதன விகிதத்தை அதிகரித்து வேலையின்மையை குறைக்கலாம்.
- பணம் நடுநிலையாக இருக்காது.
- தனிநபர்கள், நிறுவனங்கள் எதிர்பாராத–எதிர்கால செலவுகளுக்காக பணத்தை இருப்பு வைப்பர்.
- அளவுக்கு அதிகமான உற்பத்திக்கு வாய்ப்பு உள்ளது.
- முழு வேலை நிலைக்கு வாய்ப்பு இல்லை. குறை வேலைவாய்ப்பு நிலையே நிலவும்.
- அரசின் தலையீடு அவசியம்.

11. **வேலையின்மையின் வகைகளை விவரி.**

- **பருவகால வேலையின்மை:**
- வருடத்தின் சில காலங்களில் மட்டும் நிலவும் வேலையின்மை **உதாரணம்: பனிக்கூழ்** மற்றும் **வேளாண்மை.**
- ஆண்டின் குறிப்பிட்ட காலத்தில் மட்டும் வேலைவாய்ப்பு கிடைக்கும். • மற்ற காலங்களில் வேலை இருக்காது.
- **உடன்பாடில்லா வேலையின்மை:**
- உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் ஏற்படுவது.
- **காரணங்கள்:** இடம்பெயராமை, மூலப்பொருள் பற்றாக்குறை, திறமை குறைவு, இயந்திர பழுது.
- வேலையை இழந்து புதிய வேலையை தேடும் உழைப்பாளர்கள் இதில் அடங்குவர்.
- **படித்தவர்(கற்றறோர்) வேலையின்மை**: வேலை செய்யும் விருப்பம் இருந்தும் உரிய கல்வித் தகுதி பெற்றவர்கள் வேலையில்லாமல் இருப்பது அல்லது பகுதிநேர வேலையில் இருப்பது.
- **மறைமுக வேலையின்மை**: தேவைக்கும் அதிகமான தொழிலாளர்கள் பணியில் இருக்கும் நிலை. **உதாரணம்:** வேளாண்மை.
- பணியில் இருந்து சிலரை நீக்கினாலும் உற்பத்தி குறையாது. • தொழிலாளரின் இறுதிநிலை உற்பத்தி திறன் பூஜ்யம்.
- **வாணிபசூழல் வேலையின்மை**: • வாணிப சூழலின் பின்னிறக்கப் பகுதியில் உற்பத்தி, வருமானம் குறைவதால் ஏற்படும் வேலையின்மை. • பொதுமான உறுதித் தேவை இல்லாத நிலையில் நிகழ்வதாகும்.
- **அமைப்புசார் வேலையின்மை** : • சமூக அமைப்பில் ஏற்படும் பெரிய மாற்றங்களால் உருவாகும் வேலையின்மை.
- **காரணங்கள்**: பொருளுக்கான தேவை குறைதல், மூலப்பொருட்கள் கிடைக்காமை, மூதலீடு பற்றாக்குறை.
- கைபேசியின் தேவை அதிகரித்ததால் கேமர மற்றும் வானொலி பெட்டிகளின் தேவை குறைந்தது.
- **தொழில்நுட்ப வேலையின்மை** : • உழைப்பை சேமிக்கின்ற மூலதன செறிவு மிக்க புதிய கண்டுபிடிப்புகளால் தோன்றும் வேலையின்மை.

12. **தொன்மைக் கோட்பாடு – கீன்ஸ் கோட்பாடு ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடுகளை விளக்குக.**

| கீன்ஸ் கோட்பாடு | தொன்மைக் கோட்பாடு |
|---|---|
| குறுகியகால சமநிலை. | நீண்டகால சமநிலை. |
| சேமிப்பு கெடுதல். | சேமிப்பு நல்லது. |
| பேரியல் அணுகுமுறை. | நுண்ணியல் அணுகுமுறை. |
| முதலாளித்துவம் முரண்பாடுடையது. | முதலாளித்துவம் சரியானது. |
| வட்டி வீதம் மாறிக்கொண்டே இருக்கும். | வட்டி வீதம் மாறாது. |
| அரசின் தலையீடு உண்டு. | தலையிடாக் கொள்கை வலியுறுத்தப்படுகிறது. |
| தேவை அதன் அளிப்பை உருவாக்கும். | அளிப்பு அதன் தேவையை உருவாக்கும். |
| பணம் பரிமாற்றத்திற்கும் சேமிக்கவும் உதவும். | பரிமாற்றத்திற்கு மட்டுமே பணம் உதவும். |
| குறை – முழு வேலைவாய்ப்பு நிலவும். | முழு வேலைவாய்ப்பு மட்டுமே நிலவும். |
| வட்டி வீதத்தை தீர்மானிப்பது பணத்தின் தேவையும் – அளிப்பும். | வட்டி வீதத்தை தீர்மானிப்பது சேமிப்பும் – முதலீடும். |
| ரொக்க இருப்பை விட்டுக் கொடுப்பதற்கான வெகுமதியே வட்டி. | சேமிப்புக்கான வெகுமதியே வட்டி. |
| சேமிப்பு – முதலீட்டு சமநிலையை உருவாக்குவது வருமான மாற்றம். | சேமிப்பு – முதலீட்டு சமநிலையை உருவாக்குவது வட்டிவீத மாற்றம். |
| தேவைக்கு ஏற்ப வரவு – செலவு திட்டத்தை பின்பற்றலாம். | சமநிலை வரவு – செலவு திட்டம் ஆதரிக்கப்படுகிறது. |




Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

13. **ADF மற்றும் ASF க்கு இடையிலான சமநிலையை வரைபடம் மூலம் விளக்குக.**

**எடுகோள்கள்:**

- இல்லங்கள்(C), நிறுவனங்கள்(I) என்ற இரு துறைகள் மட்டும் உள்ளன.
- நுகர்வுச் சார்பு நேர்கோடாகும்.
- முதலீடு தன்னிச்சையானது.

**வரைபட விளக்கம்:**




- ADF தொகுதேவை வளைகோடு, ASF தொகு அளிப்பு வளைகோடு.
- ADF கோடு, ASF கோட்டை வெட்டும் E புள்ளியில் விளைவுள்ள தேவை தீர்மானிக்கப்படும்.
- E புள்ளியில் சமநிலை வேலைவாய்ப்பு $N_O$ .
- இது குறை வேலைவாய்ப்பு சமநிலையாகும்.
- E புள்ளி வரை மட்டும் உற்பத்தியாளர் உழைப்பாளர்களை பணியில் அமர்த்துவர்.
- $N_O$ வுக்கும் $N_f$ க்கும் இடையே உள்ள வேறுபாடு வேலையின்மையை காட்டும்.
- $N_O$ நிலைக்கு பிறகு வேலைவாய்ப்பை அதிகரித்தால் ASF விட ADF குறைவாக இருக்கும்.
- ஒரு பொருளாதாரம் முழு வேலைவாய்ப்பு நிலைக்கு முன்பே சமநிலை அடையும்.

14. **பெருக்கி செயல்படும் (இயங்கும்) விதத்தை விளக்குக.**


**பெருக்கி:** முதலீடு மாற்றத்திற்கும் தேசிய வருமான மாற்றத்திற்கும் உள்ள வீதம் $K = \frac{\Delta Y}{\Delta I}$

**பெருக்கி செயல்படும் விதம்:**

- அரசு பொதுப் பணிக்காக ரூ.100 கோடி செலவு செய்யும் போது அது மக்களுக்கு வருமானமாக அமையும்.
- MPC = 0.8 எனில் ரூ.80 கோடி நுகர்வு செலவாகவும், ரூ.20 கோடி சேமிப்பாகவும் அமையும்.
- ரூ.80 கோடி வருமானம் பெற்றவர்களின் MPC = 0.8 எனில் ரூ.64 கோடி நுகர்வு செலவாகவும், ரூ.16 கோடி சேமிப்பாகவும் அமையும்.
- இந்த வழியில் நுகர்வு செலவானது சங்கிலித் தொடர் போல செல்லும்.

$\Delta Y = 100 + (100 \times 0.8) + 100 \times (0.8)^2 + 100 \times (0.8)^3 \ldots..$

- = 100 + 80 + 64 + . . . . . . .
- = 500
- அதாவது $K = \frac{1}{1-MPC} = \frac{1}{1-0.8} = \frac{1}{0.2} = 5$
- இங்கு அரசின் தொடக்க முதலீடு ரூ.100 கோடி.
- பெருக்கியின் மதிப்பு = 5.
- பெருக்கியின் இறுதி விளைவு = $100 \times 5 = 500$ கோடி.




**வரைபட விளக்கம்**

- **புள்ளி A யில், Y = C = 500 , C = 100 + 0.8 (500) = 500 , S = 0 = I**
- **புள்ளி B யில், Y = 1000 , C = 100 + 0.8 (1000) = 900 , S = 100 = I**
- **புள்ளி D யில் ,Y = 1050 , C = 100 + 0.8 (1050 ) = 940 , S = 110 = I**
- முதலீடு 10 அதிகரிக்கும் போது வருமானம் 50 அதிகரிக்கும் இது பெருக்கியின் விளைவாகும்.

15. **பி.சி. மஹலநோபிஸ் பற்றி குறிப்பு வரைக.**

- நவீன புள்ளியியலின் நிறுவனர் மற்றும் இந்திய புள்ளியியலின் தந்தை **பி.சி. மஹலநோபிஸ்.**
- அரவின் பிறந்த நாள் ஜூன் 29 புள்ளியியல் தினமாக கொண்டாடப்படுகிறது.
- இரண்டாவது ஐந்தாண்டுதிட்டம் **பி.சி.மஹலநோபிஸ்** மாதிரியின் அடிப்படையில் அமைக்கப்பட்டது.

16. **இயற்கை வேளாண்மை என்றால் என்ன**?

**இயற்கை வேளாண்மை:** இயற்கை இடுபொருட்களான உயிரின மற்றும் தாவர கழிவுகளை பயன்படுத்தி இயற்கை பூச்சி விரட்டிகளை கொண்டு பயிரிடும் முறை.

17. **அயல் நாட்டு வாணிப நிலை (வாணிப கொடுப்பல் நிலை) என்றால் என்ன? வகைகள் யாவை?**

**அயல்நாட்டு வாணிப நிலை**

- ஒரு நாட்டின் ஒரு ஆண்டின் கண்ணுக்கு புலனாகும் பண்டங்களின் ஏற்றுமதி – இறக்குமதி மதிப்புகளுக்கு இடையே உள்ள வேறுபாடு. புலப்படும் வாணிகம் என்றும் அழைக்கப்படும்.
- சாதக வாணிப நிலை = ஏற்றுமதி > இறக்குமதி (X > M).
- பாதக வாணிப நிலை = ஏற்றுமதி < இறக்குமதி (X < M).



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



18. **முடுக்கி செயல்படும் (இயங்கும்) விதத்தினை விளக்குக.**


**முடுக்கி (β ):** நுகர்வு மாற்றத்திற்கும் தூண்டப்பட்ட முதலீடு மாற்றத்திற்கும் உள்ள வீதம் $\beta = \frac{\Delta I}{\Delta C}$

**முடுக்கி செயல்படும் விதம் :**

- 1000 நுகர்வு பொருட்களை தயாரிக்க 100 இயந்திரங்கள் தேவை.
- அதன் ஆயுட்காலம் 10 வருடங்கள்.
- ஆண்டு தோறும் 10 இயந்திரங்களை மாற்ற வேண்டும்.
- 10 சதவீதம் நுகர்வுத் தேவை அதிகரிக்கும் எனில் மொத்த புதிய இயந்திரங்களுக்கான தேவை = 20.
- 10 சதவீதம் நுகர்வுத் தேவையின் அதிகரிப்பு 100 சதவீதம் இயந்திரங்களின் தேவையை உருவாக்கும்.
- சிறிய நுகர்வு பொருட்களின் தேவை மாற்றம் அதிக முதலீடு மாற்றத்தை ஏற்படுத்தும்.

**வரைபட விளக்கம்:**

- SS சேமிப்புக் கோடு, II முதலீட்டுக் கோடு.
- $E_1$ புள்ளியில் பொருளாதாரம் $OY_1$ வருமானத்துடன் சமநிலையில் இருக்கும்.
- முதலீடு $I_4$ என அதிகரிக்க $E_3$ புள்ளியில் சமநிலை ஏற்படும் சமநிலை வருமானம் $OY_3$
- அதிகரித்த முதலீடு $I_2 I_4$ வெளிப்புற காரணிகளால் ஏற்பட்டது எனில் அதிகரித்த வருமானம் $Y_1Y_3$ முடுக்கியின் செயலால் ஏற்பட்டதாகும்.




19. **கீன்ஸின் நுகர்வுச் சார்பு உளவியல் விதியினை வரைபடம் மூலம் விளக்குக.**


**கீன்ஸ் நுகர்வுச் சார்பின் உளவியல் விதி:**

சமுதாயத்தின் உண்மை வருமானம் அதிகரிக்கும் போது ஒட்டுமொத்த நுகர்வு அதிகரிக்கும் ஆனால் வருமானம் அதிகரித்த வீதத்தில் நுகர்வு அதிகரிக்காது, அதனை விட குறைவான வீதத்தில் அதிகரிக்கும்.

**எடுகோள்கள்**

- மற்றவை மாறாது நுகர்வு வருமானத்தை மட்டும் சார்ந்தது.
- நாட்டில் இயல்பான, சுமுகமான சூழல் நிலவுகிறது.
- முதலாளித்துவத்தில் தலையிடாக் கொள்கை பின்பற்றப்படும்.

| வருமானம் (Y) | நுகர்வு (C) | சேமிப்பு (S) |
|---|---|---|
| 120 | 120 | 0 |
| 180 | 170 | 10 |
| 240 | 220 | 20 |




**வரைபட விளக்கம்:**

- **வருமானம் உயர நுகர்வு செலவும் உயரும்.**
  வருமானம் 180 என உயர நுகர்வு செலவு 170 என உயர்ந்துள்ளது.
- **அதிகரித்த வருமானம் நுகர்வு செலவிற்கும் சேமிப்புக்கும் இடையே சில விகிதத்தில் பிரிக்கப்படும்.**
  அதிகரித்த நுகர்வு(170) அதிகரித்த வருமானத்தை விட 10 குறைவு.
- **அதிகரித்த வருமானம் நுகர்வு மற்றும் சேமிப்பை அதிகரிக்கச் செய்யும்.**
  வருமானம் 240 ஆக உயர நுகர்வு 220, சேமிப்பு 20 என உயர்ந்துள்ளது.

20. **பெருக்கியின் வகைகள் யாவை? விளக்குக.**

**பெருக்கியின் வகைகள் (Classification of Multiplier)**

- **இயங்கா பெருக்கி**
- முதலீடு மாற்றமும் வருமான மாற்றமும் உடன் நிகழ்பவை. காலஇடைவெளி கருத்தில் கொள்ளப்படாது.
- உடன் நிகழ், காலமில்லா, தர்க்க ரீதியான பெருக்கி என்றும் அழைக்கப்படுகிறது.
- **இயங்கும் பெருக்கி**
- முதலீடு மாற்றமும் வருமான மாற்றமும் உடன் நிகழாது. காலஇடைவெளி கருத்தில் கொள்ளப்படும்.
- தொடர் நிகழ் பெருக்கி என்றும் அழைக்கப்படுகிறது.
- **பெருக்கியின் வகைகள்**(Kinds of Multiplier)
- வரி பெருக்கி. • வேலைவாய்ப்பு பெருக்கி. • வெளிநாட்டு வாணிப பெருக்கி. • முதலீட்டுப் பெருக்கி.
- எதிர்மறை பெருக்கி. • நேர்மறை பெருக்கி.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



21. **நுகர்வுச் சார்பின் அக மற்றும் புறக் காரணிகளை விளக்குக.**

I: **நுகர்வை பாதிக்கும் அகக் காரணிகள்**

- **முன்னெச்சரிக்கை நோக்கம்**: எதிர்பாராத செலவுகளுக்காக பணத்தை ரொக்கமாக வைத்திருப்பது.
- **வாணிப நொக்கம்**: வியாபாரத்தை முன்னேற்றும் நோக்கம்.
- **எதிர்பார்க்கும் நோக்கம்**: எதிர்கால தேவைகளுக்கான விருப்பம்.
- **கணிக்கும் நோக்கம்**: பாராட்டை அனுபவிப்பதற்கான நோக்கம்.
- **முன்னேறும் நோக்கம்**: வாழ்க்கை தரத்தை முன்னேற்ற விரும்புதல்.
- **கர்வநோக்கம்**: விட்டுச் செல்வதற்கான விருப்பம்.
- **பேராசை நோக்கம்**: முற்றிலும் மோசமான உள்ளுணர்வு.

II : **நுகர்வை பாதிக்கும் புறக் காரணிகள்**

- **வருமானப் பகிர்வு**: சமநிலை வருமான பகிர்வு நுகர்வு விருப்பத்தை அதிகரிக்கும்.
- **விலை அளவு**: விலையின் வீழ்ச்சி நுகர்வு விருப்பத்தை அதிகரிக்கும்.
- **வட்டி வீதம்**: அதிக வட்டி வீதம் சேமிப்பை அதிகரிக்கும் நுகர்வைக் குறைக்கும்.
- **கூலி அளவு**: நுகர்வுக்கும் கூலிக்கும் இடையே நேர்மறை தொடர்பு இருக்கும்.
- **நிதி கொள்கை**: வரி குறையும் எனில் நுகர்வு அதிகரிக்கும்.
- **நுகர்வோர் கடன்**: எளிய தவணை முறை வசதிகள் இருப்பின் நுகர்வு அதிகரிக்கும்.
- **எதிர்பாராத இலாபம் அல்லது நட்டம்**: எதிர்பாராத இலாபம் நுகர்வை அதிகரிக்கும். எதிர்பாராத நட்டம் நுகர்வை குறைக்கும்.

22. **மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தி திறனுக்கும் (MEC), முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தி திறனுக்கும் (MEI) உள்ள வேறுபாடுகள் யாவை?**

| மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தி திறன் (MEC) | முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தி திறன் (MEI) |
|---|---|
| மூலதனத்தின் அளிப்பு விலையை பொருத்தது. | மூதலதனத்தின் தேவை மாற்றம், விலையை தூண்டும் மாற்றத்தை பொருத்தது. |
| ஒவ்வொரு மூலதன அலகிலிருந்து கிடைக்கும் விளைவை குறிக்கிறது. | மூலதனத்தின் விளைவு விகிதத்தை குறிக்கிறது. |
| வரைபடத்தில் படுகிடை அச்சில் மூலதன இருப்பு அளக்கப்படுகிறது. | வரைபடத்தில் படுகிடை அச்சில் மூதலீடு அளவு அளக்கப்படுகிறது. |
| MEC ஒரு இருப்பு கருத்துரு. | MEI ஒரு ஓட்டக் கருத்துரு. |
| ஒவ்வொரு வட்டிவீத அளவிலும் உத்தம மூலதன இருப்பை நிர்ணயிக்கிறது. | ஒவ்வொரு வட்டிவீத அளவிலும் நிகர முதலீட்டை நிர்ணயிக்கிறது. |

23. **பணத்தின் பணிகளை விளக்குக.**

**பணத்தின் பணிகள்:**

- **பரிமாற்ற கருவி:**
- பண்டங்கள், பணிகளை பரிமாற்றம் செய்திட பொது ஏற்புத் தன்மை கொண்டது பணம்.
- இடையீட்டு கருவியாக செயல்படுதல் பணத்தின் அடிப்படை பணி.
- **மதிப்பின் அளவுகோல்:**
- பண்டங்கள்– பணிகளின் மதிப்புகள் பண அலகில் விலைகளாக அளவிடப்படுகிறது.
- பணம் ஒரு பொதுவான அளவுகோல், கணக்கீட்டின் அலகு.
- பரிவர்த்தனை விகிதங்களை தீர்மானிக்க பணம் உதவுகிறது.
- **மதிப்பின் நிலைகலன்** :
- பணத்தின் நீர்மைத் தன்மையால் எளிதாக சொத்துக்களை வாங்கவும் விற்கவும் இயலும்.
- பொருட்களை சேமித்து வைக்க பணம் எளிய வசதியான கருவி.
- **வருங்கால செலுத்தல்களுக்கான அடிப்படை:**
- கடன் பெறுவதையும், திரும்ப செலுத்துவதையும் பணம் எளிதாக்குகிறது.
- பணம் வருங்கால செலுத்தல்களுக்கு இடையீட்டுக் கருவியாக செயல்படுகிறது.
- **வாங்கும் திறனை மாற்றும் கருவி:**
- வாங்கும் திறனை எளிதாகவும், விரைவாகவும் இடம் விட்டு இடம் மாற்ற வசதியான கருவியாக பணம் விளங்குகிறது.
- **கடனுக்கான அடிப்படை** :
- கடன் முறைக்கு அடிப்படையாக பணம் அமைந்துள்ளது.
- ரொக்க பணமே கடனுக்கான அடிப்படையாகும்.

24. **மீள் ரெப்போ விகிதம் குறிப்பு வரைக?**

**மீள் ரெப்போ விகிதம் :** வணிக வங்கியிடம் இருந்து வாங்கும் கடனுக்கு ரிசர்வ் வங்கி கொடுக்க விரும்பும் வட்டிவீதம்.

- மீள் ரெப்போ விகிதத்தின் அதிகரிப்பு வணிக வங்கிகளின் பணத்தை ரிசர்வ் வங்கியிடம் கொண்டு சேர்க்கும்.
- இது வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் கடனுக்கான வட்டி வீதத்தை அதிகரிக்கும்.




Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



25. **வணிக சுழற்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்க.**

- **பூரிப்பு:**
- பொருளாதார நடவடிக்கைகள் உயர்ந்து முழுவேலை வாய்ப்பு நிலையை தாண்டும்.
- உற்பத்தி, கூலி, இலாபம், வட்டிவீதம் போன்றவை உயர்ந்து செல்லும்.
- அனைத்து பொருளாதார நடவடிக்கைகளும் உயர்ந்து உச்சமாகும்.
- வங்கி கடனுக்கான தேவை உயரும் நம்பிக்கைகள் வளரும்.
- **பின்னிறக்கம்:**
- பூரிப்பில் வெடிப்பு நிலை ஏற்பட்டு பொருளாதார நடவடிக்கைகள் பின் நோக்கி திரும்பும்.
- உற்பத்தி, கூலி, இலாபம், வட்டிவீதம் போன்றவை குறைய துவங்கும்.
- பணச் சந்தை, பங்குச்சந்தை, வணிக நடவடிக்கைகள் சுணக்கமடையும். அவநம்பிக்கைகள் தோன்றும்.
- **மந்தம்:**
- பொருளாதார நடவடிக்கைகள் இயல்பு நிலைக்கு கீழ் மிகத் தீவிரமாக குறையும்.
- உற்பத்தி பொருட்கள் கிடங்குகளில் தேங்கும்.
- உற்பத்தி, கூலி, இலாபம், வேலைவாய்ப்பு மிக குறைவாக இருக்கும்.
- வணிக சுழற்சியின் மிக மோசமான கட்டம் மந்தம். மந்தத்தின் கீழ் நிலை தொட்டி.
- **மீட்சி:**
- பொருளாதார நடவடிக்கைகள் மேல் நோக்கி திரும்பும்.
- தன்னிச்சை முதலீடு அதிகரிப்பதால் வேலைவாய்ப்புகள் உருவாகும்.
- வருமானம் உயர தேவை உயரும் தேக்கமடைந்த பொருட்கள் விற்பனையாகும்.
- உற்பத்தி, கூலி, இலாபம், வேலைவாய்ப்பு மீட்சி பெறும்.




26. **மெய்நிகர் பணம் குறிப்பு வரைக.**

- **மெய்நிகர் பணம்**
- மைய வங்கியை சாராமல் பணப் பெருக்கத்தை சீர் செய்தல், நிதி மாற்றத்தை சரிபார்த்தல் ஆகிய சுதந்திரம் கொண்ட டிஜிட்டல் நாணயங்களே மெய்நிகர் பணம்.
- **உதாரணம்:** பிட்காயின்.

27. **பற்றாக்குறை நிதியாக்கம் என்றால் என்ன?**

- **பற்றாக்குறை நிதியாக்கம்:** கடன் வாங்குதல், புதிய காகித பணத்தை அச்சிட்டு வெளியிடுதல் ஆகியவற்றின் மூலம் அரசு வரவு – செலவு திட்டத்தில் ஏற்படும் பற்குறையை ஈடு செய்யும் முறை.
- இதன் விளைவாக தொகு தேவையை உயர்ந்து பணவீக்கம் ஏற்படும்.

28. **வணிக சுழற்சி என்றால் என்ன?**

- **வணிக சுழற்சி**
- வேலைவாய்ப்பு, உற்பத்தி, வருமானம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒட்டுமொத்த பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்படும் அலைவுகளே வணிகச் சுழற்சி.
- நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்படும் ஏற்ற, இறக்கங்களே வணிக சுழற்சி.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



29. **ஒரு பொருளாதாரத்தில் பணவீக்கத்திற்கான காரணங்கள் மற்றும் விளைவுகள் யாவை?**

**பணவீக்கத்திற்கான காரணங்கள்:**

- **பண அளிப்பு உயர்வு:** பண அளிப்பு உயர்வினால் மொத்த தேவை அதிகரித்து பணவீக்கம் தோன்றும்.
- **செலவிடத் தகுந்த வருவாய் உயர்வு:** வரிவிகிதம் குறைதல், தேசிய வருவாய் அதிகரித்தல் போன்ற காரணங்களால் செலவிடத் தகுந்த வருவாய் அதிகரிக்கும் எனில் பணவீக்கம் ஏற்படும்.
- **உயர்ந்து வரும் பொது செலவுகள்:** வளர்ச்சி மற்றும் சமூக நல திட்டங்களில் அரசின் செலவு அதிகரிப்பதால் பணவீக்கம் ஏற்படும்.
- **மலிவுப் பணக்கொள்கை:** மலிவுப் பணக்கொள்கை கடன் பண அளவை அதிகரித்து பணவீக்கத்தை உருவாக்கும்.
- **ஏற்றுமதி உயர்வு:** ஏற்றுமதி உயர்வு உள் நாட்டில் அளிப்பை குறைத்து பணவீக்கத்தை உருவாக்கும்.

**பணவீக்கத்தின் விளைவுகள்:**

**உற்பத்தியின் மீதான விளைவுகள்:**

- வணிகத்தின் மீதான முதலீடுகள் அதிகரிக்கும்.
- பணத்தின் மதிப்பு குறைய சேமிப்பு குறையும்.
- அயல்நாட்டு மூலதனங்கள் வெளியேறும்.
- மூலதன திரட்சி குறையும் முதலீட்டில் பின்னடைவு ஏற்படும்.
- பதுக்கல் உயர் பணவீக்கத்தை ஏற்படுத்தும்.
- ஊக வாணிப செயல்பாடுகள் அதிகரிக்கும்.

**பகிர்வின் மீதான விளைவுகள்:**

- நிலையான வருமான பிரிவினர் பாதிக்கப்படுவர்.
- கடன் பெற்றவர்கள் ஆதாயத்தையும் கடன் அளித்தவர்கள் இழப்பையும் பெறுவர்.
- கடன் பத்திர முதலீட்டாளர்கள் பாதிக்கப்படுவர். பங்கு முதலீட்டாளர்கள் ஆதாயம் பெறுவர்.
- தொழில் முனைவோர்கள் ஆதாயம் பெறுவர்.


30. **பெருக்கியின் பயன்கள் யாவை?**

**பெருக்கி** : முதலீடு மாற்றத்திற்கும் தேசிய வருமான மாற்றத்திற்கும் உள்ள விதம் $K = \frac{\Delta Y}{\Delta I}$

**பெருக்கியின் பயன்கள்**


- வருமான–வேலைவாய்ப்பு கோட்பாட்டில் முதலீட்டின் முக்கியத்துவத்தை விளக்குகிறது.
- வாணிப சுழற்சியின் நிலைகளுக்கான காரணங்களை விளக்குகிறது.
- சேமிப்பு – முதலீட்டுச் சமநிலை ஏற்பட உதவுகிறது.
- அரசாங்க கொள்கைகளை உருவாக்க உதவுகிறது.
- வேலையின்மையை நீக்க உதவுகிறது. முழு வேலைவாய்ப்பு நிலையை அடைய உதவுகிறது.

31. **இர்விங் பிஷரின் பண அளவு கோட்பாட்டினை விவரி.**




**பண அளவு கோட்பாடு (இர்விங் பிஷர்)**

- பணத்தின் அளவிற்கும் பணத்தின் மதிப்பிற்கும் இடையே உள்ள தலைகீழ் தொடர்பை விளக்குகிறது.
- பரிமாற்றச் சமன்பாடு MV = PT (அல்லது) $P = \frac{MV}{T}$
- M = மொத்த காகித பண அளவு.
- V = பணத்தின் சுழற்சி வேகம்.
- P = பொது விலை மட்டம்.
- T = வாணிபத்தின் அளவு.
- இங்கு V மற்றும் T மாறாது எனவே
- பண அளவு மாறும் அதே விகிதத்தில் விலை மாறும். பணத்தின் மதிப்பு பாதியாக குறையும்.




**பிஷரின் விரிவாக்கப்பட்ட சமன்பாடு** $P = \frac{MV + M^1V^1}{T}$

- $M^1$ = வங்கி கடன் பணத்தின் அளவு.
- $V^1$ = வங்கி கடன் பணத்தின் சுழற்சி வேகம்.

**வரைபட விளக்கம்**

- பண அளவு OM எனில் பணத்தின் மதிப்பு PP.
- பணத்தின் அளவு $OM_2$ என இரட்டிப்பாகும் போது விலை மட்டம் $OP_2$ என இரட்டிப்பாகும் பணத்தின் மதிப்பு $PP_2$ என பாதியாக குறையும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



32. **இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகள் யாவை?**

**இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகள்**

- **காகிதப் பண வெளியீடு:** நாணயங்கள், ஒரு ரூபாய் காகிதப் பணத்தை தவிர அனைத்து வகையான காகிதப் பணங்களை வெளியிடுகிறது. பணஅளவு, கடன் அளவுகளை மேலாண்மை செய்கிறது.
- **அரசின் வங்கி:** மத்திய – மாநில அரசுகளின் வங்கியாகவும் முகவராகவும் செயல்படுகிறது. அரசுக்கு குறுகியகால கடன் வழங்கி நிதி தொடர்பான ஆலோசனைகளை வழங்குகிறது.
- **வங்கிகளின் வங்கி:** வங்கிகளின் வங்கியாக தலைமை வங்கியாக செயல்படுகிறது. வணிக வங்கிகளுக்கு கடன் அளிக்கிறது. அவைகளின் ரொக்க இருப்புகளை பாதுகாக்கிறது.
- **கடைநிலை கடன் ஈவோன்:** இடர்பாடான நிதி நிலையில் இருந்து விடுபட வணிக வங்கிகளுக்கு மாற்றுச் சீட்டுகளை மறு கழிவு செய்து கடன் அளிக்கிறது.
- **அந்நியச் செலாவணி பாதுகாவலன்:** அந்நிய செலாவணி இருப்பை பாதுகாத்து மேலாண்மை செய்கிறது. மாற்று விகிதத்தை நிலைபடுத்த வெளிநாட்டு பணங்களை வாங்கி விற்கிறது.
- **தீர்வகமாக செயல்படுகிறது:** வங்கிகளுக்கு இடையேயான பரிமாற்றங்களை தனது 14 தீர்வகங்கள் மூலம் RBI சமன் செய்கிறது. பரிமாற்ற கருவிகளை பரிமாற்றம் செய்து அறிவுரைகளையும் வழங்குகிறது.
- **பொருளாதாரத்தை நெறிபடுத்துகிறது:** பணவியல் கொள்கை மூலம் பொருளாதாரத்தை நெறிப்படுத்துகிறது. பணவியல் மற்றும் இதர தகவல்களை வெளியிடுகிறது.
- **வங்கி உரிமம் வழங்குதல்:** வங்கிகள் முறைப்படுத்துதல் சட்டம் பிரிவு 22 ன் படி இந்திய ரிசர்வ் வங்கியிடம் வணிக வங்கிகள் உரிமம் பெற வேண்டும்.
- **அரசின் கடன் பத்திரங்களை நிர்வாகம் செய்தல்:** நாட்டின் பண அளிப்பு சூழ்நிலைக்கு ஏற்ப அரசின் கடன் பத்திரங்களை வணிகம் செய்து கடன் கட்டுப்பாட்டினை ஏற்படுத்துகிறது. அரசு நிறுவனங்களை கண்காணித்து நிர்வகிக்கிறது.

33. **பணவியல் கொள்கையின் நோக்கங்கள் யாவை? விளக்குக.**

**பணவியல் கொள்கையின் நோக்கங்கள்**

- **பணத்தின் நடுநிலைத் தன்மை:** பணம் இடையீட்டுக் கருவியாக மட்டும் செயல்பட வேண்டும். பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை உருவாக்க கூடாது.
- **பரிமாற்ற விகித நிலைத் தன்மை:** • செலுத்து நிலையில் ஏற்படும் சமனற்ற நிலைகளை சரி செய்தல். பரிவர்த்தனை விகிதத்தில் நிலைத்த தன்மையை காத்தல் பாராம்பரிய நோக்கமாகும்.
- **விலை நிலைத் தன்மை:** வணிக சுழலை தவிர்த்து விலையில் நிலைத்த தன்மையை ஏற்படுத்துதல். மிதமான விலை ஏற்றம் பொருளாதார வளர்ச்சியை உருவாக்கும்.
- **முழு வேலைவாய்ப்பு:** நாட்டில் உள்ள அனைத்து வளங்களையும் முழு திறனுடன் உத்தம அளவில் பயன்படுத்துதல். விளைவுள்ள தேவையை அதிகரிப்பதன் மூலம் வேலைவாய்ப்பை அதிகரிக்க முடியும்– J.M. கீன்ஸ்.
- **பொருளாதார வளர்ச்சி:** தலா வருமானத்தை அதிகரிப்பதன் மூலம் விரைவான பொருளாதார வளர்சியை அடைதல். மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துதல். வருமான பகிர்வில் சமநிலையை உருவாக்குதல்.
- **செலுத்து நிலையில் சமநிலையை உருவாக்குதல்:** அயல் நாட்டு செலுத்து நிலையில் சமநிலையை உருவாக்குதல். மாற்று விகிதத்தில் சமநிலையை பராமரித்தல். பன்னாட்டு மூலதனத்தை ஈர்த்து ஏற்றமதியை அதிகரித்தல்.

34. **நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் வணிக வங்கிகளின் பங்கினை விளக்குக.**

**பொருளாதார மேம்பாட்டில் வணிக வங்கிகளின் பங்கு:**

- **மூலதன திரட்சி:** பொது மக்களின் சேமிப்புகளை வைப்புகளாக திரட்டி பணசந்தைக்கு கொண்டு வருவதுடன், உற்பத்தியாளர்களுக்கு கடன் அளிக்கிறது.
- **கடன் உருவாக்கம்:** வணிக வங்கிகள் கடன் உருவாக்கம் மூலம் முன்னேற்றத் திட்டங்களுக்கு அதிக நிதியை பெற்றுத் தருகிறது.
- **நிதியை முறைப்படுத்துகிறது:** அதிக உற்பத்தி திறன் கொண்ட துறைகளுக்கு கூடுதல் முதலீட்டுக்காக கடன்களை மடைமாற்றம் செய்கிறது.
- **வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்:** அதிக எண்ணிக்கையில் வணிக வங்கிகளின் கிளைகள் திறக்கப்படுகின்றன. கடன் பெருக்கம் அதிகரிப்பதால் புதிய வேலைவாய்ப்புகள் உருவாகிறது.
- **அரசுக்கு நிதி வழங்குதல்:** அரசின் கடன் பத்திரங்களை வாங்குவதன் மூலம் அரசுக்கு குறுகிய – நீண்டகால கடன்களை அளிக்கின்றன.
- **கடனை பணமாக்குதல்:** மாற்றுச் சீட்டுகளை கழிவு செய்து கடன் வழங்கி வணிக மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை விரைவுப்படுத்துகின்றன.
- **தொழில் முனைவினை ஊக்கப்படுத்துதல்:** தொழில் திட்டங்களை தேர்வு செய்யவும், தயாரிக்கவும் தொழில் முனைவோருக்கு ஊக்கமளிக்கிறது.
- **சரியான தொழிற்சாலைகளை ஊக்குவித்தல்:** அதிக தேவையுள்ள பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிலை தேர்வு செய்து கடன் அளிப்பதால் தொழில் பெருக்கமடைகிறது.
- **வேளாண்மைக்கு நிதி உதவி அளித்தல்:** வணிக வங்கிகள் வேளாண்மை, வேளாண்மை சார்ந்த தொழில்களுக்கும், வேளாண்மையை நவீனபடுத்தவும் கடன் அளிக்கின்றன.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



35. **வணிக வங்கிகளின் பணிகளை விளக்குக.**

I. **வணிக வங்கிகளின் முதன்மைப் பணிகள்:**

- **வைப்புகளை பெறுதல்:** பொது மக்களிடம் இருந்து வைப்புகளை பெறுதல் வங்கி வணிகத்திற்கான முக்கிய நிதியாதாரமாகும்.
- **கேட்பு வைப்புகள்:** முன்னறிவுப்பின்றி தனது கணக்கில் இருந்து பணத்தை எடுக்க அனுமதிக்கப்படும் வைப்பாகும். இது சேமிப்பு வைப்பு, நடப்பு வைப்பு என இருவகைப்படும்.
- **கால வைப்புகள்:** ஒரு குறிப்பிட்ட காலம் வரை வங்கியில் விட்டு வைக்கப்படும் வைப்புகள். இது நிலை வைப்பு, தொடர் வைப்பு என இருவகைப்படும். அதிக வட்டி வழங்கப்படும்.

II. **கடன் வழங்குதல்:** தனி நபர்கள், வணிக நிறுவனங்களுக்கு ரொக்கக் கடன், மிகைப் பற்றுக்கடன், மாற்றுச் சீட்டுகளை கழிவு செய்தல் போன்ற முறைகளில் கடன்களை வழங்குகின்றன.

III. **வணிக வங்கிகளின் இரண்டாம் நிலை பணிகள்**

- **முகைமைப் பணிகள்:**
- வாடிக்கையாளரின் காசோலைகள், மாற்றுச் சீட்டுகளை கழிவு செய்து அளித்தல்.
- வாடிக்கையாளருக்கு லாப ஈவு, ஓய்வூதியம், சம்பளம், வாடகை, வட்டி போன்றவற்றை வசூலித்து தருதல்.
- வாடிக்கையாளர் சார்பாக தொலைபேசி கட்டணம், காப்பீட்டு முனைமம், வாடகை, வட்டி, கல்வி கட்டணம் செலுத்துதல்.
- **பொதுபயன்பாட்டுப் பணிகள்:**
- மதிப்பு மிக்க பொருட்களை பாதுகாக்க பாதுகாப்பு பெட்டக வசதி அளித்தல்.
- பயண காசோலை வழங்குதல்.
- ஏற்றுமதி மற்றும் இறக்குமதியில் ஈடுபடும் வணிகர்களுக்கு அந்நியச் செலாவணி வசதி அளித்தல்.
- வங்கிகளுக்கு இடையே நிதியை மாற்றுதல். • கடன் உறுதியளிப்பு கடிதம் வழங்குதல்.
- பத்திரங்களுக்கு எழுத்துறுதி அளித்தல். • மின்னணு வங்கி சேவை வழங்குதல்.
- **இதரப் பணிகள்:**
- பண புழக்க வேகத்தை அதிகரிப்பதன் மூலம் பண அளிப்பை அதிகரித்தல்.
- கடன்களையும் முன்பண அளிப்பையும் அதிகரித்து கடன் உருவாக்கம் செய்தல்.
- அடிப்படை துறைகளின் புள்ளி விவரங்களை திரட்டுதல், வெளியிடுதல்.

36. **உள்நாட்டு வாணிபத்திற்கும் பன்னாட்டு வாணிபத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?**

**உள்நாட்டு வாணிபத்திற்கும் பன்னாட்டு வாணிபத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகள்**

| உள்நாட்டு வாணிகம் | பன்னாட்டு வாணிகம் |
|---|---|
| ஒரு நாட்டின் எல்லைக்குள் நடைபெறும். | பல நாடுகளுக்கு இடையே நடைபெறும். |
| உழைப்பு, மூலதனம் இடம்பெயரத் தடையில்லை. | உழைப்பு, மூலதனம் இடம்பெயர தடை உண்டு. |
| பொருட்கள், பணிகள் இடம்பெயர தடையில்லை. | பொருட்கள், பணிகள் இடம்பெயர்தலில் சுங்கவரி, பங்களவு போன்ற தடைகள் உண்டு. |
| ஒரே நாட்டின் பணம் மட்டும் பயன்படுத்தப்படும். | பல நாடுகளின் பணம் பயன்படுத்தப்படும். |
| புவி அமைப்பு, காலநிலை கிட்டதட்ட ஒரே மாதிரி இருக்கும். | புவி அமைப்பு, காலநிலை வேறுபடும். |
| வணிகம், நிதி நடைமுறைகள் ஒரே மாதிரியானவை. | வணிகம், நிதி நடைமுறைகள் வேறுபடும். |
| அரசமைப்புமுறை, மக்களின் பழக்க வழக்கங்கள், அரசின் கொள்கைகளில் வேறுபாடில்லை. | அரசமைப்புமுறை, மக்களின் பழக்க வழக்கங்கள், அரசின் கொள்கைகள் வேறுபடும். |

37. **அயல்நாட்டு செலுத்து நிலையின் கூறுகளை அட்டவணை வடிவில் எழுதுக.**

**அயல்நாட்டு செலுத்து நிலை:** ஒரு நாடு குறிப்பிட்ட காலத்தில் உலக நாடுகளுடன் மேற்கொள்ளும் பொருளாதார பரிமாற்றங்களை கணக்கியல் முறையில் தொகுத்தளிக்கும் அறிக்கை.

- வரவு மற்றும் பற்று இனங்கள் நேர்கிடையாக அயல்நாட்டு செலுத்துநிலை அறிக்கையில் பதிவு செய்யப்படும்.

**அயல்நாட்டு செலுத்து நிலையின் கூறுகள்:**

- **நடப்புக் கணக்கு:** பன்னாட்டு பண்டங்கள் – பணிகளின் பரிவர்த்தனைகள், உற்பத்திக் காரணிகளின் வருவாய், பரிசுத்தொகைகள் நடப்பு கணக்கில் பதிவு செய்யப்படும்.
- **மூலதனக் கணக்கு:** வெளிநாட்டுக் கடன், அந்நிய முதலீடு. பன்னாட்டு பண மற்றும் நிதிச் சந்தைகளின் பரிமாற்றங்கள் மூலதனக் கணக்கில் பதிவு செய்யப்படும்.
- **மைய வங்கி தீர்வுக் கணக்கு:**
- மைய வங்கியின் கையிருப்பில் உள்ள செலாவணி சொத்துகளின் பரிமாற்றங்கள்.
- நடப்பு – மூலதனக் கணக்கின் உபரி அல்லது பற்றாக்குறை.
- தங்கத்தின் கையிருப்பு. • சிறப்பு எடுப்புரிமை.
- IMF ல் நிகர கடன் பெறும் தகுதிநிலை.
- எளிதாக மற்ற நாட்டு பணமாக மாற்றத்தக்க அந்நியச் செலாவணி போன்றவை இந்த கணக்கின் கீழ் பதிவு செய்யப்படும்.

**அயல் நாட்டு செலுத்து சமநிலை கணக்கு வரைபடம்**

வரவு(வருமானம்) – பற்று(செலவு) = நிகரநிலை [பற்றாக்குறை(−), உபரி(+)]    பற்றாக்குறை = பற்று > வரவு



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



38. **அயல்நாட்டு செலுத்துச் சமனற்ற நிலையின் வகைகளை விளக்குக.**

**அயல்நாட்டு செலுத்து சமனற்ற நிலையின் வகைகள்**

- **சுழற்சி சமனற்ற நிலை:** வாணிப சுழற்சியின் விளைவாக ஏற்படுவதே சுழற்சி சமனற்ற நிலை.

**சுழற்சி சமனற்ற நிலைக்கான காரணங்கள்:**

- நாடுகள் வாணிப சுழற்சியின் வெவ்வேறு கட்டங்களில் இருத்தல்.
- நாடுகளுக்கு இடையே தேவை நெகிழ்ச்சி மாறுபடுதல்.
- **நீண்டகால சமனற்ற நிலை:** நாடுகள் பொருளாதார வளர்ச்சிப் படிநிலைகளில் முன்னேறும் போது உருவாகும் நீண்டகால தலைகீழ் மாற்றங்களால் ஏற்படுவது.

**நீண்டகால சமனற்ற நிலைக்கான காரணங்கள்**

- உள்நாட்டு முதலீடு சேமிப்பை விட அதிமாக இருத்தல்.
- இறக்குமதி ஏற்றுமதியை விட அதிமாக இருத்தல்.
- **கட்டமைப்பு சமனற்ற நிலை:** நாட்டின் பொருளாதார கட்டமைப்பு மாற்றங்களின் விளைவால் ஏற்படுவது.

**கட்டமைப்பு மாற்றங்கள்**

- மாற்று வழங்கல் ஆதாரங்கள் கண்டுபிடிப்பு.
- செயற்கை பதிலீட்டுப் பண்டங்கள் கண்டுபிடிப்பு.
- உற்பத்தி வளங்கள் தீர்ந்துபோதல்.


39. **பொருளாதார முன்னேற்றம் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு இவைகளுக்கு இடையே உள்ள தொடர்பை விவரி.**

**பொருளாதார முன்னேற்றம் – வெளிநாட்டு நேரடி முதலீடு இவைகளுக்கு இடையே உள்ள தொடர்பு**

- வெளிநாட்டு நிறுவனங்களின் உற்பத்தி இறக்குமதிக்கு மாற்றாக செயல்பட்டு இறக்குமதியை குறைக்கும்.
- மூலதன அளவை உயர்த்தி வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும்.
- புதிய தொழில் நுட்பத்தினை கொண்டுவந்து பொருளாதார வளர்ச்சி வீதத்தை அதிகரிக்கும்.
- லாபத்தின் ஒரு பகுதியை மறு முதலீடு செய்து தொழில் வளங்களை பெருக்கும்.
- புதிய தொழில் மற்றும் மேலாண்மை முறைகளை அறிமுகம் செய்யும்.
- ஏற்றுமதியை அதிகரிக்கும், இறக்குமதியை குறைக்கும்.
- அயல்நாட்டு செலுத்துநிலை பற்றாக்குறையை குறைக்கும்.
- அந்நியச் செலாவணி பற்றாக்குறையை நீக்கும்.
- போட்டிகளை உருவாக்கி உள்நாட்டு முற்றுரிமையை தகர்க்கும்.
- சேமிப்பு – முதலீட்டு இடைவெளியை நிரப்பும்.
- உள்நாட்டு சிறு மற்றும் துணை தொழில்களை வளர்சியடைய செய்யும்.
- உள்நாட்டு தொழில் முனைவோர்களை மற்ற நாடுகளில் முதலீடு செய்ய தூண்டும்.
- சமூகத்திற்கு கிடைக்கும் பலனை அதிகரிக்கச் செய்யும்.
- அரசுக்கு நிறுவன லாப வரியை உருவாக்கி தரும்.

40. **பண மாற்று வீதம் எவ்வாறு இரண்டு முறைகளில் நிர்ணயமாகிறது என்பதை உதாரணத்துடன் விளக்குக.**

- **பணமாற்று வீதம்:** ஒரு நாட்டின் பணத்தை மற்றொரு நாட்டின் பணத்திற்கு மாற்றும் விகிதம்.
- **பணமாற்று வீதம் தீர்மானிக்கப்படுதல்:**
- அந்நியச் செலாவணிக்கான தேவையும் – அளிப்பும் செயல்பட்டு சமநிலை பணமாற்று வீதம் தீர்மானிக்கப்படும்.
- **வரைபட விளக்கம்:** அந்நியச் செலாவணிக்கான தேவைகோடு(DD), அளிப்புக் கோடு(SS) யை வெட்டும் E புள்ளியில் சமநிலை பணமாற்று வீதம் OP தீர்மானிக்கப்படும்.




- **பணமாற்று வீதம் நிர்ணய முறைகள்**
- **நிலையான (மாறாத) பணமாற்று வீதம்**
- ஒரு நாட்டின் அரசு மையவங்கியின் மூலம் பணமாற்று விகிதத்தை நிர்ணயம் செய்யும்.
- இது குறிப்பிட்ட காலம் வரை நிலையாக இருக்கும்.
- இது நிலைநிறுத்தப்பட்ட பணமாற்று வீதம் என்றும் அழைக்கப்படுகிறது.
- **மாறுபடும் (நிலையற்ற) பணமாற்று வீதம்:**
- அந்நியச் செலாவணிக்கான தேவையும் அளிப்பும் செயல்பட்டு தீர்மானிக்கப்படும்.
- இது மிதக்கும் பணமாற்று விகிதம் என்றும் அழைக்கப்படுகிறது.

41. **சுற்றுச்சூழல் பொருட்கள் என்றால் ?**

**சுற்றுச்சூழல் பொருட்கள்**

- சுற்றுச்சூழல் ஒரு பொதுப்பொருளாகும் அது அனைவராலும் நுகரப்படும்.
- எந்த தனிப்பட்ட நபரையும் அதனை நுகர்வதில் இருந்து விலக்கி வைக்க முடியாது.
- சுற்றுச்சூழலை ஒருவர் பயன்படுத்துவதால் மற்றவருக்கு கிடைக்கும் அளவு குறைந்து போகாது.
- சுற்றுச்சூழலை பயன்படுத்துவதற்கான இறுதிநிலைச் செலவு கிட்டத்தட்ட பூஜ்ஜியம்.

42. **ஒப்புமைச் செலவு வேறுபாடு என்றால் என்ன?**

**ஒப்புமைச் செலவு வேறுபாடு**

இரண்டு பண்டங்களை உற்பத்தி செய்வதில் ஆற்றப்படும் முழுச் செலவுகளில் இரு நாடுகளுக்கு இடையே உள்ள வேறுபாடு.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

43. **ஜேக்கப் வைனரால் வடிவமைக்கப்பட்ட வாணிப வீத வகைகளை விவரி.**

- **ஒற்றைக் காரணி வாணிப வீதம்**: (வைனர்)
- ஏற்றுமதி மற்றும் இறக்குமதி விலை குறியீட்டெண்களுக்கு இடையே உள்ள வீதத்தை, ஏற்றுமதி உற்பத்தி தொழிலின் உற்பத்தி திறன் குறியீட்டெண் மதிப்பினால் மாற்றம் செய்யப்பட்ட வீதமாகும்.
- $T_f = \left[\frac{P_x}{P_m}\right] \times Fx$
  - $T_f$ = ஒற்றைக் காரணி வாணிப வீதம்.
  - $P_x$ = ஏற்றுமதி விலை குறியீட்டெண்
  - $F_X$ =ஏற்றுமதி தொழிலின் உற்பத்தி திறன் குறியீட்டெண்.
  - $P_M$ = இறக்குமதி விலை குறியீட்டெண்.
- **இரட்டைக்காரணி வாணிப வீதம்**: (வைனர்)
- ஏற்றுமதி மற்றும் இறக்குமதி விலை குறியீட்டெண்களுக்கு இடையே உள்ள வீதத்தை ஏற்றுமதி மற்றும் இறக்குமதி உற்பத்தி தொழிலின் உற்பத்தி திறன் குறியீட்டெண்ணிற்கு இடையேயான வீதத்தின் மதிப்பினால் மாற்றம் செய்யப்பட்ட வீதமாகும்.
- $T_{ff} = \left[\frac{P_x}{P_m}\right] \times \left[\frac{F_x}{F_m}\right]$
  - $T_{ff}$ = இரட்டை காரணி வாணிப வீதம்.
  - $F_x$ = ஏற்றுமதி தொழிலின் உற்பத்தி திறன் குறியீட்டு எண்.
  - $P_x$ = ஏற்றுமதி விலை குறியீட்டு எண்.
  - $F_M$ = இறக்குமதி தொழிலின் உற்பத்தி திறன் குறியீட்டு எண்.
  - $P_m$ = இறக்குமதி விலை குறியீட்டு எண்.

44. **ஒப்புமைச் செலவு கோட்பாட்டினை விவரி.**


**ஒப்புமைச் செலவு கோட்பாடு**: (டேவிட் ரிக்கார்டோ)

**எடுகோள்கள்:**

- இரு நாடுகள் இரண்டு பொருள்களை மட்டும் உற்பத்தி செய்கின்றன.
- கூலி மட்டுமே உற்பத்தி செலவு.
- மாறா விளைவு விதி செயல்படும்.
- பன்னாட்டு வாணிபத்தில் தடையில்லை.
- நிறைவுப் போட்டி நிலவும்.
- நாடுகளிடையே உழைப்பு இடம்பெயர முடியாது.

**கோட்பாட்டின் விளக்கம்**

- இந்தியாவுக்கு கோதுமை, துணி உற்பத்தியில் சாதக நிலை உள்ளது.
- கோதுமை உற்பத்தியில் துணியை விட அதிக சாதக நிலை உள்ளது.




| நாடுகள் | உழைப்பிறகான தேவை (ஒரு மீட்டர் துணி) | உழைப்பிறகான தேவை (ஒரு மூட்டை கோதுமை) | உள்நாட்டு பரிமாற்ற விகிதம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 100 | 120 | 1 மீட்டர் கோதுமை = 1.2 மீட்டர் துணி |
| இந்தியா | 90 | 80 | 1 மீட்டர் கோதுமை = 0.88 மீட்டர் துணி |

- இந்தியா 1 மூட்டை கோதுமையை ஏற்றுமதி செய்து 1 மீட்டர் துணியை இறக்குமதி செய்வதன் மூலம் 10 அலகுகள் உழைப்பை பயனாக பெற முடியும்.
- அமெரிக்காவுக்கு துணி உற்பத்தியில் பாதகம் கோதுமையை விட குறைவாக உள்ளது.
- அமெரிக்கா 1 மீட்டர் துணியை ஏற்றுமதி செய்து 1 மூட்டை கோதுமையை இறக்குமதி செய்வதன் மூலம் 20 அலகுகள் உழைப்பை பயனாக பெற முடியும்.

**திறனாய்வு**

- உற்பத்தி செலவில் உழைப்பு ஒரு பகுதி மட்டுமே.
- பல நாடுகளின் உழைப்பாளர்கள் ஒரே திறன் பெற்றிருப்பதில்லை.

45. **பன்னாட்டு பண நிதியத்தின் நோக்கங்கள் யாவை?**

**பன்னாட்டு பண நிதியத்தின் நோக்கங்கள்:**

- உறுப்பு நாடுகள் இடையே பன்னாட்டு பரிவர்த்தனையில் பணவியல் ஒத்துழைப்பை மேம்படுத்துதல்.
- பன்னாட்டு வாணிபம் வேகமாகவும், சமச்சீராகவும் வளர உதவுதல்.
- உறுப்பு நாடுகள் நாணய மதிப்பிறக்கம் செய்வதை தடுத்தல்.
- நாணய மாற்று விகிதத்தை நிலை நிறுத்துதல்.
- செலாவணிக் கட்டுப்பாடுகளை குறைத்தல்.
- பலதரப்பு நடப்புக் கணக்கு, பணபரிவர்த்தனை முறையை நிறுவுதல்.
- வளர்ந்த நாடுகள் வளரும் நாடுகளில் முதலீடு செய்வதை எளிதாக்குதல்.
- பன்னாட்டு நீர்மை பிரச்சனைக்கு தீர்வுகாணுதல்.
- வளரும் நாடுகளின் உற்பத்தி வளங்களையும், மக்களின் வாழ்க்கை தரத்தையும் உயர்த்துதல்.
- உறுப்பு நாடுகளின் குறுகியகால அயல்நாட்டு செலுத்துநிலை சமமின்மையை நீக்க உதவுதல்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

46. **புதிய பன்னாட்டு வாணிப கோட்பாட்டினை விவாதி.**

**புதிய பன்னாட்டு வாணிப கோட்பாடு (இலி ஹெக்சர்)**

நாடுகளிடையே உற்பத்தி வளங்களின் அளிப்பில் நிலவும் வேறுபாடே பன்னாட்டு வாணிகத்திற்கான காரணமாகும்.

**ஒப்புமை செலவு வேறுபடக் காரணங்கள்:**

- நாடுகள் பெற்றுள்ள உற்பத்தி காரணிகள் அளவு வேறுபடுகிறது.
- உற்பத்திக்கு தேவைப்படும் உற்பத்தி காரணிகளின் விகிதமும் வேறுபடுகிறது.

**எடுகோள்கள்:**


- இரு நாடுகள், இரண்டு உற்பத்திக் காரணிகளை பயன்படுத்தி, இரண்டு பொருள்களை உற்பத்தி செய்கிறது.
- நாடுகள் பெற்றுள்ள உற்பத்திக் காரணிகளின் அளவு வேறுபடும்.
- இரண்டு நாடுகளும் ஒரே இயல்பான தேவையை பெற்றுள்ளன.
- நிறைவுப் போட்டி நிலவும்.

**கோட்பாட்டின் விளக்கம்:**

- ஒரு நாடு தாம் அதிகமாக பெற்றுள்ள உற்பத்திக் காரணியால் உற்பத்தியாகும் பொருட்களை ஏற்றுமதி செய்யும்.
- மூலதனத்தை அதிகம் பெற்றுள்ள நாடு மூலதனத்தின் மூலம் உற்பத்தியாகும் பொருட்களை ஏற்றுமதி செய்யும்.
- உழைப்பை அதிகம் பெற்றுள்ள நாடு உழைப்பின் மூலம் உற்பத்தியாகும் பொருட்களை ஏற்றுமதி செய்யும்.

| விபரங்கள் | இந்தியா | அமேரிக்கா |
|---|---|---|
| உழைப்பின் அளிப்பு | 50 | 24 |
| மூலதனத்தின் அளிப்பு | 40 | 30 |
| மூலதன உழைப்பு விகிதம் | 40/50=0.8 | 30/24=1.25 |

- அமேரிக்கா மூலதனம் அதிகம் உள்ள நாடாகும்.
- இந்தியா உழைப்பு அதிகம் உள்ள நாடாகும்.




**திறனாய்வு:**

- காரணிகளின் இருப்பளவு காலத்திற்கு ஏற்ப மாறலாம்.
- காரணிகளின் திறன் நாடுகளுக்கிடையே வேறுபடும்.

47. **உலக வங்கியின் பணிகளை வெளிக்கொணர்க.**

**உலக வங்கியின் பணிகள்:**

- **உற்பத்திக்கு ஊக்கமளிக்கும் முதலீட்டுக்கான கடன் உதவி:**
  - உறுப்பு நாடுகளின் மறுகட்டமைப்பு மற்றும் மேம்பாட்டிற்கு உதவுதல்.
  - பின் தங்கிய நாடுகளின் உற்பத்தி, வளர்ச்சி திட்டங்களுக்கு உதவுதல்.
- **பன்னாட்டு வணிகத்தின் சரிவிகித வளர்ச்சி:**
- பன்னாட்டு கடன் மூலதனம் வழங்கி உறுப்பு நாடுகளின் பன்னாட்டு வாணிப நீண்டகால வளர்ச்சிக்கு உதவுதல்.
- **கடன் மற்றும் ஈட்டுறுதி வழங்குதல்:**
- உறுப்பு நாடுகளின் வளர்ச்சித் திட்டங்களுக்கு கடன் மற்றும் ஈட்டுறுதி அளித்தல்.
- **வெளிநாட்டு தனியார் முதலீட்டிற்கு ஊக்கமளித்தல்:**
- தனியார் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மூலம் உறுப்பு நாடுகளுக்கு கடன் வழங்க ஈட்டுறுதி அளித்தல்.
- சொந்த நிதி மற்றும் கடன் நிதியில் இருந்து கடன் வழங்குதல்.
- **தொழில்நுட்ப சேவைகள்:**
- வாஷிங்டன் உலக வங்கி பணியாளர் கல்லூரி நிபுணர்கள் மூலம் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல்.

48. **இந்திய சமூக-பொருளாதார மேம்பாட்டில் டபில்யு.டி.ஓ (WTO) வின் பங்கினை விவாதி.**

**இந்திய சமூக-பொருளாதார மேம்பாட்டில் டபில்யு.டி.ஓ (WTO) வின் பங்கு.**

- WTO செயல்பட தொடங்கியதில் இருந்து இந்தியா அதன் உறுப்பு நாடாகும்.
- பல தரப்பு விவாதங்கள் மூலம் தீர்வுக்கு இந்தியாவின் ஆதரவு எப்போதும் உண்டு.
- இடுபொருள்கள், உதிரி பாகங்கள், இயந்திரங்கள் இந்தியாவுக்கு குறைவான விலையில் கிடைத்துள்ளது.
- நாடுகளுடன் தனித்தனியே ஒப்பந்தம் போடாமல் பல நாடுகளில் இந்தியா பொருட்களை விற்பனை செய்கிறது.
- குறைந்த செலவில் உயர்வகை தொழில்நுட்பம் கிடைக்கிறது.
- பரந்த சந்தை தகவல் மூலம் இந்திய ஏற்றுமதியாளர்கள பயன் பெறுகின்றனர்.
- பன்னாட்டு பரிவர்த்தனை தொடர்பான புகர்களுக்கு எளிதில் தீர்வு கிடைக்கும் நிலை உள்ளது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



49. **குறிப்பு வரைக 1. சார்க்( SAARC). 2. ப்ரிக்ஸ் (BRICS).**

- **சார்க் (SAARC)**
- தெற்காசிய மண்டல ஒத்துழைப்பு அமைப்பு 1985 – **டிசம்பர் 8** ல் அமைக்கப்பட்டது.
- சார்க்கின் தலைமையகம் நேபாளத்தின் தலைநகரான காட்மண்டில் 1987 **ஜனவரி** 16 முதல் செயல்பட துவங்கியது.
- **சார்க்கின் உறுப்பு நாடுகள்:** வங்காள தேசம். நேபாளம், பூடான், இந்தியா, ஆப்கானிஸ்தான், இலங்கை, மாலத்தீவு.
- இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை சார்க்கின் உச்சி மாநாடு நடைபெறும்.
- இதன் முதல் மாநாடு **டாக்காவில் (வங்காள தேசம்)** நடைபெற்றது.
- பொருளாதார சமூக மேம்பாடு அடைவதே இதன் அடிப்படை குறிக்கோள்.
- **ப்ரிக்ஸ் (BRICS):**
- வேகமாக வளர்ந்து வரும் நாடுகளின் முதல் எழுத்துக்களின் சுருக்கப் பெயர் BRICS.
- ப்ரிக்சின் தலைமையகம் சீனாவின் ஷாங்காய் நகரில் அமைந்துள்ளது.
- **ப்ரிக்சின் உறுப்பு நாடுகள்:** பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆப்பிரிக்கா.
- இவை பிரிக்ஸ் மேம்பாட்டு வங்கி (புதிய மேம்பாட்டு வங்கி) யை நிறுவியுள்ளன.
- பிரிக்ஸ் மாநாடு ஆண்டு தோறும் நடைபெறும். முதல் மாநாடு மாஸ்கோ (சீனா) வில் நடைபெற்றது.
- வணிக ஒத்துழைப்பு தொகுதியை அமைத்து மண்டல ஒத்துழைப்பை மேம்படுத்துதல் அடிப்படை நோக்கமாகும்.

50. **பொது நிதியின் எல்லைகளை (SCOPE) விளக்குக.**

**பொது நிதியின் எல்லைகள்** (SCOPE):

- **பொது வருவாய்:**
- அரசின் வரி வருவாய், வரியற்ற வருவாய் பற்றியது.
- வரிக் கொள்கை, வரி விகிதம், வரியின் பளு, வரியின் தாக்கம் அதன் விளைவுகளை பற்றி விளக்குகிறது.
- **பொது செலவு:**
- அரசின் செலவு அதிகரிக்க காரணங்கள், அதன் விளைவுகள், அதனை கட்டுப்படுத்தும் வழிமுறைகளை பற்றிய பகுதி.
- **பொதுக் கடன்:**
- அரசின் உள் – வெளிநாட்டுக் கடன் அதன் சுமை, விளைவுகள், அவற்றை திரும்ப செலுத்தும் முறைகளை கற்பிக்கிறது.
- **நிதி நிர்வாகம்:**
- அரசின் வரவு – செலவு திட்டம் அதன் நோக்கங்கள், தயாரிப்பு வழிமுறைகள், வகைகள், நிதி ஒதுக்கீடு, தணிக்கை, மதிப்பீடு பற்றி விவாதிக்கிறது.
- **நிதிக் கொள்கை:** நிதிக் கொள்கையின் – நோக்கங்கள், வகைகள், கருவிகள் அவற்றின் தாக்கங்கள் பற்றிய பகுதி.
- நிதிக் கொள்கையின் கருவிகள் வரி விதிப்பு, பொது செலவு, பொதுக்கடன், மானியம், உதவித்தொகை.

51. **நிதிக் கொள்கையின் கருவிகள் யாவை? விளக்குக,**

**நிதிக் கொள்கையின் கருவிகள்**

- வரி விதிப்பு. • பொது செலவு. • பொதுக் கடன். • மானியங்கள். • உதவித் தொகைகள்.
- **வரி விதிப்பு:** • வரிகள் வாங்கும் சக்தியை மக்களிடம் இருந்து அரசுக்கு மாற்றுகிறது.
- வரி அதிகரிப்பு செலவிடத் தகுந்த வருமானத்தை குறைக்கும்.
- பணவீக்க காலத்தில் வரிகளை அதிகரிக்கலாம் மந்த காலத்தில் வரிகள் குறைக்கப்பட வேண்டும்.
- **பொது செலவு:**
- பொது செலவு அதிகரிக்கும் எனில் மக்களின் வாங்கும் சக்தி அதாவது மொத்த தேவை அதிகரிக்கும்.
- மந்தகாலத்தில் பொது செலவு செய்யப்பட வேண்டும்.
- பின்னிறக்கம், பணவீக்கத்தை கட்டுப்படுத்த பொது செலவு பயன்படுகிறது.
- **பொதுக் கடன் :**
- அரசு மக்களிடம் கடன் பெறும் போது புழக்கத்தில் உள்ள பணத்தின் அளவு குறையும் இது பணவீக்கத்தை குறைக்கும்.
- அரசு கடனை திரும்ப செலுத்தும் போது மக்களின் வாங்கும் சக்தி அதிகரிக்கும் இது மந்தத்தை குறைக்கும்.
- **மானியங்கள்:** • சில துறைகளை ஊக்கப்படுத்த அரசு வழங்கும் நிதி மற்றும் பிற உதவிகளே மானியம்.
- அரசு மானியம் வழங்கும் போது நுகர்வும் முதலீடும் அதிகரிக்கும்.
- **உதவித்தொகைகள்:**
- அரசு வழங்கும் நிவாரணம், ஓய்வூதியம், உதவித் தொகைகள் மக்களின் வாங்கும் சக்கதியை அதிகரிக்கும்.

52. **ரெப்போ விகிதம் குறிப்பு வரைக?**

- **ரெப்போ விகிதம்**
- வணிக வங்கிகளுக்கு மைய வங்கி குறுகிய கால கடன் வழங்கும் போது விதிக்கும் வட்டி வீதமே ரெப்போ விகிதம்.
- வணிக வங்கிகள் கடன்பத்திரங்களை ஈடாக வைத்து ரிசர்வ் வங்கியிடம் கடன் பெறும் போது விதிக்கப்படும் வட்டி வீதம்.
- ரெப்போ விகிதம் பணவீக்க காலத்தில் அதிகரிக்கப்படும், பணவாட்டத்தின் போது குறைக்கப்படும்.

53. **சுங்கவரி ஒன்றியம் என்றால் என்ன?**

**சுங்கவரி ஒன்றியம்** • உறுப்பு நாடுகளுக்கு இடையேயான வணிகத்தில் வரிவிதிக்காமல் மற்ற நாடுகளுக்கு இடையேயான வணிகத்தில் வரிவிதித்து ஒத்துழைக்கும் அமைப்புகளே சுங்கவரி ஒன்றியம்.

**உதாரணம்:** பெனிலக்ஸ் (BENELUX) – பெல்ஜியம், நெதர்லாந்து, லக்ஸம்பர்க்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



54. மறைமுக வரிகளின் நன்மைகள் யாவை?

மறைமுக வரிகளின் நன்மைகள்:

• பரந்து காணப்படுதல்:
• மறைமுக வரிகள் அனைத்து தரப்பு மக்களின் மீது விழுகிறது.
• அதிக நபர்களை உள்ளடக்கியது. அரசுக்கு அதிக வருவாயை தரும்.
• சமத்துவம்:
• ஆடம்பர பொருட்களின் மீது அதிக வரி சுமத்தப்படுவதால் சமத்துவ விதியின் படி அமைகிறது.
• சிக்கனத் தன்மை:
• உற்பத்தியாளர்களும் வணிகர்களும் வரியை வசூலித்து அரசுக்கு செலுத்துவதால் வசூலிப்பு செலவு குறைவு.
• உடலுக்கு தீங்கான பொருட்களின் நுகர்வை குறைக்கும்:
• உடலுக்கு தீங்கு விளைவிக்க கூடிய பொருட்களின் மீது விதிக்கப்படும் வரிகள் விலையை உயர்த்தி நுகர்வை குறைக்கும்.
  உதாரணம்: மது, புகையிலை.
• வசதியானது:
• நுகர்வோர் பண்டங்களை வாங்கும் போது விலையுடன் சேர்த்து வரியை செலுத்துவதால் வரி ஏய்பு கடினம்.
• வரி செலுத்துவதை மக்கள் உணர்வதில்லை.

55. பொதுக் கடனை திரும்ப செலுத்தும் முறைகளை விளக்குக.

பொதுக் கடனை திரும்ப செலுத்தும் முறைகள்:

• மூழ்கும் நிதி:
• அரசு கடனுக்கென உருவாக்கும் நிதியே மூழ்கும் நிதி.
• அரசு ஒவ்வொரு வருடமும் நிலையான தொகையினை மூழ்கும் நிதியில் செலுத்தி வரும்.
• கடன் முதிர்ச்சியடையும் போது வட்டியோடு செலுத்த ஏதுவாக இந்நிதி பெருகிவிடும்.
• கடனை மாற்றுதல்:
• பழைய கடன்கள் புதிய கடன்களாக மாற்றப்படும்.
• அதிக வட்டியுடைய கடன் குறைவான வட்டியுடைய கடன்களாக மாற்றப்படும்.
• கடனை மாற்றுதல் கடன் பளுவை குறைக்கும் – டால்டன்.
• வரவு செலவு திட்ட உபரி:
• உபரி வரவு செலவு திட்டம் தாக்கல் செய்யப்படும் போது ஏற்படும் உபரியை கொண்டு கடனை திரும்ப செலுத்தும் முறை.
• பகுதியாக செலுத்துதல்:
• அரசு பொதுக் கடனை சம ஆண்டு தவணைகளாக செலுத்தும் எளிமையான முறை.
• கடன் மறுப்பு:
• அரசு கடனை திரும்ப செலுத்த மறுத்து அதனை அழிக்கும் முறை.
• அரசு கடன் செலுத்தும் சுமையில் இருந்து எளிமையாக விடுபடுகிறது.
• வட்டி வீதத்தை குறைத்தல்:
• அரசு கட்டாயமாக வட்டியை குறைத்து கடனை திரும்ப செலுத்தும் முறை.
• மூலதனத் தீர்வை:
• மூலதன சொத்துகள், வளர்ச்சி நிதியின் மீது வரிவிதித்து போர்கால கடனை திரும்ப செலுத்தும் சர்ச்சைக்குரிய முறை.

56. கூட்டரசு (கூட்டாட்சி) நிதியின் கொள்கைகள் யாவை?

கூட்டரசு (கூட்டாட்சி) நிதியின் கொள்கைகள்

• சுதந்திரம்: • ஒவ்வொரு அரசும் தன்னுடைய நிதியில் தன்னாட்சி அதிகாரம் பெற்றிருக்க வேண்டும்.
  • வருவாய் ஆதாரங்கள், கடன் வாங்குதல், செலவினங்களை சமாளித்தல் போன்றவற்றில் சுதந்திரம் பெற்றிருத்தல்.
• சமத்துவம்: • மாநிலங்கள் நியாயமான வருவாய் வளங்களை பெறும் வகையில் வளங்களை பங்கீடு செய்வதாகும்.
• ஒரே மாதிரியான தன்மை: • மாநிலங்கள் கூட்டரசு நிதிக்கு சம வரி செலுத்தல்கள் செய்ய வேண்டும்.
• போதுமான வளங்களை பெற்றிருத்தல்: • தேவை மற்றும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப அரசுகள் தம் பணிகளை திறம்பட நிறைவு செய்ய போதுமான வளங்களை பெற்றிருக்க வேண்டும். வளங்கள் நெகிழ்ச்சி மிக்கதாக இருக்க வேண்டும்.
• நிதி வசதி:
  • அரசுகள் தங்களின் நிதி தேவைக்கு ஏற்ப புதிய வரி ஆதாரங்களை பெருக்க வாய்ப்பு இருக்க வேண்டும்.
  • பொறுப்புகளுக்கு ஏற்ப அரசுகள் தங்களது வருவாய் வளங்களை பெருக்க வாய்ப்பு இருக்க வேண்டும்.
• ஒருங்கிணைப்பு மற்றும் ஒன்றுபடுதல்: • நாட்டின் பல்வேறு அடுக்குகளுக்கு இடையே அனைத்து நிதி முறைகளும் நல்ல முறையில் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.
• செயல்திறன்:
• நிதி முறைகளை ஒருங்கிணைத்து திறமையாக நிர்வாகம் செய்தல் வேண்டும்.
• இரட்டை வரிமுறை, வரி ஏய்ப்பு, மோசடிகளுக்கு வாய்ப்புகள் இருக்க கூடாது.
• நிர்வாக சிக்கனம்:
• அரசுகளின் பல்வேறு துறைகளின் நிர்வாகம் சிக்கனம் மிக்கதாக இருப்பது அவசியம்.
• வசூலிப்பு செலவு குறைவாக, அதிக வருவாயை பெற்று, பிற துறைகளுக்கு செலவிட ஏதுவாக இருக்க வேண்டும்.
• பொறுப்புணர்வு: • நிதி சார் முடிவுகளுக்கு ஒவ்வொரு அரசும் முழு பொறுப்பபேற்க வேண்டும்.
  • மத்திய அரசு நாடாளுமன்றத்திற்கும், மாநில அரசு சட்டமன்றத்திற்கும் பொறுப்பேற்க வேண்டும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



57. **வரவு–செலவு திட்டத்தில் உள்ள பல்வேறு பற்றாக்குறைகளை விளக்குக.**

**வரவு – செலவு திட்டத்தில் உள்ள பல்வேறு பற்றாக்குறைகள்:**

- **வருவாய் பற்றாக்குறை:** • அரசின் வருவாய் செலவு, அரசின் வருவாய் வரவை விட அதிகமாக இருப்பது.
- அரசின் அன்றாட பணிகளை மேற்கொள்ள தேவையான வருவாய் குறைவாக இருப்பதாகும்.
- வருவாய் பற்றாக்குறை = வருவாய் செலவு > வருவாய் வரவு.
- **வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை**
- வருவாய் மற்றும் மூலதன கணக்குகளின் மொத்த செலவு, மொத்த வரவை விட அதிகமாக இருப்பது.
- வரவு செலவு திட்ட பற்றாக்குறை = மொத்த செலவு > மொத்த வரவு.
- **நிதிப் பற்றாக்குறை:** • நிதிப் பற்றாக்குறை = மொத்த செலவு – கடன்கள் தவிர்த்த மொத்த வருவாய்.
- நிதிப் பற்றாக்குறை = வரவு செலவு திட்ட பற்றாக்குறை – கடன் தவிர்த்த மொத்த வருவாய்.
- மொத்த செலவு, கடன் அல்லாத மொத்த வருவாயை விட அதிகமாக இருப்பதே நிதிப் பற்றாக்குறை.
- நிதிப் பற்றாக்குறை = நிகர உள்நாட்டு கடன் + ரிசரவ் வங்கியில் வாங்கிய கடன் + மொத்த வெளிநாட்டு கடன்.
- அனைத்து மூலங்களில் இருந்து அரசாங்கத்தின் மொத்த கடனுக்கான தேவையை இது குறிக்கிறது.
- **முதன்மைப் பற்றாக்குறை:** • நிதிப் பற்றாக்குறையில் இருந்து வட்டி செலுத்தல்களை கழிக்க கிடைப்பது.
- முதன்மைப் பற்றாக்குறை = நிதிப் பற்றாக்குறை – வட்டி செலுத்தல்கள்.
- அரசின் கடனுக்கு வட்டி செலுத்தலுக்கான தேவையை குறிக்கும்.
- முன்னர் வாங்கிய கடனுக்கான வட்டி கணக்கில் கொள்ளப்படாது.
- இது அரசின் உண்மையான சுமையை காட்டும்.

58. **அரசின் செலவு அதிகரிப்பதற்கான காரணங்கள் யாவை?**

**அரசின் செலவு அதிகரிப்பதற்கான காரணங்கள்:**

- **மக்கள் தொகை வளர்ச்சி:** மக்கள் தொகை வளர்ச்சியின் காரணமாக உடல் நலம், கல்வி, சுகாதாரம், சட்டம் ஒழுங்கு மற்றும் பிற அடிப்படை வசதிகளுக்கான அரசின் செலவு அதிகரிக்கிறது.
- **பாதுகாப்புச் செலவு:** இராணுவத்தை நவீனமயமாக்குதல், பல பயங்கரவாத செயல்கள் பாதுகாப்பிற்கான அரசின் செலவை அதிகரிக்க செய்கிறது.
- **அரசின் மானியங்கள்:** அரசு வழங்கும் பல இனங்களுக்கான மானியங்கள், உதவித் தொகைகள் அரசின் செலவை பல மடங்கு அதிகரிக்க செய்கிறது.
- **கடன் சேவைகள்:** அரசு கடன் பெற்று பல அடிப்படை சேவைகளை மக்களுக்கு வழங்குகிறது.
- அரசு கடன்களை வட்டியோடு திரும்ப செலுத்தும் போது பொதுசெலவு அதிகரிக்கிறது.
- **வளர்ச்சித் திட்டங்கள்:** நீர்பாசனம், எரிசக்தி, போக்குவரத்து, தொலைதொடர்பு போன்ற வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள அதிக அளவு முதலீடு தேவைப்படுவதால் அரசின் செலவு அதிகரிக்கிறது.
- **தொழில்மயமாதல்:** திட்டமிட்ட பொருளாதாரத்தில் அரசே சில அடிப்படை மற்றும் கனரக தொழில்களை தொடங்க வேண்டியுள்ளது எனவே அரசின் செலவு அதிகரிக்கிறது.
- **நகரமயமாதல்:** நகரங்களில் மக்கள்தொகை விரைவாக அதிகரித்து வருவதால் அங்கு அடிப்படை வசதிகளை மேற்கொள்ள அரசு அதிக அளவில் செலவுகளை செய்ய வேண்டியுள்ளது.
- **மாநிலங்கள், ஒன்றியங்களுக்கான மானியங்கள் அதிகரித்தல்:** இயற்கை பேரழிவுகளை எதிர்கொள்வதற்காக மாநிலங்கள் மற்றும் ஒன்றிய பகுதிகளுக்கு வழங்கப்படும் மானியங்கள் பெருமளவில் அதிகரித்துள்ளது.

59. **நீடித்த அல்லது வளம்குன்றா வளர்ச்சியின் முக்கியத்துவம் மற்றும் நோக்கங்களை விளக்குக.**

**நீடித்த அல்லது வளம்குன்றா வளர்ச்சியின் முக்கியத்துவம் மற்றும் நோக்கங்கள்**

- எல்லா வடிவங்களிலும் எல்லா இடத்திலும் வறுமையை ஒழித்தல்.
- நீடித்த நிலையான விவசாயத்துறை வளர்சியை ஊக்கப்படுத்துதல்.
- மக்களின் நலமான வாழ்வை உறுதிப்படுத்துதல்.
- பட்டினியை முடிவுக்கு கொண்டு வருதல். உணவு பாதுகாப்பு அடைதல்.
- தரமான வாழ்நாள் கல்வி வழங்குதல்.
- பெண்களுக்கு அதிகாரம் வழங்குதல் பாலின சமன்பாட்டை சாதித்தல்.
- அனைவருக்கும் சுத்தமான குடிநீர், சுகாதாரத்தை உறுதிப்படுத்துதல்.
- தரமான வேலைவாய்ப்பை வழங்குதல். நீடித்த நிலையான பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்துதல்.
- வட்டார வேறுபாடுகளை நீக்குதல்.
- பாதுகாப்பான அமைதியான யாவரையும் உள்ளடக்கிய நகரங்களை உருவாக்குதல்.
- நீடித்த நிலையான உற்பத்தி, நுகர்வை உறுதிப்படுத்துதல்.
- தட்பவெப்ப மாற்றங்களையும் அவற்றின் தாக்கங்களையும் குறைத்தல்.
- கடல்கள், கடல் வளங்களை பாதுகாத்தல்.
- சமூக நீதியுள்ள, அமைதியான, அனைவரையும் உள்டக்கிய சமூகங்களை உருவாக்குதல்.
- நீடித்த நிலையான வளர்ச்சிக்காக உலக ஒத்துழைப்பை உறுதிப்படுத்துதல்.
- காடுகளை பாதுகாத்து பராரித்தல், உயிர் பன்முகத் தன்மை இழப்பை தடுத்து நிறுத்துதல்.
- தேவையான கட்டமைப்புகளை வழங்குதல், தொழில்மயமாதல். புத்தாக்கங்களை ஊக்குவித்தல்.
- நிலம் அழிவதை தடுத்தல், நிலத்தின் தன்மை குறைவதை கட்டுப்படுத்தி உயர்த்துதல்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com


www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



60. **மொத்த தேசிய உற்பத்திக்கும் சுற்றுச் சூழல் தரத்திற்கும் உள்ள தொடர்புகளை விளக்குக.**

**மொத்த தேசிய உற்பத்திக்கும் சுற்றுச்சூழல் தரத்திற்கும் உள்ள தொடர்புகள்:**

- பொருளாதார நடவடிக்கைகளுக்கு தேவையான மூலப் பொருள்களை சுற்றுச்சூழல் வழங்குகிறது.
- நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இயற்கை வளங்களை தொடர்ந்து பயன்படுத்தும் போது அதன் அளவு குறையும்.
- உற்பத்தி, நுகர்ச்சியின் இறுதிக் கழிவுகள் இயற்கை சூழலை பாதிக்குறது.
- இதனால் மூலப் பொருட்களின் தரம் குறையும் உற்பத்தி செலவு அதிகரிக்கும்.
- இது நீண்ட கால அடிப்படையில் தேசிய வருமானத்தை பாதிக்கும்.
- இயற்கை வளங்கள் சுரண்டப்படுதல், அதன் இழப்பு மற்றும் அதன் தரம் குறைதல் பற்றி தேசிய வருமான கணக்கீடு கணக்கில் கொள்வதில்லை.
- பொருளாதார வளர்ச்சியில் இயற்கை வளங்களின் பங்களிப்பு தேசிய வருமான கணக்கீட்டில் சேர்க்கப்படுவதில்லை.




**சுற்றுச்சூழல் தரம்**

- சுற்றுச்சூழல் தரம் எனப்படுவது சுற்றச்சூழல் பண்புகளின் தொகுப்பாகும்.
- சுற்றுச்சூழல் பண்புகள் ஒவ்வொன்றின் அளவையும் இது காட்டுகிறது.
- இது பொதுவாக அல்லது சூழ்நிலையின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படும்.
- இது மனிதன் மற்றும் பிற உயிரினங்களின் மீது பாதிப்பை ஏற்படுத்துகிறது.
- முதலாளித்துவ செயல்முறைகளினால் சுற்றுச்சூழல் தரம் தொடர்ந்து குறைகிறது.
- இயற்கை வளங்களின் தரம் மற்றும் அளவும் தொடர்ந்து குறைகிறது.

61. **புற விளைவுகள் என்ற கருத்தையும் அதன் வகைபாடுகளையும் விளக்குக.**

**புற விளைவுகள் (சிதறிய விளைவுகள்) (மிகை வழிதல் விளைவு):** • பண்டங்கள், பணிகளின் உற்பத்தி அல்லது நுகர்வின் போது அதனோடு தொடர்பில்லாத சமுதாயத்தில் உள்ள மற்றவர்களுக்கு ஏற்படும் செலவு அல்லது பயன்களே புற விளைவுகள்.

• அங்காடிக்கு வெளியே நடைபெறுகிறது. • உற்பத்தி அல்லது நுகர்ச்சியில் ஈடுபட்டுள்ள மக்களை நேரடியாக பாதிப்பதில்லை.

**புற விளைவுகளின் வகைகள்:**

- **நேர்மறை நுகர்ச்சி புற விளைவு:** ஒருவருடைய நுகர்வு சார்பு மற்றவருடைய நுகர்வு சார்பில் சாதகமான விளைவுகளை ஏற்படுத்துவது. **உதாரணம்:** தனியார் பாதுகாப்பை ஏற்படுத்துதல்.
- **எதிர்மறை நுகர்ச்சி புற விளைவு:** ஒருவருடைய நுகர்வு சார்பு மற்றவருடைய நுகர்வு சார்பில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவது. **உதாரணம்:** புகை பிடித்தல்.
- **நேர்மறை உற்பத்தி புற விளைவு:** ஒருவருடைய உற்பத்திச் சார்பு மற்றவருடைய உற்பத்திச் சார்பில் சாதகமான விளைவுகளை ஏற்படுத்துவது. **உதாரணம்:** தேனீ வளர்ப்பு.
- **எதிர்மறை உற்பத்தி புற விளைவு:** ஒருவருடைய உற்பத்திச் சார்பு மற்றவருடைய உற்பத்திச் சார்பில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவது. **உதாரணம்:** சிமெண்ட் உற்பத்தியால் நெல் விளைச்சல் பாதிக்கப்படும்.

62. **திட்டமிடுதலுக்கு எதிரான வாதங்களை விளக்குக.**

**திட்டமிடுதலுக்கு எதிரான வாதங்கள்:**

- **தன் விருப்பம் போல் செயல்பட இயலாமை:**
- திட்டமிடுதல் கட்டுப்பாடுகளையும் விதிமுறைகளையும் விதிக்கும். • முழு சுதந்திரத்துடன் செயல்பட முடியாது.
- மக்களின் பொருளாதார சுதந்திரத்தை கட்டுப்படுத்தி நாட்டை மந்த நிலைக்கு கொண்டு செல்லும்.
- ஆட்சியாளர்களின் ஆதிக்கம் மிகுந்து காணப்படும்.
- **தன்முனைப்பு குறைதல்:**
- ஊக்கப்படுத்துதல், இடர்தாங்குதல், புதுமைகளை புகுத்துதல் போன்றவற்றிற்கு ஊக்கமிருக்காது.
- சொத்துரிமை இல்லாததால் இலாப நோக்கம் மற்றும் தன்முனைப்பு குறையும்.
- பொருள் ஈட்டும் நடவடிக்கைகளை சிர்குலைத்து வளர்ச்சியில் தேக்கத்தை ஏற்படுத்தும்.
- சமபலன்கள் வழங்கப்படுவதால் இடர்தாங்கி புதிய நிறுவனத்தை துவக்கும் ஊக்கம் இருக்காது.
- உயர்பதவி அலுவலர்கள் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தலாம்.
- அரசுப் பதவிகளில் காலதாமதமும் கையூட்டும் நிகழும்.
- **அதிகமான நிர்வாக செலவு:**
- திட்டமிடுதலுக்காக அரசு செலவிடும் தொகை அடையும் பலன்களை விட அதிகம்.
- புள்ளி விவரங்களை சேகரித்து தொகுத்து திட்டங்களை தயாரிக்க திறமையான அதிக பணியாளர்கள் தேவை.
- தவறான புள்ளி விவரங்கள், தவறான கணிப்புகள், காலதாமதம் போன்றவை வளங்களை வீணடிக்கும்.
- **முன்கணிப்பதில் உள்ள சிரமங்கள்:**
- திட்டமிட்ட பொருளாதாரத்தில் நுகர்வு, உற்பத்தி அளவுகளை முன் கூட்டியே தீர்மானிப்பது கடினம்.
- திட்டமிட்ட பொருளாதாரத்தில் சந்தை சக்திகளின் செயல்பாடு இல்லை.
- திட்ட நிபுணர்களின் சிறப்பான செயல்பாடு அவசியமானதாகும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



63. **பொருளாதார முன்னேற்றத்தை தீர்மானிக்கும் பொருளாதாரம் சார்ந்த காரணிகளை விளக்குக.**

**பொருளாதார முன்னேற்றத்தை தீர்மானிக்கும் பொருளாதாரம் சார்ந்த காரணிகள்:**

- **இயற்கை வளங்கள்:**
- ஒரு நாடு பெற்றுள்ள இயற்கை வளங்களின் அளவும், தரமும் பொருளாதார முன்னேற்றத்திற்கான அடித்தளத்தை அமைக்கும்.
- இயற்கை வளங்கள் பயன்படுத்தபடுவதை ஒட்டி நாட்டின் முன்னேற்றம் அமையும்.
- **மூலதன உருவாக்கம்:**
- மூலதனத்தை சிறப்பான திட்டங்களில் திறமையாக முதலீடு செய்வதன் மூலம் விரைவான பொருளாதார முன்னேற்றத்தை பெறமுடியும். • மூலதனம் பொருளாதாரத்தின் அனைத்து செயல்பாட்டிற்கும் அடிப்படையானதாகும்.
- **சந்தையின் அளவு:**
- சந்தையின் அளவை, வெளிநாடுகளில் விரிவுப்படுத்துவதன் மூலம் பொருளாதார முன்னேற்றத்தை பெறமுடியும்.
- பெரிய அளவு சந்தை அதிக வேலைவாய்ப்பு, அதிக உற்பத்தி மற்றும் தேசிய வருமான உயர்வை தூண்டும்.
- **நிதியியல் முறை:** சிறந்த முறையில் கட்டமைக்கப்பட்ட வங்கி முறை, பண மற்றும் மூலதன அங்காடிகள் பொருளாதார முன்னேற்றத்திற்கு தேவையான மூலதனத்தை வழங்குகிறது.
- **கட்டமைப்பு மாற்றம்:** தொழில் கட்டமைப்பு, உள் கட்டமைப்பு மற்றும் சமூக கட்டமைப்பில் நிகழும் சிறப்பான மாற்றங்கள் பொருளாதார முன்னேற்றத்தை அதிகரிக்கும்.
- **பன்னாட்டு வாணிபம்:**
- பன்னாட்டு வாணிபத்தின் சாதகநிலை அந்நியச் செலாவணி கையிருப்பை அதிகரிக்கும் எனவே பணமாற்று வீதம் நிலைபெறும்.
- ஒரு நாடு இறக்குமதியை குறைத்து ஏற்றுமதியை அதிகரிக்கும் எனில் பொருளாதாரம் வளர்ச்சியடையும்.
- **விற்பனைக்குரிய உபரி:** விற்பனைக்குரிய உபரி அதிகமாக இருக்கும் போது நாட்டின் இறக்குமதி குறையும். மக்களின் சேமிப்பு மற்றும் முதலீடு அதிகரிக்க வேலைவாய்ப்பு அதிகரித்து பொருளாதாரம் வளர்ச்சியடையும்.
- **பொருளாதார அமைப்பு முறை:** ஒரு நாடு தடையில்லா பொருளாதார கொள்கையினை கடைபிடித்தால் வேகமான வளர்ச்சியை பெறமுடியும். இது சில நாடுகளுக்கு மட்டும் பொருந்தும்.

64. **பல்வேறு வகையான திட்டமிடுதலின் வகைகளை விளக்குக.**

**திட்டமிடுதலின் வகைகள்**

- **குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட – கால திட்டமிடல்:**
- **குறுகிய கால திட்டமிடல்:** ஓராண்டில் செயல்படுத்தப்படும் திட்டமிடல். இது ஆண்டு அல்லது கட்டுப்படுத்தும் திட்டமாகும்.
- **நடுத்தரக் காலத் திட்டமிடல்:** மூன்றில் இருந்து ஏழாண்டு காலத்தில் முடிவடையும் திட்டமிடல்.
- **நீண்ட காலத் திட்டமிடல்:** பத்தில் இருந்து முப்பது ஆண்டுகளுக்கு தீட்டப்படும் திட்டமிடல்.

- **நிதி மற்றும் உருவப் பொருள் திட்டமிடல்:**
- **நிதித் திட்டமிடல்:** திட்டத்தை செயல்படுத்த தேவையான நிதியை பணமதிப்பில் ஒதுக்கீடு செய்தல்.
- **உருவப்பொருள் திட்டமிடல்:** திட்டத்தை செயல்படுத்த தேவையான நிதியை மனிதவளம், இயற்கைவளம், இயந்திரங்கள் போன்ற பருமப் பொருட்களை கொண்டு ஒதுக்கீடு செய்யும் திட்டமிடல்.

- **பகுதி மற்றும் விரிவான திட்டமிடல்:**
- **பகுதி திட்டமிடல்:** ஒரு சிலத் துறைகளுக்கு மட்டும் இலக்குகளை தீர்மானித்து திட்டப்படும் திட்டம்.
- **விரிவான திட்டமிடல்:** நாட்டின் அனைத்துப் பொருளாதாரப் பிரச்சனைகளையும் தீர்பதற்கான திட்டம்.

- **செயல்பாட்டு மற்றும் கட்டமைப்பு திட்டமிடல்:**
- **செயல்பாட்டு திட்டமிடல்:** ஒரு நாடு பெற்றுள்ள பொருளாதார – சமூக அமைப்பு மாறாமல் சீர்கேடுகளை நீக்குவதற்கான வழிகாட்டுதல்களே பணிகள் திட்டமிடல்.
- **அமைப்புமுறை திட்டமிடல்:** பொருளாதார அமைப்பு முறையில் பொருத்தமான மாற்றங்களை செய்து இலக்குகளை அடையும் திட்டமிடல்.

- **மக்களாட்சி மற்றும் சர்வாதிகார திட்டமிடல்:**
- **மக்களாட்சி திட்டமிடல்:** அரசு, தனியார் மற்றும் பொது மக்களிடம் மிகப் பரவலான ஆலோசனைகளை பெற்று தயாரிக்கப்பட்டு அவர்களாலேயே செயல்படுத்தப்படும் திட்டமிடல்.
- **சர்வாதிகார திட்டமிடல்:** பொருளாதார நடவடிக்கைகள் மத்திய கட்டுப்பாட்டின் கீழ் ஒரே ஒரு திட்டமாக இருக்கும். நுகர்வு, உற்பத்தி, பகிர்வு ஆகிய அனைத்தும் அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும்.

- **மையப்படுத்தப்பட்ட மற்றும் பரவலாக்கப்பட்ட திட்டமிடல்:**
- **மையப்படுத்தப்பட்ட திட்டமிடல்:** திட்டக் குழுவே இலக்குகளை தீர்மானித்து திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தும்.
- **பரவலாக்கப்பட்ட திட்டமிடல்:** உள்ளூர் அமைப்புகள், நிறுவனங்கள் இலக்குகளை தீர்மானித்து திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி கண்காணிக்கும்.

- **வழிகாட்டும் மற்றும் தூண்டும் திட்டமிடல்:**
- **வழிகாட்டும் திட்டமிடல்:** திட்டக்குழு வழிகாட்டுதல் வழங்கி திட்டங்களை தயாரித்து ஆணையிடுதல் மூலம் செயல்படுத்தும்.
- **தூண்டும் திட்டமிடல்:** திட்டக்குழு நிர்ணயம் செய்த இலக்குகளை அடைய மக்களுக்கு ஊக்கங்கள் அளித்து மக்களால் மேற்கொள்ளப்படும் திட்டமிடல்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



65. **பொருளாதாரத்தில் பொருளாதார அளவையியலின் பயன்கள் யாவை?**

**பொருளியலில் பொருளாதார அளவீட்டு முறையின் பயன்கள்:**

- பொருளாதார நடவடிக்கைகளை முன்கணித்தல் மூலம் அறிந்து விளக்க உதவுகிறது.
- மாறிகளுக்கு இடையே நிறுவப்பட்ட உறவுகளை மீண்டும் நிருபிக்க உதவுகிறது.
- புதிய பொருளாதார கோட்பாடுகளையும், உறவுகளையும் நிறுவ உதவுகிறது.
- எடுகோள்களை சோதனை செய்ய உதவுகிறது.
- முழு தொகுப்பின் பண்புகளை மதிப்பீடு செய்ய உதவுகிறது.
- பொருளாதாரத்தின் தன்மைகள் மற்றும் நிகழ்வுகளை அளவீடு செய்ய பயன்படுகிறது.
- மாறிகளுக்கு இடையே உள்ள உறவுகளை அளவீடு செய்யவும், உறுதிப்படுத்தவும் உதவுகிறது.
- பொருளாதார விதிகள், கோட்பாடுகள், மற்றும் மாதிரிகளின் அனுபவ பூர்வ விவரங்களை அளிக்கிறது.
- பொருளாதார கோட்பாடுகள் நடைமுறையில் சாத்தியப்படும் விதத்தை சோதித்தறிய உதவுகிறது.
- பொருளாதார கொள்கைகளை உருவாக்கவும், செயல்படுத்தவும், மதிப்பீடு செய்யவும் உதவுகிறது.
- பொருளியலை எளிதாக படிக்கவும் புரிந்து கொள்ளவும் உதவுகிறது.

66. **புள்ளியியலின் இயல்பு மற்றும் எல்லைகளை விளக்குக.**

- **புள்ளியியலின் இயல்புகள்:**
  - மதிப்பீடுகளையும் நிகழ்தகவுகளையும் பற்றிய அறிவியல்.
  - எண்ணிலான விவரங்களை திரட்டி, ஒருங்கிணைத்து, பகுத்தாய்ந்து, மதிப்பீடு செய்து, விவரிப்பதே புள்ளியியல்.
  - புள்ளியியல் அறிவியலாகவும், கலையியலாகவும் விளங்குகிறது.
- **புள்ளியியல் ஒரு அறிவியல்:**
  - புள்ளியியல் முறைபடுத்தப்பட்ட அறிவின் தொகுப்புகளை கொண்டுள்ளது.
  - புள்ளியியல் விவரங்களை பகுத்தாய்வு செய்து, கோட்பாடுகளை உருவாக்கி, சோதனைகளின் மூலம் துல்லியமான முடிவுகளைத் தருவதால் அறிவியலாக விளங்குகிறது.
- **புள்ளியியல் ஒரு கலையியல்:**
  - புள்ளி விவரங்களை கடந்து பட்டறிவின் அடிப்படையில் முடிவுகள் பார்க்கப்படுகின்றன.
  - விவரங்களை திரட்டுதல், அட்டவணையிடுதல், முடிவுகளை தீர்மானித்தல் என பல புள்ளிவிவர நடவடிக்கைகளில் கலையியலின் உட்கூறுகள் கலந்துள்ளன.

**புள்ளியியலின் பரப்பு:**

- **பொருளியலில் புள்ளியியல்:**
  - பொருளாதார பிரச்சனைகளை தீர்ப்பதில் புள்ளி விவரங்கள், புள்ளியியல் கருவிகள் அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது.
  - பொருளாதார கோட்பாடுகளை உருவாக்கவும், சோதனை செய்யவும் புள்ளியியல் உதவுகிறது.
  - பொருளியலின் பிரிவுகள், கோட்பாடுகளில் புள்ளியியல் இரண்டறக் கலந்துள்ளது.
- **தொழில்துறையும் புள்ளியியலும்:**
  - புள்ளியியல் தரக்கட்டுப்பாட்டு நுட்பங்கள் தொழிற்சாலை பொருட்களின் தரத்தை சோதிக்கவும், பராமரிக்கவும் உதவுகிறது.
- **வணிகவியலும் புள்ளியியலும்:**
  - வெற்றிகரமான வணிகத்திற்கு புள்ளியியலே உயிர் துடிப்பு.
  - தற்போதைய நிலை, எதிர்கால மாற்றங்களை அறிதல் மற்றும் சந்தையிடல் ஆய்வுகளில் பயன்படுகிறது.
  - உற்பத்தியை திட்டமிடவும், வியாபார முன்கணிப்பிலும் பயன்படுகிறது.
- **புள்ளியியலும் கல்வியியலும்:**
  - மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப புதிய கல்விக்கான தேவையை அறிய உதவுகிறது.
  - பழைய கல்வித் திட்டத்தில் இருந்து புதிய கல்வித் திட்டத்தை மதிப்பீடு செய்ய பயன்படுகிறது.
  - கல்வி நிறுவனங்களில் உள்ள ஆய்வு மேம்பாட்டுத் துறைகளில் பெரிதும் பயன்படுகிறது.
- **புள்ளியியலும் திட்டமிடலும்:**
  - திட்டங்களை வகுப்பதிலும், செயல்படுத்துவதிலும், முடிவுகளை தீர்மானிப்பதிலும் புள்ளிவிவரங்கள், புள்ளியியல் நுட்பங்கள் உதவுகின்றன.
- **புள்ளியியலும் மருத்துவமும்:**
  - தொடர் மருத்துவ கண்காணிப்பு, ஆய்வு மற்றும் சிகிச்சைகளில் புள்ளிவிவரங்கள், புள்ளியியல் நுட்பங்கள் பயன்படுகின்றன.
  - உடல் சோதனைகளில் தொகுக்கப்படும் புள்ளிவிவரங்கள் அடிப்படையில் மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது.
- **புள்ளியியலும் புதிய பயன்பாடுகளும்:**
  - நிறுவனங்கள் புதிய மாதிரிகளை உருவாக்கி துல்லியமாக முடிவெடுக்க புள்ளியியல் உதவுகிறது.
  - கணினி மற்றும் தகவல் தொழில் நுட்ப துறைகளில் புள்ளியியலின் பங்கு மகத்தானதாகும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



67. பின் வரும் புள்ளி விவரங்களுக்கு காரல் பியர்ஸனின் ஒட்டுறவு கெழுவினை கண்டறிக

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேவை (X) | 23 | 27 | 28 | 29 | 30 | 31 | 33 | 35 | 36 | 39 |
| விற்பனை (Y) | 18 | 22 | 23 | 24 | 25 | 26 | 28 | 29 | 30 | 32 |

**தீர்வு**

காரல் பியர்சன் ஒட்டுறவு கெழு = $\dfrac{(N\sum dx\,dy) - (\sum dx)\ (\sum dy)}{\sqrt{N(\sum dx^2) - (\sum dx)^2}\ \sqrt{N(\sum dy^2) - (\sum dy)^2}}$

| $X$ | $B = 30$, $d_x = X - 30$ | $dx^2$ | $Y$ | $B = 26$, $d_y = Y - 26$ | $dy^2$ | $d_x d_y$ |
|---|---|---|---|---|---|---|
| 23 | −7 | 49 | 18 | −8 | 64 | 56 |
| 27 | −3 | 9 | 22 | −4 | 16 | 12 |
| 28 | −2 | 4 | 23 | −3 | 9 | 6 |
| 29 | −1 | 1 | 24 | −2 | 4 | 2 |
| 30 | 0 | 0 | 25 | −1 | 1 | 0 |
| 31 | 1 | 1 | 26 | 0 | 0 | 0 |
| 33 | 3 | 9 | 28 | 2 | 4 | 6 |
| 35 | 5 | 25 | 29 | 3 | 9 | 15 |
| 36 | 6 | 36 | 30 | 4 | 16 | 24 |
| 39 | 9 | 81 | 32 | 6 | 36 | 54 |
| 311 $\sum x$ | 11 $\sum dx$ | 215 $\sum dx^2$ | 257 $\sum y$ | −3 $\sum dy$ | 159 $\sum dy^2$ | 175 $\sum d_x d_y$ |

$$= \frac{(10\times175)-(11\times-3)}{\sqrt{(10\times215)-(11)^2}\ \sqrt{(10\times159)-(-3)^2}}$$

$$= \frac{1750-(-33)}{\sqrt{2150-121}\ \ \sqrt{1590-9}}$$

$$= \frac{1750+33}{\sqrt{2029}\ \ \sqrt{1581}}$$

$$= \frac{1783}{45.03\times39.76}$$

$$= \frac{1783}{1790.79} = 0.995$$

$\therefore r = 0.995$

68. பின்வரும் விவரங்களுக்கு உண்மை சராசரியின் அடிப்படையில் காரல் பியர்சன் ஒட்டுறவு கெழுவினை கண்டறிக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| காரின் வயது ஆண்டுகளில் (x) | 3 | 6 | 8 | 9 | 10 | 6 |
| பராமரிப்புச் செலவு ரூபாய் (y) | 1 | 7 | 4 | 6 | 8 | 4 |

காரல் பியர்சன் ஒட்டுறவு கெழு $(r) = \dfrac{\sum XY}{\sqrt{\sum x^2\ \sum Y^2}}$

| $X$ | $(X-\overline{X})$ | $(X-\overline{X})^2 = X^2$ | $Y$ | $(Y-\overline{Y})$ | $(Y-\overline{Y})^2 = Y^2$ | $XY$ |
|---|---|---|---|---|---|---|
| 3 | −4 | 16 | 1 | −4 | 16 | 16 |
| 6 | −1 | 1 | 7 | 2 | 4 | −2 |
| 8 | 1 | 1 | 4 | −1 | 1 | −1 |
| 9 | 2 | 4 | 6 | 1 | 1 | 2 |
| 10 | 3 | 9 | 8 | 3 | 9 | 9 |
| 6 | −1 | 1 | 4 | −1 | 1 | 1 |
| 42 $\sum x$ | 0 | 32 $\sum X^2$ | 30 $\sum y$ | 0 | 32 $\sum Y^2$ | 25 $\sum XY$ |

$\overline{X} = \dfrac{\sum X}{n} = \dfrac{42}{6} = 7$

$\overline{Y} = \dfrac{\sum Y}{n} = \dfrac{30}{6} = 5$

$(r) = \dfrac{\sum XY}{\sqrt{\sum x^2\ \sum Y^2}}$

$r = \dfrac{25}{\sqrt{32\times32}} = \dfrac{25}{32}$

$= 0.781$

$\therefore r = 0.781$



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**69. பின் வரும் புள்ளி விவரங்களுக்கு கார்ல் பியர்சனின் ஒட்டுறவு கெழுவினை கண்டறிக**

| x | 10 | 12 | 13 | 16 | 17 | 20 | 25 |
|---|---|---|---|---|---|---|---|
| y | 19 | 22 | 26 | 27 | 29 | 33 | 37 |

| $X$ | $A=16$ $d_x = X-16$ | $dx^2$ | $Y$ | $B=27$ $d_Y = Y-27$ | $dY^2$ | $d_xd_y$ |
|---|---|---|---|---|---|---|
| 10 | −6 | 36 | 19 | −8 | 64 | 48 |
| 12 | −4 | 16 | 22 | −5 | 25 | 20 |
| 13 | −3 | 9 | 26 | −1 | 1 | 3 |
| 16 | 0 | 0 | 27 | 0 | 0 | 0 |
| 17 | 1 | 1 | 29 | 2 | 4 | 2 |
| 20 | 4 | 16 | 33 | 6 | 36 | 24 |
| 25 | 9 | 81 | 37 | 10 | 100 | 690 |
| 113 $\sum x$ | 1 $\sum dx$ | 159 $\sum dx^2$ | 193 $\sum y$ | 4 $\sum dy$ | 159 $\sum dy^2$ | 187 $\sum d_xd_y$ |

கார்ல் பியர்சன் ஒட்டுறவு கெழு =

$$\frac{(N\sum dx\,dy) - (\sum dx)(\sum dy)}{\sqrt{N(\sum dx^2) - (\sum dx)^2}\sqrt{N(\sum dy^2) - (\sum dy)^2}} = \frac{(7\times187)-(1\times4)}{\sqrt{(7\times159)-(1)^2}\sqrt{(7\times230)-(4)^2}}$$

$$= \frac{1309-4}{\sqrt{1113-1}\quad\sqrt{1610-16}}$$

$$= \frac{1750+33}{\sqrt{1112}\quad\sqrt{1594}}$$

$$= \frac{1305}{33.34\times39.92} = \frac{1305}{1330.9} = 0.98$$

$\therefore r = 0.98$

**70. பின்வரும் விவரங்களுக்கு ஊக சராசரியின் அடிப்படையில் கார்ல் பியர்சன் ஒட்டுறவு கெழுவினை கண்டறிக விளக்கம் தருக.**

| விலை (x) | 10 | 12 | 14 | 15 | 19 |
|---|---|---|---|---|---|
| அளிப்பு (y) | 40 | 41 | 48 | 60 | 50 |

கார்ல் பியர்சன் ஒட்டுறவு கெழு $(r) = \frac{(N\sum dx\,dy) - (\sum dx)(\sum dy)}{\sqrt{N(\sum dx^2) - (\sum dx)^2}\sqrt{N(\sum dy^2) - (\sum dy)^2}}$

| $X$ | $A=15$ $d_x = X-15$ | $dx^2$ | $Y$ | $B=14$ $d_Y = Y-14$ | $dY^2$ | $d_xd_y$ |
|---|---|---|---|---|---|---|
| 10 | −5 | 25 | 40 | −8 | 64 | 40 |
| 12 | −3 | 9 | 41 | −7 | 49 | 21 |
| 14 | −1 | 1 | 48 | 0 | 0 | 0 |
| 15 | 0 | 0 | 60 | 12 | 144 | 0 |
| 19 | 4 | 16 | 50 | 2 | 4 | 8 |
| 70 $\sum x$ | −5 $\sum dx$ | 51 $\sum dx^2$ | 193 $\sum y$ | −1 $\sum dy$ | 261 $\sum dy^2$ | 69 $\sum d_xd_y$ |

$$= \frac{(5\times69)-(-5\times-1)}{\sqrt{(5\times51)-(-5)^2}\sqrt{(5\times261)-(-1)^2}}$$

$$= \frac{345-5}{\sqrt{255-25}\quad\sqrt{1305-1}}$$

$$= \frac{340}{\sqrt{230}\quad\sqrt{1304}}$$

$$= \frac{340}{15.16\times36.11} = \frac{340}{547.42} = r = 0.621$$

$\therefore r = +0.621$

- இங்கு உடன் தொடர்பு கெழுவின் மதிப்பு $\therefore r = +0.621$ ஆகும்.

∴ பொருளின் விலைக்கும் அளிப்பிற்கும் நேரடியான மற்றும் உறுதியான உறவு நிலவும்.

**71. புள்ளியியலின் குறைபாடுகள் யாவை?**

**புள்ளியியலின் குறைபாடுகள்**

- புள்ளியியல் பண்பு விவரங்களை திரட்டுவதற்கு உகந்ததல்ல.
- புள்ளியியல் பகுப்பாய்வு நுட்பங்களை பண்பு விவரங்களுக்கு நேரடியாக பயன்படுத்த முடியாது.
- புள்ளியியல் விதிகள் துல்லியமானவை அல்ல தோராயமானவையாகும்.
- புள்ளியியல் முடிவுகள் முழுத் தொகுப்பிற்கும் பொருந்தாது சராசரியாகவே அமையும்.
- புள்ளியியல் கருவிகள் தவறாக பயன்படுத்தப்படும் வாய்ப்பு உள்ளது.
- சிக்கல்களை ஆராய்வதில் புள்ளியியல் அணுகுமுறை பல முறைகளில் ஒன்று மட்டமே.
- புள்ளியியல் அணுகுமுறை சிக்கல்களை முழுமையாக ஆராய்ந்து முழுத் தீர்வினை வழங்குவதில்லை.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

72. பின் வரும் விவரங்களுக்கு Y ன் மீது X மற்றும் X மீது Y ஆகியவற்றை கண்டறிக.

| Y | 45 | 48 | 50 | 55 | 65 | 70 | 75 | 72 | 80 | 85 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| X | 25 | 30 | 35 | 30 | 40 | 50 | 45 | 55 | 60 | 65 |

| $X$ | $U = 45$ <br> $U = X - 45$ | $U^2$ | $Y$ | $B = 40$ <br> $V = Y - 40$ | $V^2$ | $UV$ |
|---|---|---|---|---|---|---|
| 25 | −20 | 400 | 45 | −20 | 400 | 400 |
| 30 | −15 | 225 | 48 | −17 | 289 | 255 |
| 35 | −10 | 100 | 50 | −15 | 225 | 150 |
| 30 | −15 | 225 | 55 | −10 | 100 | 150 |
| 40 | −5 | 25 | 65 | −0 | 0 | 0 |
| 50 | 5 | 25 | 70 | 5 | 25 | 25 |
| 45 | 0 | 0 | 75 | 10 | 100 | 0 |
| 55 | 10 | 100 | 72 | 7 | 49 | 70 |
| 60 | 15 | 225 | 80 | 15 | 225 | 225 |
| 65 | 20 | 400 | 85 | 20 | 400 | 400 |
| 435 <br> $\sum X$ | −15 <br> $\sum U$ | 1725 <br> $\sum U^2$ | 645 <br> $\sum Y$ | −5 <br> $\sum V$ | 1813 <br> $\sum V^2$ | 1675 <br> $\sum UV$ |

1. X மீதான Y ன் உடன் தொடர்பு (Y on X) சமன்பாடு

$= (Y - \bar{Y}) = byx\ (X - \bar{X})$

$\bar{X} = \frac{435}{10} = 43.5 \quad \bar{Y} = \frac{645}{10} = 64.5$

$$byx = \frac{N\sum UV - \sum U \sum V}{N\sum U^2 - (\sum U)^2}$$

$$= \frac{10\times 1675-(-15\times -5)}{10\times 1725-(-15)^2} = \frac{16750-75}{17250-225}$$

$$byx = \frac{16675}{17025}$$

$= bxy = 0.979$

∴ (Y on X)

$(Y - \bar{Y}) = byx\ (X - \bar{X})$

$Y - 64.25 = 0.979(X - 43.5)$

$Y = 0.979X + 64.5 - 42.5$

$∴ Y = 0.979X + 21.92$

2. Y மீதான X ன் உடன் தொடர்பு (X on Y) சமன்பாடு

$= (X - \bar{X}) = bxy\ (Y - \bar{Y})$

$$bxy = \frac{N\sum UV - \sum U \sum V}{N\sum V^2 - (\sum V)^2}$$

$$bxy = \frac{10\times 1675-(-15\times -5)}{10\times 1813-(-5)^2} = \frac{16750-75}{18130-25} = \frac{16675}{18105} = bxy = 0.92$$

$= (X - \bar{X}) = bxy\ (Y - \bar{Y})$

$(X - 43.5) = 0.92\,(Y - 64.5)$

$X = 0.92Y + 43.5 - (0.92 \times 64.5)$

$X = 0.92Y + 43.5 - 59.34$

$X = 0.92Y - 15.84$

$∴ X = 0.92Y + 15.84$

73. கீழ் வரும் மதிப்புகளைக் கொண்டு X மீதான Y உடன் தொடர்பு (Y ON X) சமன்பாடு மற்றும் Y மீதான X உடன் தொடர்பு (X ON Y) சமன்பாடு ஆகியவற்றை கண்டுபிடி.

$\bar{X} = 12, \quad \bar{Y} = 10, \quad \sigma Y = 0.2, \ \sigma X = 0.1, \ r = 8.5$

தீர்வு $\bar{X} = 12, \quad \bar{Y} = 10 \quad \sigma Y = 0.2, \ \sigma X = 0.1, \ r = 8.5$

1) X ON Y

$(X - \bar{X}) = r\frac{\sigma X}{\sigma Y}(Y - \bar{Y})$

$(X - 12) = 0.85 \times \frac{0.1}{0.2} \times (Y - 10)$

$(X - 12) = 0.85 \times (0.5) \times (Y - 10)$

$(X - 12) = 0.425Y - 4.25$

$X = 0.425Y - 4.25 + 12$

$∴ X = 0.425Y + 7.75$

2) Y ON X

$(Y - \bar{Y}) = r\frac{\sigma Y}{\sigma X}(X - \bar{X})$

$(Y - 10) = 0.85 \times \frac{0.2}{0.1} \times (X - 12)$

$(Y - 10) = 0.85 \times (2) \times (X - 12)$

$(Y - 10) = 1.7(X - 12)$

$Y = 1.7x - 20.4 + 10$

$∴ Y = 1.7x + 10.4$

ரா.மணிகண்டன்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



74. பின் வரும் விவரங்களுக்கு திட்ட விலக்கம் காண்க

| X | 14 | 22 | 9 | 15 | 20 | 17 | 12 | 11 |
|---|---|---|---|---|---|---|---|---|

**தீர்வு**

$\sum x = 120, \ n = 8$

| $X$ | $X - \overline{X}$ | $(X - \overline{X})^2$ |
|---|---|---|
| 14 | –1 | 1 |
| 22 | 7 | 49 |
| 9 | –6 | 36 |
| 15 | 0 | 0 |
| 20 | 5 | 25 |
| 17 | 2 | 4 |
| 12 | –3 | 9 |
| 11 | –4 | 16 |
| 120 $\sum X$ | 0 | 140 $\sum(X - \overline{X})^2$ |

$$\overline{X} = \frac{\sum x}{n} = \frac{120}{8} = 15$$

$$\sigma = \sqrt{\frac{\sum(X - \overline{X})^2}{n}}$$

$$\sigma = \sqrt{\frac{140}{8}}$$

$$\sigma = \sqrt{17.5} = 4.18$$

$$\therefore \sigma = 4.18$$

75. பின் வரும் விவரங்களுக்கு திட்ட விலக்கம் காண்க

| X | 25 | 15 | 23 | 42 | 27 | 25 | 23 | 25 | 20 |
|---|---|---|---|---|---|---|---|---|---|

| $X$ | $X - \overline{X}$ | $(X - \overline{X})^2$ |
|---|---|---|
| 25 | 0 | 0 |
| 15 | 10 | 100 |
| 23 | –2 | 4 |
| 42 | 17 | 289 |
| 27 | 2 | 4 |
| 25 | 0 | 0 |
| 23 | –2 | 4 |
| 25 | 0 | 0 |
| 20 | –5 | 25 |
| 225 $\sum X$ | | 426 $\sum(X - \overline{X})^2$ |

$\sum x = 225, \ n = 9$

$$\overline{X} = \frac{\sum x}{n} = \frac{225}{9} = 25$$

$$\sigma = \sqrt{\frac{\sum(X - \overline{X})^2}{n}} \quad = \sigma = \sqrt{\frac{426}{9}}$$

$$\sigma = \sqrt{47.33}$$

$$= 6.88$$

$$\therefore \sigma = 6.88$$

76. பின் வரும் விவரங்களுக்கு ஊகிக்கப்பட்ட சராசரியில் இருந்து திட்ட விலக்கம் காண்க

| X | 43 | 48 | 65 | 57 | 31 | 60 | 37 | 48 | 78 | 59 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|

**தீர்வு**

உகிக்கப்பட்ட சராசரி ( A ) = 57

$$\overline{X} = \frac{\sum x}{n} = \frac{526}{10} = 52.6 \qquad \sum x = 526, \ n = 10$$

| $X$ | $X - A = d$ | $(d)^2$ |
|---|---|---|
| 43 | –14 | 196 |
| 48 | –9 | 81 |
| 65 | 8 | 64 |
| 57 | 0 | 0 |
| 31 | –26 | 676 |
| 60 | 3 | 9 |
| 37 | –20 | 400 |
| 48 | –9 | 81 |
| 78 | 21 | 441 |
| 59 | 2 | 4 |
| 526 $\sum x$ | –44 $\sum d$ | 426 $\sum d^2$ |

$$\sigma = \sqrt{\left(\frac{\sum d^2}{n}\right) - \left(\frac{\sum d}{n}\right)^2}$$

$$\sigma = \sqrt{\left[\frac{1952}{10}\right] - \left[\frac{-44}{10}\right]^2} = \sqrt{195.2 - (-4.4)^2}$$

$$\sigma = \sqrt{195.2 - 19.36} = \sqrt{175.84} = 13.26$$

$$\therefore \sigma = 13.26$$



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

+ 2 பொருளியல்

**ஒரு மதிப்பெண் மற்றும் பிற வினாவிடைகள்**

**பாடம் – 1. பேரியல் பொருளியல்**

1. பொருளியல் பாடத்தின் கிளைகள் என்பவை ..................
   **விடை : நுண்ணியலும் மற்றும் பேரியலும்.**
2. "மேக்ரோ" என்ற வார்த்தையை அறிமுகப்படுத்தியவர்........................
   **விடை : ராக்னர் பிரிக்சு.**
3. நவீன பேரியல் பொருளியலின் தந்தை ...................
   **விடை : J.M.கின்ஸ்.**
4. பேரியல் பொருளாதாரத்தின் வேறு பெயர் ...............
   **விடை: வருவாய் கோட்பாடு.**
5. பேரியல் பொருளாதாரம் என்பது இதனை பற்றிய படிப்பு ............
   **விடை : ஒட்டு மொத்தங்கள்.**
6. J.M.கீன்ஸின் பங்களிப்பை குறிப்பிடுக ................
   **விடை: பொதுக் கோட்பாடு.**
7. பொது மட்டத்தில் விலைகளின் தொடர் உயர்வை குறிப்பிடும் கருத்து ......................
   **விடை : பணவீக்கம்.**
8. பொருளாதாரக் கொள்கையின் அவசியத்தை குறிப்பிடுக .....................
   **விடை : மேலே கூறப்பட்ட அனைத்தும்.**
9. ஒரு பொருளாதார அமைப்பில் காணப்படுவது ..................
   **விடை : மேலே கூறப்பட்ட அனைத்தும்.**
10. ஒரு பொருளாதார அமைப்பின் அடிப்படை பொருளாதார நடவடிக்கைகளை குறிப்பிடுக .......................
    **விடை : உற்பத்தியும், நுகர்வும்.**
11. எந்த பொருளாதார அமைப்பில் உற்பத்தி உரிமை தனியாருக்கு மட்டுமே உள்ளது ......................
    **விடை : முதலாளித்துவ பொருளாதாரம்.**
12. பகிர்வில் சமத்துவத்தை கடைபிடிக்கின்ற பொருளாதார அமைப்பு ..........................
    **விடை : சமதருமப் பொருளாதாரம்.**
13. முதலாளித்துவத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்................................
    **விடை : ஆடம் ஸ்மித்.**
14. சமத்துவத்தின் தந்தையை கண்டுபிடி ....................
    **விடை : காரல் மார்க்ஸ்.**
15. தனியார் மற்றும் அரசு சேர்ந்து பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடும் பொருளாதார அமைப்பை குறிப்பிடும் பதம் ..............
    **விடை : கலப்பு பொருளாதாரம்.**
16. முதலாளித்துவத்தை பின்பற்றும் நாடு..........................
    **விடை : அமேரிக்கா.**
17. ஒரு குறிப்பிட்ட காலத்தில் குவிந்த சரக்குகளின் அளவை குறிப்பிடும் பதம் ........................
    **விடை : இருப்பு.**
18. கீழ் வருவனவற்றுள் தடைபடா ஓட்ட மாறிலியை கண்டுபிடி .......................
    **விடை : வருவாய்.**
19. இருதுறை மாதிரியில் உள்ள இருதுறைகளை குறிப்பிடுக ....................
    **விடை : குடும்பங்களும், நிறுவனங்களும்.**
20. திறந்துவிடப்பட்ட பொருளாதாரத்தின் சுழல் வட்ட ஓட்ட மாதிரி என்பது ..................... அகும்.
    **விடை: நான்கு துறை மாதிரி.**

1. **<u>பேரியல் பொருளாதாரத்தின் குறைபாடுகள் யாவை?</u>**
   **<u>பேரியல் பொருளாதாரத்தின் குறைபாடுகள்:</u>**
   • பொருளாதாரம் முழுமைக்கும் மிகைப்படுத்தி பொதுமைப்படுத்தும் ஆபத்து உள்ளது.
   • தனிப்பட்ட அலகுகள் ஒரே தன்மையை பெற்றிருப்பதில்லை. • தொகுத்தறிதலில் தவறுகள் ஏற்படலாம்.
   • பேரியல் பொருளாதார கோட்பாடுகளில் பொருளாதாரமற்ற காரணிகள் இடம்பெறவில்லை.
2. **<u>சமதர்ம பொருளாதரம் என்றால் என்ன?</u>**
   **<u>சமதர்ம பொருளாதாரம்:</u>**
   • பொருளாதார நடவடிக்கைகளை அரசே கட்டுப்படுத்தி ஒழுங்குப்படுத்தும்.
   • அனைத்து வளங்களையும் அரசே உரிமமாக்கி பயன்படுத்தும்.
   • சமதர்ம பொருளாதாரத்தின் முக்கிய நோக்கம் பொது(சமூக) நலன்.
3. **<u>சமதர்ம பொருளாதாரத்தை பின்பற்றும் நாடுகள் யாவை?</u>**
   **<u>சமதர்ம பொருளாதாரத்தை பின்பற்றும் நாடுகள்:</u>** இரஷ்யா, சீனா, வியட்நாம், கியூபா, போலந்து.
4. **<u>புதிய பொருளாதாரத்தின் தந்தை யார்? அவ்வாறு அழைக்கப்பட காரணம் யாது?</u>**
   • புதிய பொருளாதாரத்தின் தந்தை J.M. கீன்ஸ்.
   • 1930 ல் ஏற்பட்ட உலக பெருமந்தத்தில் இருந்து மீள்வதற்கான விளக்கத்தை வழங்கினார்.
   • பொருட்களின் தேக்கம், வேலையின்மை ஆகியவற்றில் இருந்து மீள்வதற்கான விளக்கத்தை வழங்கினார்.
   • J.M. கீன்ஸ் வேலைவாய்ப்பு வட்டி பணம் பற்றிய பொதுகோட்பாடு என்ற நூலை எழுதினார்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**பாடம்: 2. தேசிய வருவாய்**

1. உற்பத்திக் காரணியின் செலவின் அடிப்படையிலான NNP ______________
   **விடை : தேசிய வருவாய்.**
2. முதன்மைத் துறை என்பது _______________
   **விடை : விவசாயம். (வேளாண்மை)**
3. எத்தனை முறைகளால் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது _______________
   **விடை: மூன்று.**
4. எவற்றைக் கூட்டி வருமான முறையில் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது _____________
   **விடை: வருமானம்.**
5. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எது மிகப் பெரிய எண்ணாக இருக்கும் _____________
   **விடை : GNP.**
6. _____________ துறையில் செலவு முறையில் தேசிய வருவாய் மதிப்பிடப்படுகிறது.
   **விடை: கட்டத்துறை.**
7. முன்றாம் துறை ______________ எனவும் அழைக்கப்படுகிறது.
   **விடை : பணிகள் துறை.**
8. ஒரு நாட்டின் ______________ செயலை தேசிய வருவாய் குறிப்பிடுகிறது.
   **விடை : பொருளாதார செயலை.**
9. ___________ ஆல் நாட்டு வருமானத்தை வகுத்தால் தலைவீத வருமானம் கண்டறியலாம்.
   **விடை: நாட்டின் மக்கள் தொகை.**
10. GNP = __________ + வெளிநாட்டிலிந்து வரும் நிகர காரணி வருமானம்.
    **விடை : GDP**
11. NNP என்பதன் விரிவாக்கம்.
    **விடை: Net National Product (நிகர தேசிய உற்பத்தி).**
12. மொத்த மதிப்பிலிருந்து ________ ஐ கழித்தால் நிகர மதிப்பு கிடைக்கும்.
    **விடை : தேய்மானம்.**
13. இந்தியாவில் நிதி ஆண்டு என்பது ___________
    **விடை : ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 முடிய.**
14. NNP யில் இருந்து வெளிநாடுகளில் ஈட்டிய காரணிகளின் நிகர வருமானம் கழிக்கபட்டால் கிடைக்கும் நிகர மதிப்பு.
    **விடை : நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP).**
15. உற்பத்திப் புள்ளியில் NNP யின் மதிப்பு ____________என அழைக்கப்படுகிறது.
    **விடை : காரணி செலவில் NNP.**
16. ஒரு நாட்டின் சராசரி வருமானம் என்பது ____________
    **விடை : தலைவீத(தலா) வருமானம்.**
17. பணவீக்கத்திற்கு சரிபடுத்தப்பட்ட தேசிய வருவாயின் மதிப்பு _______ என அழைக்கப்படுகிறது.
    **விடை : உண்மை தேசிய வருவாய்.**
18. கீழ் வருவனவற்றுள் தடைபடா ஓட்ட (FLOW) கருத்துரு ___________
    **விடை : மாத வருமானம்.**
19. PQLI என்பது ____________ ன் குறியீடு ஆகும்.
    **விடை : பொருளாதார நலன்.**
20. மிக அதிக தேசிய வருவாய் ______________ ல் இருந்து கிடைக்கிறது.
    **விடை : தனியார் துறை.**

1. **நாட்டு வருமானம் பற்றிய அடிப்படை கருத்துகளை விளக்குக.**
   - **மொத்த உள் நாட்டு உற்பத்தி (GDP)**: ஒரு நாட்டின் எல்லைக்குள் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப் பண்டங்கள் மற்றும் பணிகளின் சந்தை மதிப்பு. $GDP_{MP} = GNP_{MP}$ – வெளி நாடுகளில் ஈட்டிய நிகர காரணி வருமானம்.
   - **மொத்த நாட்டு உற்பத்தி (GNP)**: • $GNP_{MP} = GDP_{MP}$ + வெளி நாடுகளில் ஈட்டிய நிகர காரணி வருமானம்.
   - **நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP)**: • $NDP = GDP$ – தேய்மானம்.
     • மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இருந்து தேய்மான மதிப்பை நீக்கிய பின் கிடைக்கும் நிகர மதிப்பு.
   - **நிகர நாட்டு உற்பத்தி (NNP)**: • $NNP = GNP$ – தேய்மானம்.
     மொத்த நாட்டு உற்பத்தியில் இருந்து தேய்மான மதிப்பை நீக்கிய பின் கிடைக்கும் நிகர மதிப்பு.
   - **தனிநபர் வருமானம்(PI)**: • ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு தனி நபருக்கும் பல வழிகளில் இருந்து கிடைக்கும் மொத்த வருமானம்.
   - **தலா வருமானம்(PCI)**: • ஒரு நாட்டின் ஒரு நபரின் சராசரி ஆண்டு வருமானம்.
   - தாலா வருமானம் $= \frac{\text{தேசிய வருவாய்}}{\text{மக்கள் தொகை}}$.
   - **செலவிடக் கூடிய வருமானம்(DI)** : • தனிநபர் வருமானத்தில் இருந்து நேர்முக வரிகளை கழிக்க கிடைப்பது.
     • செலவிடக் தகுந்த வருமானம் = தனிநபர் வருமானம் – நேர்முக வரிகள்.
   - **உண்மை நாட்டு வருமானம்(RNI)**: பணவீக்கத்திற்கு சரிபடுத்தப்பட்ட நாட்டு வருமானம் உண்மை நாட்டு வருமானமாகும்.
   - **GDP குறைப்பான்**: GDP யில் குறிப்பிடப்பட்டுள்ள பண்டங்கள், பணிகளின் விலை மாற்ற குறியீட்டெண்.
   - GDP குறைப்பான் $= \frac{\text{பணமதிப்பு } GDP}{\text{உண்மை மதிப்பு } GDP} \times 100$



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**பாடம் .3. வேலைவாய்ப்பு மற்றும் வருமான கோட்பாடுகள்**

1. நடப்புக் கூலி விகிதத்தில் வேலை செய்ய விரும்புகிற ஒவ்வொருவரும் பணியில் இருந்தால் அது ________ எனப்படும்.
   **விடை : முழு வேலைவாய்ப்பு.**
2. அமைப்புசார் வேலையின்மையின் இயல்பு _________
   **விடை : இயங்கும் சமுதாயம்.**
3. மறைமுக வேலையின்மையில் உழைப்பாளியின் இறுதிநிலை உற்பத்தி __________
   **விடை : சுழியம் (பூஜ்யம்).**
4. தொன்மை பொருளியல் கோட்பாட்டின் முதன்மையான (பிரதான) இயல்பு _____________
   **விடை : பொருளாதாரம் எப்போதும் சமநிலையில் இருக்கும்.**
5. J.B.சே ஒரு ________________
   **விடை: தொன்மை பொருளியலாளர்.**
6. கீன்சின் கூற்றுப்படி வேலையின்மை என்பது _______________
   **விடை : விளைவுள்ள தேவை பற்றாக்குறை.**
7. வேலைவாய்ப்பு பற்றிய தொன்மை கோட்பாட்டின் மையக் கருத்து ______________
   **விடை : அங்காடி விதி.**
8. கீன்சின் கருத்துப்படி முதலாளித்துவ பொருளாதார அமைப்பில் எப்படிப்பட்ட வேலையின்மை காணப்படுகிறது ________
   **விடை : குறை வேலை வாய்ப்பு.**
9. சேமிப்புக்கும், முதலீட்டுக்கும் இடையே சமநிலையை கொண்டு வருவது ______________ ன் நெகிழ்வு ஆகும்.
   **விடை : வட்டியின் நெகிழ்வு.**
10. புதிய பொருளாதார கோட்பாட்டின் வளர்ச்சியில் ___________ கோட்பாடு ஒரு திருப்புமுனையாக அமைந்தது.
    **விடை : கீன்ஸ்.**
11. வேலைவாய்ப்பு மற்றும் வருவாய் பற்றிய கீன்ஸ் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்துரு ____________ ஆகும்.
    **விடை : விளைவுள்ள தேவை.**
12. தொகுத் தேவையின் கூறு _____________ஆகும்.
    **விடை : அரசுச் செலவு.**
13. மொத்த அளிப்பு ___________ க்கு சமம்.
    **விடை : C + S + T + Rf.**
14. தலையிடாக் கொள்கைக்கு பதிலாக கீன்சின் கோட்பாடு ___________ யை எடுத்துரைக்கிறது.
    **விடை : சில சூழல்களில் அரசின் தலையீடு.**
15. கீன்சின் வேலைவாய்ப்பு மற்றும் வருவாய் கோட்பாட்டில் பொருளாதார மந்த நிலைக்கு காரணமாக உள்ளது _________.
    **விடை: உற்பத்திறனுடன் ஒப்பிடும் போது மிகக் குறைந்தளவு மொத்த தேவை.**
16. தொன்மைக் கோட்பாடு _____________ ஐ ஆதரிக்கிறது.
    **விடை : சமநிலை வரவு–செலவு திட்டத்தை.**
17. ___________ சமநிலையை கீன்ஸ் கோட்பாடு வலியுறுத்துகிறது.
    **விடை : குறுகிய காலச்.**
18. தொன்மை கோட்பாட்டின் படி வட்டி வீதம் ___________ க்கான வெகுமதி.
    **விடை : சேமிப்புக்கான.**
19. கீன்ஸ் கோட்பாட்டில் பணத்திற்கான தேவை மற்றும் அளிப்பின் அளவுகளால் நிர்ணயிக்கப்படுவது ________
    **விடை : வட்டி வீதம்.**
20. ஒரு பொருளாதாரத்தில்_______________ ன் இயக்கத்தை சே யின் விதி வலியுறுத்துகிறது.
    **விடை : தானியங்கும் விலைக் கருவி.**

1. **வாணிப சுழல் வேலையின்மை பற்றி குறிப்பு வரைக.**
   **வாணிப சுழல் வேலையின்மை**
   - வாணிப சுழலின் பின்னிறக்கப் பகுதியில் உற்பத்தி, வருமானம் குறைவதால் ஏற்படும் வேலையின்மை.
   - இது போதுமான உறுதித் தேவை இல்லாத நிலையில் நிகழும்.
   - இதனை அரசின் முதலீட்டை அதிகரித்தல், விரிவாக்க பணக் கொள்கையை செயல்படுத்துதல் மூலம் குறைக்கலாம்.
2. **மறைமுக வேலையின்மை பற்றி நீ அறிவது யாது?**
   **மறைமுக வேலையின்மை**
   - தேவைக்கும் அதிகமான தொழிலாளர்கள் பணியில் இருக்கும் நிலை.
   - பணியில் இருந்து சிலரை நீக்கினாலும் உற்பத்தி குறையாது.
   - தொழிலாளரின் இறுதிநிலை உற்பத்தி திறன் பூஜ்யம். **உதாரணம்:** வேளாண்மை.
   - உபரி வேலையாட்கள் நியமிக்கப்படுதலே மறைமுக வேலையின்மைக்கு காரணம்.
3. **அமைப்பு சார் வேலையின்மை குறிப்பு வரைக.**
   **அமைப்பு சார் வேலையின்மை**
   - சமூக அமைப்பில் ஏற்படும் பெரிய மாற்றங்களால் உருவாகும் வேலையின்மை.

   **அமைப்பு சார் வேலையின்மைக்கான காரணங்கள்**
   - பொருளுக்கான தேவை குறைதல், மூலப்பொருட்கள் கிடைக்காமை, மூதலீடு பற்றாக்குறை.
   - கைபேசியின் வருகையால் கேமரா மற்றும் வானொலி பெட்டிகளின் தேவை குறைய ஏற்பட்ட வேலையின்மை.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**பாடம் .4. நுகர்வு மற்றும் முதலீட்டுச் சார்புகள்.**

1. சராசரி நுகர்வு நாட்டம் கணக்கிடப்படுவது ____________.
   **விடை :** $\frac{C}{Y}$
2. இறுதிநிலை நுகர்வு நாட்டம் கூடினால் ___________.
   **விடை : நுகர்வு சார்புக் கோடு செங்குத்தை நோக்கி செல்லும்.**
3. கீன்சின் நுகர்வுச் சார்பு $C = 10 + 0.8Y$ செலவிடக் கூடிய வருவாய் **ரூ.**1000 மாக இருந்தால் நுகர்வு எவ்வளவு?
   **விடை : ₹. 810.**
4. கீன்சின் நுகர்வுச் சார்பு $C = 10 + 0.8Y$ செலவிடக் கூடிய வருவாய் **ரூ.**100 ஆக இருந்தால் இறுதிநிலை நுகர்வு நாட்டம் மதிப்பு எவ்வளவு?
   **விடை : 0.8**
5. கீன்சின் நுகர்வுச் சார்பு $C = 10 + 0.8Y$ செலவிடக் கூடியவருவாய் **ரூ.**100 ஆக இருந்தால் சராசரி நுகர்வு நாட்டம் மதிப்பு எவ்வளவு?
   **விடை : 0.9**
6. தேசிய வருவாய் உயரும் போது ____________
   **விடை : APC யின் மதிப்பு குறைந்து சென்று MPC யின் மதிப்பை நெருங்கிவிடும்.**
7. ஒரு குறிப்பிட்ட வருமான அளவில் நுகர்வு அதிகரித்தால் ___________
   **விடை : மொத்த தேவை உயரும்.**
8. குறைவான வட்டி வீதம் _______________
   **விடை : கடனையும் செலவையும் அதிகரிக்கும்.**
9. இறுதிநிலை நுகர்வு விருப்பம் = _______________
   **விடை :** $\frac{\text{நுகர்வு மாற்றம்}(\Delta C)}{\text{வருமான மாற்றம்}(\Delta Y)}$
10. மொத்த வருமானத்திற்கும் மொத்த நுகர்வு செலவிற்கும் உள்ள தொடர்பு ______________
    **விடை : நுகர்வு சார்பு.**
11. MPC ஐயும் MPS ஐயும் கூட்டினால் கிடைப்பது _____________
    **விடை: 1.**
12. வருவாய் உயர்ந்தால் நுகர்வு ____________
    **விடை : உயரும்.**
13. முதலீடு தன்னிச்சையானது என அனுமானிக்கப்பட்டால் AD யின் சாய்வை நிர்ணயம் செய்வது ________
    **விடை : இறுதிநிலை நுகர்வு நாட்டம் (MPC).**
14. ___________ இடம்பெயர்ந்த பின்னர் ___________ எவ்வளவு மாறுகிறது என்பதை பெருக்கி கூறுகிறது.
    **விடை: மொத்த தேவை, வெளியீடு.**
15. பெருக்கியின் மதிப்பு = _________.
    **விடை : அ) மற்றும் ஆ).**
16. MPC = 0.5 எனில் பெருக்கி மதிப்பு__________
    **விடை: 2.**
17. ஒரு திறந்துவிடப்பட்ட பொருளாதாரத்தில் இறக்குமதி பெருக்கியின் மதிப்பு ___________
    **விடை : குறைகிறது.**
18. கீன்சின் கருத்துப்படி முதலீடு, MEC ஐயும்_____________ ஐயும் சார்ந்தது.
    **விடை : வட்டி வீதத்தையும்.**
19. மிகைப் பெருக்கி என்ற கருத்தை முதன் முதலில் பயன்படுத்தியவர் __________
    **விடை : J.R.ஹிக்ஸ்.**
20. MEC என்ற கருத்துருவை அறிமுகப்படுத்தியவர் _______
    **விடை: J.M.கீன்ஸ்.**

1. **வெளிக்காட்டும் விளைவு என்றால் என்ன?**
   **வெளிக்காட்டும் விளைவு:** (டூசன் பெரி)
   - குறைவான வருமான உடைய மக்கள் அதிக வருமானம் உடைய மக்களின் நுகர்வு தரத்தால் தூண்டப்படும் நிகழ்வு.
   - ஏழை மக்கள் செல்வந்தர்களின் நுகர்வு போன்றே செலவு செய்ய விரும்பும் நிகழ்வு.
2. **முதலீட்டுச் சார்பு என்றால் என்ன?**
   **முதலீட்டுச் சார்பு:** முதலீட்டிற்கும் வட்டிவீதத்திற்கும் உள்ள சார்பு தலைகீழ் தொடர்பு. $I = f(r)$
3. **தன்னிச்சை முதலீடு என்றால் என்ன?**
   **தன்னிச்சை முதலீடு:**
   இலாப நோக்கமின்றி மக்களின் நலனுக்காக அரசு மேற்கொள்ளும் மூலதன திட்டங்களின் மீதான முதலீடு.
4. **தூண்டப்பட்ட முதலீடு என்றால் என்ன?**
   **தூண்டப்பட்ட முதலீடு:** வருமானம், தேவை அதிகரிப்பின் காரணமாக நிலையான சொத்துகள் மற்றும் பங்குகளின் மீதான செலவே தூண்டப்பட்ட முதலீடு. இலாப நோக்கமுடையது. வருமானத்தை பொருத்து நெகிழும்.
5. **முதலீடு என்பதன் பொருள் யாது?**
   **முதலீடு:** பங்குகள், கடன்பத்திரங்கள், அரசு பத்திரங்கள் ஆகியவற்றை வாங்குவதலே முதலீடு.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பாடம் .5. பணவியல் பொருளியல்

1. இந்திய ரிசர்வ் வங்கி (RBI) – யின் தலைமையகம் அமைந்துள்ள இடம்________
**விடை: மும்பை.**
2. பணம் என்பது _________________
**விடை : உள்ளவற்றில் அதிக நீர்மைத் தன்மை கொண்ட சொத்து.**
3. காகிதப் பண முறையை மேலாண்மை செய்வது _______________
**விடை : மைய பணவியல் அமைப்பு.**
4. $M_1$ மற்றும் $M_2$ ஆகிய இரண்டிற்கும் உள்ள வித்தியாசம் ____________
**விடை: அஞ்சலக சேமிப்பு வங்கியின், சேமிப்பு வைப்புகள்.**
5. **இர்விங் ஃபிஷரின்** பண அளவு கோட்பாட்டு பிரபலமான ஆண்டு __________
**விடை : 1911.**
6. MV என்பது __________
**விடை: சட்டப்படியான பண அளிப்பு (அல்லது) மொத்த பண அளிப்பு.**
7. பணவீக்கம் என்பது ______________
**விடை : விலைகள் அதிகரிப்பு.**
8. ____________ பணவீக்கம் பணமதிப்பில் தீவிர மதிப்பு குறைவினை ஏற்படுத்துகிறது.
**விடை: உயர் (Hyper).**
9. கூலியும் மூலப் பொருட்களின் செலவும் கூடுவதால் பண்டங்களின் பொது விலைமட்டம் அதிகரிப்பது ______ பணவீக்கம் ஆகும்.
**விடை : செலவு உந்து பணவீக்கம்.**
10. பணவீக்கத்தின் பொழுது பயனடைபவர்கள் யார் ____________
**விடை: கடன் பெற்றவர்கள்.**
11. ___________ என்பது பணவீக்க விகிதம் குறைந்து செல்வது ஆகும்.
**விடை : எதிர் பணவீக்கம்.**
12. தேக்க வீக்கத்தில் பணவீக்க விகிதத்துடன் இணைந்து இருப்பது ____________
**விடை : தேக்கம்.**
13. பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை ___________ என அழைக்கிறோம்.
**விடை : வணிகச் சுழற்சி.**
14. மந்த காலத்தில் பொருளியல் நடவடிக்கைகள் இவ்வாறு இருக்கும் _________
**விடை : மிக குறைந்தபட்சமாக.**
15. பரிவர்த்தனைகளில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு இடையீட்டுக் கருவியாகவும், அளவீடு மற்றும் மதிப்பினை இருப்பு வைத்தல் ஆகியவற்றினை செய்யும் ஒரு பொருள் பணம் என்ற இலக்கணத்தை வழங்கியவர் ___________
**விடை : கிரௌதர்.**
16. பற்று அட்டை என்பது ____________ த்திற்கு எடுத்துக்காட்டாகும்.
**விடை : நெகிழி பணம்.**
17. ஃபிஷரின் பண அளவுக் கோட்பாடு பணத்தின் இந்த பணியின் அடிப்படையல் அமைக்கப்பட்டது ___________
**விடை: பரிவர்த்தனை கருவி.**
18. MV = PT என்ற சமன்பாட்டில், T என்பது ______________
**விடை: பணத்தின் சுழற்சி வேகம்.**
19. விலைவாசி மெதுவாக உயரும் பொழுது அது _________ என அழைக்கப்படுகிறது.
**விடை : மிதமான பணவீக்கம்.**
20. ___________ பணவீக்கம் பொருளாதாரத்தினை எந்த வகையிலும் பாதிக்காது.
**விடை : தவழும்.**

1. **<u>மூலதனத்தின் இறுதிநிலைத் திறன் (MEC) என்றால் என்ன? அதனை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?</u>**
**<u>மூலதனத்தின் இறுதிநிலைத் திறன்(MEC)</u>**
• கூடுதலான மூலதன அலகில் இருந்து எதிர்பார்க்கப்படும் இலாபமே வீதமே MEC.
• எதிர்பார்க்கப்படும் வருவாய்க்கும் மூலதனத்திற்கான செலவிற்கும் உள்ள வீதம்.
• **<u>மூலதனத்தின் இறுதிநிலைத் திறனை தீர்மானிக்கும் காரணிகள்</u>**
• மூலதனத்தின் அளிப்பு விலை.
• மூலதனத்தில் மூலம் எதிர்பார்க்கப்படும் வருவாய்.
2. **<u>பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் பணவியல் முறைகள் யாவை?</u>**
**<u>பணவீக்கத்தை கட்டப்படுத்தும் பணவியல் முறைகள்(கடன் அளவு கட்டுப்பாட்டுக் கருவிகள்)</u>**
• வங்கி வீதம். • ரொக்க இருப்பு வீதம். • சட்டப்படியான நீர்மை வீதம். • ரெப்போ விகிதம். • மீள் ரெப்போ விகிதம்.
• வெளிச்சந்தை நடவடிக்கைகள்.
3. **<u>பணவாட்டம் குறிப்பு வரைக.</u>**
**<u>பணவாட்டம்</u>:** • பொது விலைமட்டம் தொடர்ந்து குறைந்து செல்லும் நிலை.
• பணத்தின் மதிப்பு அதிகரிப்பதும் விலைகள் குறைவதுமான நிலை – கிரௌதர்.
• பணவாட்டம் வேலையின்மையை ஏற்படுத்தி உற்பத்தியை குறைக்கும்.
• பணவாட்டத்தின் உச்சகட்டமே மந்தமாகும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**பாடம் .6 வங்கியியல்**

1. ஒரு வங்கி என்பது ______________
   **விடை : நிதி நிறுவனம்.**
2. ஒரு வணிக வங்கி செய்யும் பணி ___________
   **விடை : அ மற்றும் ஆ.**
3. வணிக வங்கிகளின் பணிகளின் இரு பெரும் பிரிவு __________
   **விடை : மேற்சொன்ன அனைத்தும். (அ, ஆ மற்றும் இ)**
4. வங்கிக் கடன் என்பது எதனை குறிக்கிறது ____________
   **விடை : கடன்பணமும் முன்பணமும்.**
5. கடன் உருவாக்கம் என்பதன் பொருள்____________
   **விடை : கடன் மற்றும் முன்பண பெருக்கம்.**
6. வங்கியில்லா நிதி நிறுவனங்கள் ___________ வைத்திருப்பதில்லை.
   **விடை : வங்கி உரிமம்.**
7. மையவங்கி நாட்டின்_________ அதிகார அமைப்பு.
   **விடை : பணவியல்.**
8. வங்கிகளின் வங்கி என அழைக்கப்படுவது __________
   **விடை : இந்திய ரிசர்வ் வங்கி.**
9. கடைசி நேரத்தில் உதவும் உற்ற நண்பன் என்ற பணியை செய்வது ___________
   **விடை : மையவங்கி.**
10. வங்கி விகிதம் என்பது ________________
    **விடை : முதல்நிலை பத்திரங்களை மறு தள்ளுபடி செய்வது.**
11. **ரெப்போ விகிதம்** என்பதன் பொருள்_____________
    **விடை : ரிசர்வ் வங்கி வணிக வங்கிகளுக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம்.**
12. நெறிமுறை தூண்டல் என்பது _____________
    **விடை : தூண்டுதல் நடவடிக்கை.**
13. விவசாய மறுநிதி மேம்பாட்டுக் கழகம் துவக்கப்பட்ட நாள் ___________
    **விடை : 1 ஜூலை 1963.**
14. நபார்டு வங்கி எப்போழுது ஆரம்பிக்கப்பட்டது ___________
    **விடை : ஜூலை 1982.**
15. ஏற்றுமதி – இறக்குமதி வங்கி துவக்கப்பட்டது _______________
    **விடை : மார்ச் 1982.**
16. மாநில நிதிக் கழகம் எந்த சட்டத்தின் கீழ் துவக்கப்பட்டது ___________
    **விடை : இந்திய அரசு.**
17. பணவியல் கொள்கையை வடிவமைப்பது ____________
    **விடை : மையவங்கி.**
18. நிகழ்நிலை வங்கியகம் என்பது எவ்வாறு அழைக்கப்படுகிறது.
    **விடை : இணைய வங்கி**
19. **ஏ. டி. எம் (A T M)** என்பதன் விரிவாக்கம் ________________
    **விடை : தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம். (Automated Teller Machine)**
20. 2016 ல் பணமதிப்பு நீக்கம் எந்தெந்த மதிப்பு பணங்களுக்கு ஏற்படுத்தப்பட்டது ___________
    **விடை: ₹.500 மற்றும் ₹. 1000.**

1. **இந்திய பண அளிப்பின் அளவீடுகள் (கூறுகள்) யாவை?**
   **இந்திய பண அளிப்பின் அளவீடுகள் (கூறுகள்)**
   - $M_1$ = *காகிதப் பணம், நாணயங்கள், மற்றும் கேட்பு வைப்புகள்.*
   - $M_2$ = $M_1$ + *அஞ்சலக சேமிப்பு வங்கியின் சேமிப்பு வைப்புகள்.*
   - $M_3$ = $M_2$ + *அனைத்து வங்கிகளில் உள்ள கால வைப்புகள்.*
   - $M_4$ = $M_3$ + *அஞ்சலக மொத்த வைப்புகள்.*
2. **வரி தூண்டல் பணவீக்கம் பற்றி குறிப்பு வரைக.**
   **வரி தூண்டல் பணவீக்கம்**
   - வரிகள் மற்றும் வரிவீதம் அதிகரிக்கப்படுவதன் விளைவாக விலைகள் உயர்ந்து செல்லவதாகும்.
   - பெட்ரோல், டீசல் மீதான வரி உயர்வு வரி தூண்டல் பணவீக்கத்தை உருவாக்கும்.
   - வரி தூண்டல் பணவீக்கம் வரிவீக்கம் என்றும் அழைக்கப்படுகிறது.
3. **மலிவு (விரிவாக்க) பணக்கொள்கை என்றால் என்ன?**
   **மலிவு பணக்கொள்கை:** • நடப்பு வட்டி வீதத்தை விட குறைவான வட்டி வீதத்தையும் வேகமான பண அளிப்பையும் உருவாக்குதல். • கடன் பெறுவதற்கான செலவு குறையும்.
4. **அருமை (சுருக்க) பணக்கொள்கை என்றால் என்ன?**
   **அருமை (சுருக்க) பணக்கொள்கை:** • நடப்பு வட்டி வீதத்தை விட அதிகமான வட்டி வீதத்தையும் குறைவான பண அளிப்பையும் உருவாக்குதல். • கடன் பெறுவதற்கான செலவு அதிகரிக்கும்.

ரா.மணிகண்டன்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**பாடம் .7. பன்னாட்டு பொருளியல்**

1. இரண்டு நாடுகளுக்கு இடையிலான வாணிகம் என்பது _______________
**விடை : வெளி வாணிகம்.**
2. கீழ் கண்டவற்றுள் வாணிகத்தை தீர்மானிக்கும் காரணி எது? ____________
**விடை : மேற்கண்ட அனைத்தும்.**
3. பன்னாட்டு வாணிகம் உள்நாட்டு வாணிகத்திலிருந்து வேறுபடக் காரணம் ___________
**விடை : மேற் சொன்ன அனைத்தும்.**
4. நாடுகள் பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபட அடிப்படைக் காரணம் _____________
**விடை : உற்பத்தி வளங்கள் நாடுகளுக்கிடையே ஏற்றத்தாழ்வுடன் பகிரப்பட்டுள்ளது.**
5. புதிய பன்னாட்டு வாணிபக் கோட்பாடு எதன் அடிப்படையில் அமைந்தது ___________
**விடை : உற்பத்திக் காரணிக் கோட்பாடு.**
6. பணமாற்று வீதம் நிர்ணயமாகும் சந்தை _____________
**விடை : அந்நியச் செலாவணி சந்தை.**
7. கீழ் கண்ட எந்த பணமாற்று நிர்ணய முறையில் சந்தை விசைகளான தேவையும் அளிப்பும் பணமாற்று விகிதத்தை நிர்ணயிக்கிறது ____________
**விடை : மாறுகின்ற பணமாற்று வீதம்.**
8. ஏற்றுமதி நிகரம் என்பது ___________________
**விடை : ஏற்றுமதி – இறக்குமதி.**
9. கீழ் கண்டவர்களில் யார் ஒற்றைக் காரணி வாணிப வீதத்தை வடிவமைத்தவர் _____________
**விடை : ஜேக்கப் வைனர்.**
10. வாணிப வீதம் ______________ பற்றி குறிப்பிடுகிறது.
**விடை : ஏற்றுமதி விலை, இறக்குமதி விலை விகிதம் .**
11. சாதகமான வாணிக சூழலில் ஏற்றுமதி இறக்குமதியை விட __________ ஆக இருக்கும்.
**விடை : அதிகமாக.**
12. இறக்குமதி, ஏற்றுமதியை விட அதிகமாக இருப்பதை கீழ்கண்ட வழிகளில் எது சரி செய்யும் ___________
**விடை : ஏற்றுமதிக்கு ஊக்கமளித்தல்.**
13. அயல்நாட்டுச் செலுத்துநிலை உள்ளடக்கிய இனங்கள் _______________
**விடை : அ மற்றும் ஆ.**
14. அயல்நாட்டுச் செலுத்துநிலைக் கூறுகள் கீழ் கண்டவைகளில் எவை _____________
**விடை : அ, ஆ, இ மூன்றும்.**
15. வாணிபக் கொடுப்பல் நிலை அறிக்கையில் ______________
**விடை : பண்ட பரிமாற்றம் மட்டும் பதிவாகிறது.**
16. சுற்றுலா மற்றும் வெளிநாட்டு பயணம் தொடர்புடைய பரிவர்த்தனைகள் அயல்நாட்டு செலுத்து நிலையின் எந்த கணக்கின் கீழ் பதிவாகிறது ______________
**விடை : பணிகள் வாணிக கணக்கு (Service Account)**
17. சுழற்சி அயல்நாட்டுச் செலுத்து நிலை சமமற்ற நிலைக்கான காரணம் _____________
**விடை : அ மற்றும் ஆ.**
18. கீழ் கண்டவைகளில் எவை வெளிநாட்டு நேரடி மூலதனத்திற்கான உதாரணமாக கூற முடியாது _____________
**விடை : வெளிநாட்டு துணி நிறுவனம் வெளிநாட்டு பங்கு அல்லது கடன் பத்திரத்தை வாங்குவது.**
19. இந்தியாவில் வெளிநாட்டு நேரடி மூலதனம் அனுமதிக்கப்படாத துறை ________________
**விடை: அணு ஆற்றல்.**
20. கோட்பாடு அடிப்படையில் வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நன்மைகளாவன _____________
**விடை : மேற்கண்ட அனைத்தும்.**

1. **பணக்கொள்கை என்றால் என்ன?**
**பணக்கொள்கை:**
• பண அளிப்பு, வட்டி வீதத்தை மேலாண்மை செய்ய மையவங்கியால் உருவாக்கப்படும் பேரியல் பொருளாதார கொள்கை.
• பண அளிப்பு மற்றும் பணத்தை உற்பத்தி செய்வதற்கான செலவுகளை கட்டுப்படுத்த மையவங்கி மேற்கொள்ளும் நடவடிக்கைகள்.
2. **இணைய வங்கி (மின்னு வங்கி) என்றால் என்ன?**
**இணைய வங்கி**
• வங்கியின் வாடிக்கையாளர்கள் தங்களது பல்வேறு நிதி பரிமாற்றங்களை வங்கிக்கு செல்லாமல் வங்கியின் இணையதளத்தில் நிகழ்த்துவதாகும்.
• இது மெய்நிகர் அல்லது நிகழ்நிலை வங்கியகம் என்றும் அழைக்கப்படுகிறது.
• பரிமாற்றங்களுக்கான செலவையும் நேரத்தையும் குறைக்கிறது.
• **உதாரணம்:** RTGS, NEFT, Paytm, G.Pay மற்றும் பிற.
3. **செயல்படாத சொத்து என்றால் என்ன?**
**செயல்படாத சொத்து:** கடன் பெற்ற நாளில் இருந்து 90 நாட்களில் வட்டி அல்லது அசலின் பகுதியோ செலுத்தபடாமல் உள்ள கடன்களே செயல்படாத சொத்து.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**பாடம். 8. பன்னாட்டு பொருளாதார அமைப்புகள்**

1. பன்னாட்டு பண நிதியம் கீழ்கண்ட இந்த மாநாட்டில் உருவாக்கப்பட்டது ____________
**விடை: பிரிட்டன் வுட்ஸ் மாநாடு(1944).**
2. பன்னாட்டு பண நிதியத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம் ___________
**விடை : வாஷிங்டன் டி.சி.**
3. ஐ. பி. ஆர். டி (IBRD) இவ்வாறாகவும் அழைக்கப்படுகிறது ______________
**விடை : உலக வங்கி.**
4. சிறப்பு எடுப்புரிமை(SDR) ன் மற்றொரு பெயர் _______________
**விடை : தாள் தங்கம்.**
5. நீண்டகால கடன் வழங்கும் நிதி நிறுவனம் _______________
**விடை : உலக வங்கி.**
6. கீழ்கண்ட நாடுகளில் எது சார்க் (SAARC) அமைப்பின் உறுப்பினர் இல்லை ____________
**விடை : ஜப்பான்.**
7. பன்னாட்டு மேம்பாட்டு அமைப்பு (IDA) கீழ் கண்ட இதன் துணை அமைப்பாகும் ____________
**விடை : உலக வங்கி.**
8. காப்புரிமை, பதிப்புரிமை, வாணிக ரகசியம் போன்றவை ____________ உடன் தொடர்புடையவை.
**விடை : வணிகம் சார் சொத்துரிமை.**
9. உலக வர்த்தக அமைப்பின் முதலாவது அமைச்சர்கள் அளவிலான மாநாடு நடைபெற்ற இடம் _________
**விடை : சிங்கப்பூர்.**
10. ஆசியான் (ASEAN) கூட்டங்கள் _______________ ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும்.
**விடை : 3 (மூன்று).**
11. கீழ் கண்டவைகளில் எது சார்க் (SAARC) உறுப்பினர் நாடு அல்ல ____________
**விடை : சீனா.**
12. சார்க் (SAARC) உச்சி மாநாடு ____________ ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகிறது.
**விடை : 2 (இரண்டு).**
13. ஆசியான் (ASEAN) அமைப்பின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம் ________________
**விடை : ஜகார்த்தா.**
14. பிரிக் (BRIC) என்ற சுருக்க சொல் கோர்க்கப்பட்ட ஆண்டு ______________
**விடை :** 2001.
15. ஆசியான் (ASEAN) அமைப்பு நிறுவப்பட்ட ஆண்டு _______________
**விடை :** 1967.
16. பிரிக்ஸ் (BRICS) அமைப்பின் பத்தாவது உச்சி மாநாடு ஜூலை 2018 ல் நடைப்பெற்ற இடம் ___________
**விடை : ஜோகன்ஸ் பர்க்.**
17. புதிய மேம்பாட்டு வங்கி இந்த அமைப்புடன் தொடர்புடையது ______________
**விடை : பிரிக்ஸ் (BRICS).**
18. ஆசியான் (ASEAN) விவாதத்தில் பங்கெடுக்கும் ஆறு நாடுகளில் சேராத நாடு _______________
**விடை : வட கொரியா.**
19. **சார்க்** (SAARC) வேளாண் தகவல் மையம் துவங்கிய ஆண்டு _____________
**விடை :** 1988.
20. **பெனிலக்ஸ்** ( BENELUX) என்பது இதன் வடிவமாகும் _______________
**விடை : சுங்கவரி ஒன்றியம்.**

1. **பணமதிப்பு குறைப்பு பற்றி குறிப்பு வரைக.**
**பணமதிப்பு குறைப்பு (செலாவணி மதிப்பு குறைப்பு)**
• மற்ற நாடுகளின் பண மதிப்பில் தனது நாட்டின் பண மதிப்பை குறைத்து மையவங்கி நிர்ணயம் செய்வதாகும்.
• தனது நாட்டின் பணத்தை மற்ற நாடுகளின் பணமாக மாற்றும் வீதத்தை குறைத்து மையவங்கி நிர்ணயம் செய்யும்.
• இது ஏற்றுமதியை அதிகரித்து இறக்குமதியை குறைக்கும்.
• இது ஏற்றுமதி பண்டங்களின் விலையை குறைக்கும். இறமதிப் பண்டங்களின் விலையை அதிகரிக்கும்.
• 1947 க்கு பின் மூன்று முறை இந்திய ரூபாயின் மதிப்பு குறைக்கப்பட்டுள்ளது.
2. **செலாவணி கட்டுப்பாடு(Exchange Control) என்றால் என்ன?**
• அந்நியச் செலாவணி சந்தையில் அரசு தலையிடுவதே செலாவணி கட்டுப்பாடு,
• அந்நியச் செலாவணி ஈட்டுதலும், இருப்பு வைத்தலும் மையவங்கியின் முழு கட்டுப்பாட்டில் இருக்கும்.
3. **வெளிநாட்டு நேரடி மூலதனம் (FDI) என்றால் என்ன**?
• ஒரு நாட்டில் மற்றொரு நாட்டு மக்கள் சொத்தை வாங்கி அதன் மேலாண்மையை தனது கட்டுப்பாட்டில் வைத்துக்க கொள்ள செய்யப்படும் முதலீடாகும். **உதாரணம்:** • வெளிநாட்டில் இரும்பு உருக்காலையை வாங்குதல்.
• அயல் நாட்டில் முழு தனி உரிமையுடன் புதிய நிறுவனத்தை தொடங்குதல்.
4. **அயல் நாட்டு நிதி மூலதனம் (FPI) என்றால் என்ன?**
• ஒரு நாட்டு மக்கள் மற்றொரு நாட்டின் நிறுவன பங்குகள், கடன் பத்திரங்களை வாங்கி விற்பதன் மூலம் முன் பேர வணகத்தில் ஈடுபட முதலீடு செய்வதை குறிக்கும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**பாடம் .9. நிதிப் பொருளியல்**

1. தற்கால நவீன அரசு எனப்படுவது _____________
   **விடை : நலம் பேணும் அரசு.**
2. கீழ் வருவனவற்றுள் தனியார் நிதியின் பண்புகளில் இல்லாதது _____________
   **விடை : விளம்பரப்படுத்துதல்.**
3. வரி கீழ்காணும் குணங்களை கொண்டது ___________
   **விடை : மேல் கூறப்பட்ட அனைத்தும்.**
4. கீழே உள்ள வாக்கியங்களைக் கருத்தில் கொண்டு சரியான ஒன்றை அடையாம் காண்க ______________
   **விடை : (ii) மட்டும்.**
5. GST இதற்கு சமம் _____________
   **விடை: விற்பனை வரி.**
6. இந்த நன்மையை நேர்முகவரி கொண்டிருக்கவில்லை _______________
   **விடை : வசதி.**
7. கீழ்வருவனவற்றுள் எது நேர்முக வரி ______________
   **விடை : வருமானவரி.**
8. ஆடம் ஸ்மித்தால் கூறப்படாத புனித வரிவிதிப்பு விதி எது ______________
   **விடை : எளிமை விதி (Canon of Simplicity).**
9. கிழே உள்ளவற்றில் எந்த வரி மைய அரசின் பட்டியலில் இல்லை ______________
   **விடை : வேளாண்மை வருமான வரி.**
10. அரசின் வருவாய் வரவு கணக்கில் சேராதது _____________
   **விடை : சொத்தில் இருந்து கிடைக்கும் வாரம்.**
11. வருவாய் செலவு, வருவாய் வரவைவிட அதிகமாக இருந்தால் அது ______________
   **விடை : வருவாய் பற்றாக்குறை.**
12. மொத்த செலவு கடன் அல்லாத மொத்த வருவாயை விட அதிகமாக இருந்தால் அது ______________
   **விடை : நிதி பற்றாக்குறை.**
13. பற்றாக்குறை நிதியாக்கத்தின் அடிப்படை நோக்கமாவது ____________
   **விடை : பொருளாதார முன்னேற்றம்.**
14. பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம் என்பதன் பொருளாவது ___________
   **விடை : அரசின் மொத்த செலவு மொத்த வருவாயைவிட அதிகம்.**
15. பொதுக் கடனைத் திருப்பிச் செலுத்தும் முறை _________________
   **விடை : இவை அனைத்தும்.**
16. பொதுக் கடனை மாற்றுதல் என்பது _______________
   **விடை : அதிக வட்டி வீதம் கொண்ட கடன் பத்திரங்களுக்கு பதிலாக குறைவான வட்டி வீதம் கொண்ட கடன் பத்திரங்களை கொடுத்தல்.**
17. கீழே கொடுக்கப்பட்டவற்றில் எது இந்தியாவில் பெரிய பற்றாக்குறையாக இருக்கும் ____________
   **விடை : நிதிப் பற்றாக்குறை.**
18. பட்ஜெட் என்ற பதம் ஃப்ரென்ஞ்ச் வார்த்தையாகிய போஜட்(Bougette) லிருந்து பெறப்பட்டது அதன் பொருள்_______
   **விடை : சிறிய பை.**
19. நிதிக் குழு நிர்ணயம் செய்வது _______________
   **விடை : நிதி வளங்களை மாநில அரசுக்கு மாற்றுதல்.**
20. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் எது, அல்லது எவை சரியான சொற்றொடர் எனக் கண்டுபிடி ____________
   **விடை : இரண்டும்.**

1. **<u>பொதுசெலவு என்பதன் பொருள் யாது</u>?**
   <u>**பொது செலவு**</u>: மக்களின் சமூகத் தேவைகளை நிறைவு செய்ய மத்திய – மாநில மற்றும் உள்ளாட்சி அரசுகள் மேற்கொள்ளும் செலவுகளாகும்.
2. **<u>வரவு செலவு திட்டம் என்றால் என்ன?</u>**
   • எதிர் நோக்குகின்ற நிதி ஆண்டிற்கான அரசின் மதிப்பிடப்பட்ட வருமானம், செலவு ஆகியவற்றை காட்டும் அறிக்கை.
   • முதல் நிலையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுவருவாய், பொது செலவு திட்டத்தை உள்ளடக்கிய ஆவணம்.
3. **<u>மறைமுக வரியின் தீமைகள் யாவை?</u>**
   **<u>மறைமுக வரியின் தீமைகள்</u>**
   • வசூலிப்பதற்கான செலவு அதிகம்.
   • நெகிழ்வுத் தன்மை குறைவு.
   • சமூக நீதியற்ற தேய்வீத தன்மை கொண்டது.
   • வருவாய் வசூலில் உறுதியற்றது.
   • மக்களிடம் குடிமை உணர்வை உருவாக்காது.
4. **<u>நேர்முக வரியின் நன்மைகள் யாவை?</u>**
   **<u>நேர்முக வரிகளின் நன்மைகள்</u>**
   • **<u>சமத்துவம்:</u>** நேர்முக வரிகள் வளர்வீதம் கொண்டவை வரி அடிப்படைகளை பொருத்து வரிவீதம் மாறும்.
   • **<u>நிச்சயத் தன்மை:</u>** வரி எங்கு எப்போது செலுத்த வேண்டும் என்ற நிச்சயத் தன்மையை உறுதி செய்கிறது.
   • **<u>நெகிழும் தன்மை:</u>** நேர்முக வரிகள் நெகிழும் தன்மை மிக்கவை, அரசின் வருவாயை அதிகரிக்கும்.
   • **<u>சிக்கனம்:</u>** வரி செலுத்துபவர்கள் நேரடியாக செலுத்துவதால் வசூலிப்பதற்கான செலவு குறைவாக இருக்கும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**பாடம் . 10. சுற்றுச்சூழல் பொருளியல்**

1. என்வைரான்மென்ட் *(Environment)* என்ற வார்த்தை ___________ என்ற பொருள் கொள்ளும் எந்த பிரஞ்ச் வார்த்தையில் இருந்து தோன்றியது.
**விடை : என்வைரோனியா.**
2. உயிர்சார் (Biotic) என்ற வார்த்தையின் பொருள் என்ன ______________
**விடை : உயிர் வாழ்வன.**
3. சூழலியல் என்பது எந்த ஒன்றின் சிறிய பகுதி ________________
**விடை : பையொஸ்பியர்.**
4. பொருள்சார் சமநிலை அணுகுமுறையை நிறுவியவர் ____________ மற்றும் ___________.
**விடை : ஆலன் நீஸ் மற்றும் ஆர்.வி. அய்யர்ஸ்.**
5. சுற்றுச்சூழல் பொருட்கள் என்பவை ________________
**விடை : சந்தையிடா பொருட்கள். (அங்காடியிடா பண்டங்கள்)**
6. தூய பொதுப் பொருட்களின் நுகர்ச்சி என்பது ____________
**விடை : போட்டியற்றது.**
7. சுற்றுச்சூழல் பொருளியலின் அடிப்படை கருத்துகளில் ஒன்றும் சந்தை தோல்விக்கு காரணமானதும் _____ ஆகும்.
**விடை : எதிர்மறை புற விளைவுகள்.**
8. வெளிப் புற காற்று மாசுவுக்கு _______________ காரணமாகும்.
**விடை : மோட்டார் வாகனங்கள்.**
9. கார்பன் மோனாக்சைட் அதிகமாவதில் பங்களிப்பைச் செய்வது _____________
**விடை : மோட்டார் வாகனங்கள்.**
10. பின்வரும் எது உலக வெப்பமயமாதலுக்கு காரணம் ________________
**விடை : வெப்பநிலை அதிகரித்தல்.**
11. பின்வரும் எந்த ஒன்று புற ஊதாக் கதிர்களிலிருந்து மனிதர்களை பாதுகாக்கிறது ____________
**விடை : ஓசோன் படலம்.**
12. உலக வெப்பமயமாதல் __________ என்றும் குறிப்பிடப்படுகிறது
**விடை : பருவநிலை மாறுபாடு.**
13. பின்வரும் எந்த ஒன்று உலக வெப்பமயமாதலின் எதிர்பார்க்கப்படும் விளைவு _____________
**விடை : கடல் மட்டம் உயர்தல்.**
14. சத்துக்களை அதிகப்படுத்தும் செயல் எப்படி அழைக்கப்படுகிறது ________________
**விடை : யூட்ரோபிகேசன்.**
15. மண் மாசுவிற்கு முதல்நிலை காரணம் ______________
**விடை : இரசாயன உரங்கள்.**
16. வன அழிவிற்கான முதன்மை காரணம் யாது? ___________
**விடை : மரம் வெட்டும் தொழில்.**
17. மின்னணுக் கழிவுகள் ____________ என்று பொதுவாக குறிப்பிடப்படுகிறது.
**விடை : இ –கழிவுகள்.**
18. அமிலமழை ____________ வின் விளைவுகளில் ஒன்றாகும்.
**விடை : காற்று மாசு.**
19. நீடித்த வளர்ச்சி அல்லது வளம்குன்றா வளர்ச்சிக் குறிக்கோள்களை அடைய விதிக்கப்பட்டிருக்கும் காலம் ________
**விடை : 2030.**
20. கார நிலம் அதிகமாக காணப்படும் சமவெளி எது ___________
**விடை : மேற்கூறிய அனைத்தும்.**

1. **நீர் மாசுபடுதல் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?**

**நீர் மாசுபடுதல்:**

- உயிரினங்களுக்கு தீங்கு விளைவிக்க கூடிய இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் காரணிகள் நீரில் நேரடியாக அல்லது மறைமுகமாக கலக்கப்படும் நிகழ்வு.
- நீரின் தன்மை இயல்பில் இருந்து மாறுபட்டு நச்சு தன்மையுடன் இருக்கும்.

**நீர் மாசுபடுதலின் வகைகள்:**

- **மேற்பரப்பு நீர் மாசுபடுதல்:**
- நிலத்தின் மேற்பரப்பில் இருக்கின்ற ஆறு, குளம், கடல்களில் தீங்கு விளைவிக்க கூடிய அசுத்தங்கள் கலப்பது.
- **நிலத்தடி நீர் மாசுபடுதல்:** புவியின் மேற்பரப்பிற்கு அடியில் உள்ள நீரில் நச்சு தன்மை உடைய பொருட்கள் கலப்பது.
- **நுண்ணுயிரியால் மாசுபாடு:** தீங்கு விளைவிக்க கூடிய வைரஸ், பாக்டீரியா மற்றும் பிற நுண்ணுயிரிகள் நீரில் கலந்து நீரின் தன்மையை அழிப்பது.
- **ஆக்சிஜன் குறைபாடு மாசுபடுதல்:** நீரில் ஆக்சிஜன் குறைவதால் அல்லது இல்லாமல் போவதால் நீர் வாழ் உயிரினங்கள் இறந்து ஆபத்தான நுண்கிருமிகள் வளரும் நிகழ்வு.

2. **மாசுபடுதல் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?**

**மாசுபடுதல்**

இயற்கை சூழலில் தீங்கு விளைவிக்க கூடிய திட, திரவ, மற்றும் வாயு வடிவ அசுத்தங்கள் கலப்பதலே மாசுபடுதல்.

**மாசுபடுதலின் வகைகள்**

- காற்று மாசுபடுதல்.
- நீர்மாசுபடுதல்.
- மண் மாசுபடுதல்.
- ஒலி மாசுபடுதல்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**பாடம் .11. பொருளாதார மேம்பாடு மற்றும் திட்டமிடல்**

1. வளர்ச்சியுடன் கூடிய மறுபகிர்வு கீழ் கண்ட எந்த அணுகுமுறையின் புகழ் பெற்ற முழக்கம் _________
   **விடை : புதிய பொதுநல அணுகுமுறை.**
2. பின் வருவனவற்றுள் பொருளாதார வளர்ச்சியின் தன்மை இல்லாதது எது? ___________
   **விடை : விரிவானக் கருத்து.**
3. கீழ் கண்டவற்றுள் எவை பின்தங்கிய நாடுகளின் பண்புகளில் ஒன்றாகும் _________
   **விடை : வறுமையின் நச்சு சுழற்சி.**
4. கீழ் கண்டவற்றுள் எந்த பொருளாதாரம் சாராத காரணி பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கிறது _________
   **விடை : மனித வளங்கள்.**
5. பொருளாதார வளர்ச்சி ________ ஐ அளவிடுகிறது.
   **விடை : உற்பத்தி அதிகரிப்பு.**
6. அளிப்பு பக்கத்திலிருந்து இயங்கும் வறுமையின் நச்சு சுழற்ச்சி படி ஏழை நாடுகள் ஏழையாகவே இருக்கின்றன ஏனென்றால் ____________
   **விடை : அ மற்றும் ஆ.**
7. கீழ் காணும் எந்த திட்டம் வேளாண்மை மற்றும் கிராமப் பொருளாதாரத்தை மையமாகக் கொண்டது ___________
   **விடை : காந்தியத் திட்டம்.**
8. கீழ் கண்ட திட்டங்களை அவை முன்மொழியப்பட்ட ஆண்டின் அடிப்படையில் காலகிரம வரிசைப்படி தொகுத்து விடையை தேர்ந்தெடுக்கவும் ____________
   **விடை : iv), iii), ii), i).**
9. **எம். என் . ராய்** வழங்கியத் திட்டம் கீழ் கண்டவைகளில் எது ___________
   **விடை : மக்கள்** திட்டம்.
10. சுட்டிக்காட்டும் திட்டமிடலை செயல்படுத்திய நாடு ____________
    **விடை : பிரான்ஸ்.**
11. குறுகிய காலத் திட்டத்தின் இன்னொரு பெயர் ____________
    **விடை : கட்டுப்படுத்தும் திட்டம்.**
12. நீண்ட காலத் திட்டத்தின் மற்றொரு பெயர் _____________
    **விடை : முன்னோக்கு திட்டம்.**
13. நீண்ட காலத் திட்டமிடலின் அடிப்படைக் கருத்து நாட்டின் ___________ மாற்றமாகும்.
    **விடை: கட்டமைப்பு.**
14. சர்வோதயத் திட்டத்தை முன்மொழிந்தவர் யார் _________
    **விடை : ஜெயப்பிரகாஷ் நாராயணன்.**
15. இந்தியாவில் திட்டக் குழு அமைக்கப்பட்ட ஆண்டு _____________
    **விடை : 1950.**
16. அடிமைத்தனத்தின் பாதை என்ற புத்தகத்தை எழுதியவர் __________
    **விடை : பிரடெரிக் ஹேயக்**
17. முன்னோக்குத் திட்டத்தின் மற்றொரு பெயர் __________
    **விடை : நீண்ட காலத் திட்டமிடல்.**
18. நிதி ஆயோக் கீழ் கண்ட எதன் மூலமாக அமைக்கப்பட்டது ___________
    **விடை : அமைச்சரவைத் தீர்மாணம்.**
19. நிதி ஆயோக்கின் சரியான ஆங்கில விரிவாக்கம் ___________
    **விடை : National Institution for Transforming India.** *(இந்தியாவை உருமாற்றம் செய்வதற்கான தேசிய நிறுவனம்)*
20. சட்டபூர்வமாக நிதி ஆயோக்கின் தலைவராக கீழ்கண்ட எந்தப் பதவியில் உள்ள ஒருவர் செயல்படுகிறார் _______
    **விடை : பிரதமர்.**

1. **வளர்ச்சி குன்றிய பொருளாதாரம் என்பதன் பொருள் யாது?**
   **வளர்ச்சி குன்றிய பொருளாதாரம்:** அதிக மக்கள் தொகை, குறைவான உற்பத்தி, குறைவான தாலாவருமானம், பரவலான வறுமை, அதிக வேலையின்மை, குறைவான மூலதன ஆக்கம், வேளாண்மையை சார்ந்து இருத்தல் ஆகிய பண்புகளை பெற்ற நாடுகளாகும்.
2. **விற்பனைக்குரிய உபரி குறிப்பு வரைக.**
   **விற்பனைக்குரிய உபரி:** • வேளாண் துறையில் குடும்பத்தின் சுய நுகர்வுத் தேவையை விட கூடுதலாக செய்யப்படும் உற்பத்தி. • இது உழவர்களின் வாங்கும் திறனை அதிகரிக்கும்.
   • நாட்டின் பொருள் உற்பத்தியை அதிகரித்து வேலைவாய்ப்பை அதிகரிக்கச் செய்யும்.
   • நாட்டு வருமானத்தை உயர்த்தி பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும்.
3. **மூலதன ஆக்கம் (உருவாக்கம்) என்றால் என்ன?**
   **மூலதன ஆக்கம் ( உருவாக்கம்):** • ஏற்கனவே உள்ள மூலதன இருப்புடன் தற்போது கூடிய நிகர அளவு மூலதனம்.
   • நாட்டில் இருக்கும் மூலதனத்தில் புதிதாக நடப்பு ஆண்டில் சேர்ந்த மூலதனம்.
4. **மனித மூலதனம் ஆக்கம் என்றால் என்ன?**
   • மக்களின் அறிவு, திறன், உற்பத்தி செய்யும் தகுதி மற்றும் திறமைகளை அதிகரிக்கச் செய்தலே மனித மூலதன ஆக்கம்.
5. **மனித முலதனம் என்றால் என்ன?**
   • மக்களை அதிக உற்பத்தி திறன் கொண்டவர்களாக உருவாக்கும் கல்வியும், பயிற்சியும் மனித மூலதனமாகும்.
   • கல்வியறிவுள்ள, உடல் நலம் மிக்க, உற்பத்தி திறனுடைய திறமையான தொழிலாளர்கள் சொத்துகளாக கருதப்படுவர்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**பாடம் .12. புள்ளியல் முறைகள் மற்றும் பொருளாதார அளவையியல் ஓர் அறிமுகம்**

1. **ஸ்டாட்டிஸ்டிக்ஸ் (Statistics)** என்ற வார்த்தை ____________ ஆகும்.
   **விடை : ஒருமை மற்றும் பன்மை.**
2. புள்ளியியல் எண் விவரங்களை பற்றி படிக்கும் பயன்பாட்டுக் கணித்தின் ஒரு சிறப்பு பகுதி என்று கூறியவர் ________
   **விடை : போடிங்ட்டன்.**
3. இரண்டாம்நிலை புள்ளி விவரங்களுக்கான ஆதாரம் __________
   **விடை : அ மற்றும் ஆ.**
4. கேள்வித்தாள் மூலம் புள்ளிவிவரம் திரட்டப்பட்டால் அது ____________
   **விடை : முதல்நிலை விவரம்.**
5. நேர்கோட்டு உறவினை கொண்டிருக்கும் இரு மாறிகளின் உறவின் அளவை அளக்கும் முறைக்கு ______என்று பெயர்
   **விடை : உடன் தொடர்புக் கெழு. (Correlation coefficient)**
6. X மற்றும் Y மாறிகள் இரண்டும் ஒரே திசையில் மாறினால் உடன் தொடர்புக் கெழு எவ்வாறு இருக்கும் __________
   **விடை: நேர்மறையாக.**
7. ஒரு சிதறல் விளக்கப்படத்தில் ஒரு மாறி அதிகரித்துச் செல்லும் போது மற்றொரு மாறி குறைந்து சென்றால் உடன் தொடர்புக் கெழுவின் அளவு எவ்வாறு இருக்கும் __________
   **விடை : எதிர்மறையாக.**
8. உடன் தொடர்புக் கெழு(**Correlation coefficient**) y – ன் அளவு எந்த எல்லைக்குள் இருக்கும் _______
   **விடை : –1 மற்றும் 1.**
9. ஒட்டுறவு (**Regression**) என்ற கருத்தினை முதன் முதலில் பயன்படுத்தியவர் ______________
   **விடை : கால்டன்.**
10. ஒட்டுறவு பகுப்பாய்வின் நோக்கம் (**Purpose of Simple Linear Regression**) _______________
    **விடை : ஒரு காரணியின் மதிப்பைக் கொண்டு அடுத்த காரணியின் மதிப்பினை கண்டறிவது.**
11. சார்பு மாறியின் மதிப்பை மதிப்பீடு செய்வதற்காக சாரா மாறிகளை பயன்படுத்தும் செயலுக்கு ________என்று பெயர்.
    **விடை : ஒட்டுறவு (Regression).**
12. $Y = 2 - 0.2X$ எனில் $Y$ அச்சுவெட்டு __________ ஆகும்.
    **விடை: 2.**
13. $Y = \beta_0 + \beta_1 x$ என்ற ஒட்டுறவு சமன்பாட்டில் $x$ என்பது ____________
    **விடை: சாரா மாறி.**
14. பொருளாதார அளவையியல் என்பது எதன் இணைப்பு ______________.
    **விடை : பொருளியல், கணிதம் மற்றும் புள்ளியியல்.**
15. $Y = \beta_0 + \beta_1 x$ என்ற ஒட்டுறவு சமன்பாட்டில் $Y$ என்பது_________
    **விடை: சார்பு மாறி.**
16. பொருளாதார அளவையியல் என்ற வார்த்தையை உருவாக்கியவர் ______________
    **விடை : ராக்னர் ∴பிரிஸ்க்.**
17. பொருளாதார அளவையியலுக்கான மூலப்பொருள் __________
    **விடை : புள்ளிவிவரம்.**
18. U என்பது (The term U in Regression equation is) ________________
    **விடை: பிழைக் கருத்து.**
19. U என்பது எதைக் குறிக்கிறது (The term U in introduced for the representation of) ________________
    **விடை: விடுப்பட்ட காரணிகள்.**
20. பொருளாதார அளவையியல் என்பது எத்தனை பாடங்களின் இணைப்பு ______________
    **விடை : 3 (மூன்று) பாடங்கள்.**

1. **இரண்டாம் நிலை புள்ளி விவரங்கள் என்றால் என்ன?**

   **இரண்டாம் நிலை விவரங்கள்:**
   - குறிப்பிட்ட நோக்கத்திற்காக மற்றொருவர் ஏற்கனவே சேகரித்து வைத்திருக்கும் விவரங்களை பெறுதல்.
   - இது வெளியிடப்பட்ட – வெளியிடப்படாத ஆதாரங்களாக இருக்கும்.
   - **உதாரணம்:** இந்திய ரிசர்வ் வங்கியின் அறிக்கைகள். மக்கள் தொகை கணக்கெடுப்பு பதிவேடுகள்.
2. **முதல் நிலை புள்ளி விவரம் என்றால் என்ன?**

   **முதல் நிலை புள்ளி விவரம்:**
   - குறிப்பிட்ட நோக்கத்திற்காக முதன் முறையாக விவர சேகரிப்பாளரால் அல்லது அவரது முகவரால் நேரடியாக திரட்டப்படும் புள்ளிவிவரங்கள்.
   - முழுதொகுப்பிடம் அல்லது கூறுகளிடம் இருந்து நேரடியாக விவரங்கள் சேகரிக்கப்படும்.
   - உதாரணம்: வினாத்தாள் மூலம் விவரங்கள் சேகரிக்கப்டுதல்.
3. **உடன் தொடர்பின் (Correlation) குறைபாடுகள் யாவை?**
   - மேற்கணக்கீட்டிற்கு அதிகம் பயன்படாது.
   - நேர்கோட்டு தொடர்பை மட்டும் ஆய்வு செய்கிறது.
   - இதன் பயன்பாடு வரையறை உடையது.
   - போலி உடன் தொடர்பு ஏற்படும்.
   - மாறிகளின் காரண விளைவை ஆய்வு செய்வதில்லை.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com